www.padippakam.com


# தொழிலாளர் பாதை

2:-

பின்வரும் இதழ்களிலிருந்து தொகுக்கப்பட்ட கட்டுரைகள்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இலங்கை இதழ்கள்.. 135 யூன் 11.93.,434 மே 28.93.,433 ஏப்ரல் 16.93

சோசலிசத் தொழிலாளர் கழகம் இந்தியா இதழ். 58 ஏப்ரல் 93.

தொகுப்புப் பிரதி இலக்கம்.8 யூலை 1993.


RUE DE COLOMBES
92600 ASNIERES SUR
SEINE ; FRANCE

25

அனைத்துலகக் குழுவின் தலைமையிலான
நான்காம் அகிலத்தின்
இலங்கைக் கிளையான
புரட்சிக் கம்யூனிஸ்ட்
கழகத்தின்
25 வது ஆண்டு நிறைவு
1968 – 1993



ஆண்டு நிறைவுக் கூட்டம்
1993 ஜுன் 27
கொழும்பு பொதுநூலக
கேட்போர் கூடம்
கண்காட்சி: காலை 10 மணி

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
இளம் சோசலிஸ்டுகள்

# புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக 25வது ஆண்டு நிறைவுக் கூட்டத்தில் பங்கெடுங்கள்!

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் 25வது ஆண்டு நிறைவையொட்டி 1993 ஜூன் 27ம் திகதி கொழும்பு பொதுநூல் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ள கூட்டத்திலும் கண்காட்சியிலும் வர்க்க நனவுள்ள தொழிலாளர்கள், ஒடுக்கப்படுவோர், இளைஞர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், அனைத்துலகக் குழுவின் தலைலையிலான நான்காம் அகிலத்தின் இலங்கைக் கிளையாகும். உலகத் தொழிலாளி வர்க்கத்தின் ட்றொட்ஸ்கிச முன்னணிப் படை அணிதிரண்டுள்ள அனைத்துலகக் குழுவின் சகல கிளைகளுக்கும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வேளையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் புரட்சிகர வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாக இலங்கை, தமிழீழம் உட்பட அனைத்து இந்திய, துணைக் கண்டப் பிராந்தியத்திலும் ஏகாதிபத்தியத்தையும், ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ வர்க்கத்தையும் தூக்கி வீசி, கோடானுகோடி தொழிலாள — ஒடுக்கப்படும் மக்கள் சோசலிசப் புரட்சிக்கான வெற்றியை ஈட்டிக்கொள்ள அவசியப்படும் புரட்சித் தலைமையை கட்டியெழுப்பும் பணியில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் அதன் இந்தியத் தோழமை இயக்கமான சோசலிசத் தொழிலாளர் கழகமும் ஈடுபட்டுள்ளன. இந்த 25 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் பு. க. க. அந்தத் தலைமையைக் கட்டியெழுப்

(9ம் பக்கம் பார்க்க)



Ludwig Niethammer.

# ஜேர்மனிய ட்றொட்ஸ்கிச தலைவருக்கெதிரான பாசிச கொலைத்தாக்குதலை கண்டனம்செய்

மே 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஜேர்மனிய பிரண்ட் சோசலிஸ்ட் ஆபயிடர் (பி எஸ்.ஏ.) அமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவரான லுட்விக் நீத்தாமர் மொட்டைத் தலை குண்டனால் பயங்கரமாகத் தாக்கப்பட்டார். பிரண்ட் சோசலிஸ்ட் ஆபயிடர் நான்காம் அகிலத்தின் ஜேர்மனியக் கிளையாகும்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்தப் பாசிசச் கொலைத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றது. இக் கொலைத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதன் மூலம் தமது அனைத்துலக தோழமையை வெளிப்படுத்துமாறு நான்காம் அகிலத்தின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், இலங்கைத் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை வேண்டுகின்றது.

தனது மனைவி, இரு உறவினர் சகிதம் லுட்விக் நீத்தாமர் ஸ்டுட்கார்ட் நகர மண்டபத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டிருந்த வேளையில்; அவரை பீ. எஸ். ஏ. முக்கிய அங்கத்தவரென நன்கு இனம் கண்ட கொலைகார குண்டன் எதிர்பாராத விதத்திலும் எதுவித எச்சரிக்கையும் செய்யாமலும் எக்காரணமுமின்றி கீழே தள்ளி தாக்கியுள்ளான். தலையில் பலத்த காயம் விளைவித்தது. அத்தாக்குதல் எத்துணை கொடியது என்று பார்ப்பின்; அவரைப் பரீட்சித்த வைத்தியரின் வாக்குமூலம், நிக்கல் ஒடு அல்லது கூரிய ஆயுதம் ஒன்று தாக்குதலுக்கு பயன்படுத்த பட்டது என நினைக்கத் தோன்றுகின்றது என்று குறிப்பிட்டதில் இருந்து தெரிகின்றது.

கன்ன எலும்பு முறிந்து கண் இமைகள் தெறித்துள்ளன. அவரின் முகத்தின் வலது பாகம் இயங்க துள்ளது. அத்துடன் வலது கன்னம் முறிந்துள்ளதால் தையல் போடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இடது பக்கமாக மேலும் சில சென்டி மீற்றர் ஆழமாக தாக்குதல் இடம் பெற்றிருப்பின் உயிராபத்தான நிலை ஏற்பட்டிருக்கக் கூடுமென வைத்தியர் அறிக்கை மேலும் உறுதி செய்துள்ளது.

லுட்விக் நீத்தாமர் 20வருட காலமாக பீ. எஸ். ஏ. அங்கத்தவராக விளங்குவதுடன், 1989ல் மத்திய குழு உறுப்பினராகவும் தெரியப்பட்டார். ஸ்டுட்காட்டில் இருந்து நாடு பூராவும் அவரது அரசியல் நடவடிக்கைகள் பிரபலமடைந்திருந்தது. 1989ல் ஐரோப்பிய தேர்தலிலும் 1990ல்ஜேர்மன் பொதுத் தேர்தலிலும் பீ.எஸ்.ஏ. அபேட்சகராக நின்றார். அதற்கு முன்னர் மாகாண தேர்தல்களில் வடரையின்வெஸ்ட் பகுதி பீ.எஸ்.ஏ. அமைப்பு சார்பாக போட்டியிட்டார்.

குண்டனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பொலிசார் முயற்சிக்கவில்லை என்பதற்கு போதிய சான்றுகள் உண்டு. சேவையில் ஈடுபட்டிருந்த முகாமையாளர் குண்டனின் பெயர் ஒலிவர் வென்டேல் என பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் கூறியிருந்த போதிலும் அவனைக் கைது செய்யவோ அல்லது விசாரிக்கவோ பொலிசார் முயற்சிக்கவில்லை. பீஎஸ்.ஏ தேசிய: செயலாளர் உல்ரிக் ரிபேட் கடும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்திய போது, இச்சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டிய இரு திணைக்களங்களுடன் நகர மத்திய மாகாண திணைக்களங்களும், அதை தட்டிக் கழிக்க முனைந்தன. மிகச் சூடான வாக்குவாதத்தின் பின்னரே புதிய குற்றச்சாட்டை பதிய இணங்கினர். தாக்குதலின் அரசியல் ரீதியான பண்பினை உல்ரிக் ரிபேட் விளக்கி கூறினும, இந்த குற்றத்துக்கு எதிராக ''கொலை முயற்சி'' குற்றச்சாட்டை பதிவு செய்ய பொலிசார் மறுத்துள்ளனர்

நீத்தாமருக்கு எதிரான தாக்குதல் Sollingen இல் குண்டுத் தாக்குதல் நடத்தியதற்கு 24 மணித்தியாலங்களின் பின்னர் நிகழ்ந்துள்ளது. அது புதிய மட்டத்திலான இனவாத தாக்குதல்களுக்கு தூண்டுதலாய் அமைந்ததுடன், பாசிச குழுக்களுக்கு பலவழிகளிலும் துணை போயுள்ளது. Sollingen குண்டுத் தாக்குதலினால் 5 துருக்கிய குடிபெயர்ந்த அகதிப் பெண்கள் வீடுகளுக்குள்ளேயே நசுங்குண்டு மாண்டனர்: குடிபெயர்ந்த தொழிலாளர்களும் துருக்கிய ஜேர்மன் தொழிலாளர்களும் புதிய இனவாத நாசிச நடவடிக்கைக்கு எதிராக ஊர்வலம் சென்று எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஜெர்மனியில் மோசமடைந்து வரும் ஏகாதிபத்திய நெருக்கடிக்குள் நாசிகளது இயக்கம் மீண்டும் தலைதூக்க முயல்கின்றது. சான்சலர் கெல்முட் கோலின் அரசாங்கம் குடிபெயரும் அகதிகளை நாட்டுக்குள் நுழையவிடாது தடுக்கும் சட்ட விதிகளை கொண்டுவருவதன் மூலம் இந்த பிற்போக்கு சக்திகளை மேலும் பலம்படுத்தி வருகின்றது. அண்மையில் ஒன்றி

(2ம் பக்கம் பார்க்க)

வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!

படிப்பகம்

www.padippakam.com



# இனவாத வேட்டைக்கு முற்றுப்புள்ளி வை!

மே மாதம் கடைப் பகுதியில் இருந்து கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிராக ஆரம்பமான பொலிசாரினதும், இராணுவத்தினதும் புதிய மட்டத்திலான 'தேடுதல் வேட்டைகள்' தொடர்ந்தும் இடம் பெற்று வருவதோடு, அவை ஏனைய பாகங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் அறிகுறிகள் தென்படுகின்றன.

இம்மாத முற்பகுதியில் இ.தொ.கா தலைவர் எஸ்.தொண்டமானதும் மற்றும் தமிழ் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ அமைப்புக்களின் தலைவர்களதும் 'ஆட்சேபங்களுக்கு' இடையேயும் இந்த இனவாத ஆக்கிரமூட்டும வேட்டைகள் தொடரும் என்பதை பொலிசார் உறுதியளித்துள்ளனர். ''...கொழும்பு பிரதி பொலிஸ் மா அதிபர். ஏ. எஸ் செனவிரத்னவின் நெறிப்படுத்தலின் கீழ் விடுதலைப் புலிகள் சந்தேக நபர்களுக்காகப் பரந்த பல நாட்களாக தேடுதல் இடம் பெற்று வருவதோடு, அது தொடர்ந்தும் இடம்பெறும், நகரப் பொலிசார் நீர்கொழும்பு, களனி போன்ற கொழும்புக்கு வெளியேயான பிரதேசங்களைச் சேர்ந்த பொலிஸ் நிலையங்களின் பொலிசாரின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதோடு அங்கு தேடுதல்களை அவர்களாகவே மேற்கொண்டுள்ளார்கள்''. (சன்டே டைம்ஸ் — 6 ஜூன் 1993)

கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கானோர் மனித சஞ்சாரத்துக்கு எதுவித இலாயக்கும் இல்லாத பொலிஸ் நிலையக் கூடுகளில் 'கிரிமினல்' களுடன் ஒன்றாகத் தள்ளப்பட்டுள்ளதோடு சிலர் வெலிக்கடைச் சிறைக்கும் அனுப்பப்பட்டு வருகின்றனர். இந்தத் தேடுதல்களும் கைதுகளும நடுத்தெரு தொடக்கம் நடுவீடு வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளதோடு ஆயுதப் படையினரின் நடுச்சாமப் பாய்ச்சல்கள் சர்வ சாதாரணமான ஒரு நிகழ்ச்சியாகி உள்ளது.

அரசியல்வாதிகளைக் கொலை செய்யும் இலக்கில் கொழும்பில் ஊடுருவிக் கொண்டுள்ள 'தற்கொலைப் படையினரை' தேடுவதாகக் கூறி ஆரம்பமான இந்தத் தேடுதல்களுக்கு பல தலைமுறையாக கொழும்பில் வசிப்போர், அரசாங்க, தனியார் துறை அதிகாரிகள், ஹோட்டல் ஊழியர்கள், முதியவர்கள், இளைஞர்கள், மாணவகாள், என்ற சகல தட்டினரும் பலிக்கடாக்களாகியுள்ளனர். கல்கிசையில் 6 மாதக் குழந்தையுடன் கைதுசெய்யப்பட்ட தமிழ் தாயும் மற்றும் பெண் உறவினர்களும் இன்னமும் தெகிவளை பொலிஸ் நிலையக் கூடுகளிலேயே தள்ளப்பட்டுள்ளனர்.

கொழுமபுக்கு 'தற்கொலைப் படை' வந்துள்ளதென்றும் 'சந்தேகத்துக்கிடமான பேர்வழிகள்' பற்றிய தகவல்களை பொலிசாருக்கு வழங்குமாறும் கோரும் அறிக்கைகளை அரசாங்க வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும், மற்றும் முதலாளித்துவப் பத்திரிகைகளும் பல தடலவ வெளியிட்டதன் மூலம் தமிழர் விரோத பதட்ட நிலைமையை நாடு பூராவும் விஸ்தரிக்க முயன்றுள்ளன. இந்த 'தற்கொலைப் படை' பற்றிய கதை எவ்வளவு தூரம் நம்பிக்கை மிக்து என்பதை இந்த யூஎன்பி அரசாங்கத்தின் நீண்டகால அரசியல் சகாக்களான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினரே குறிப்பிட்டுள்ளனர். எமக்கு ஆபத்து தற்கொலைப் படையிடமிருந்தன்றி யூஎன்பி அரசாங்கத்திடமிருந்தே வருகின்றதென ஐ. ஐ. தே. மு. தலைமை குறிப்பிட்டுள்ளதில் இருந்து இது தெளிவாகின்றது.

இனவாத யுக்தத்தின் அசுர கோலத்தின் காரணமாக பட்டினி, நோய் முதலியவற்றில் இருந்து தப்ப மரணத்தின் நிழலின் கீழ் விரல் விட்டு எண்ணக்கூடிய தமிழ் ஒடுக்கப் படும் மக்கள் கிள வி மரண ரேகை ஊடாகத் தெற்கே வருகின்றார்கள். இரத்தக் களரிக்கு மத்தியில் பிறந்துவளர்ந்த ஒரு இளம் தலைமுறையினர் தென் இலங்கைக்கு வருவது 'பாதுகாப்பின் கருணை'யை நாடி அன்று. பெரும்பாலானோர் வெளிநாடு செல்ல ஏதும் வாய்ப்புக் கிட்டுமா? உற்றார், உறவினருடன் தொடர்பு கொள்ள சந்தர்ப்பம் கிடைக்குமா? என்ற எதிர்பார்ப்புக்களுடனேயே. இது அப்படி ஒன்றும் இரகசியமல்ல. இந்த எதிர்பார்ப்புக்களுடன் வருவோரே நட்டநடுச் சாமங்களில் 'லொட்ஜ்'சுகளிலும், விடுதிகளிலும் 'பயங்கரவாதச் சந்தேக நபர்களாக' அள்ளிச் செல்லப்படுகின்றனர். இந்த விதத்தில் இடைவிடாத இனவாத இம்சைகளுக்கும், மானபங்கங்களுக்கும், அவமானங்களுக்கும் உள்ளாகி வரும் இவர்களுக்கு 'தீவில் வசிக்கும் எந்தவொரு மனிதனும் எந்தவொரு இடத்திலும சுதந்திரமாக சென்று வர இடம் கிடைக்க வேண்டும் என்ற முதலாளிகளதும் அவர்களது இனவாத அரசாங்கத்தினதும் புனித சரத்து தமிழ் ஒடுக்கப்படும் மக்களைப் பொறுத்தமட்டில் செல்லுபடியாகுமா?

பிரேமதாச கொலையுண்டதைத் தொடர்ந்து டிங்கிரி பண்டா விஜேதுங்க ஜனாதிபதி பதவியில் அமர்த்தப்பட்டதும் 'ஜனநாயக' நிலைமை பற்றி இராகமாளிகைகள் இசைத்த 'திவயின' மற்றும் ரணய, யுக்திய, டைப்ஸ் பத்திரிகைகள் உண்மையில் இன்று ஏகாதிபத்தியவாதிகளின் இராகத்துக்கு ஏற்ப பொருளாதாரத்தினை 'திட்டமிடுதல்' நிதிகளை 'ஒழுங்கமைத்தல்' அவசியம் பற்றிப் பேசிவருகின்றன. இந்த இலக்கில் இனவாத யுத்தத்தினை உக்கிரப்படுத்தும் பிரச்சாரத்தினை எவரும் இல்லாத விதத்தில் ஆரம்பிக்கும் அவசியம் இவற்றுக்கு ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி விஜேதுங்க தமது முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இங்கு 'தேசிய இனப்பிரச்சினை'யோ கிடையாது; இருப்பதோ 'பயங்கரவாத' பிரச்சினையே எனக் கூறியதன் மூலம் தமது இனவாத கொலைகார நிலைப்பாட்டைக் காட்டிக் கொண்டுவிட்டார்.

நாம் மீண்டும் மீண்டும் குறிப்பிட்டு வந்தது போல் தமிழர் விரோத இனவாதத் துகளுத் தூபம் போடுவது வடக்கு — கிழக்கில் தமிழ் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களை மட்டுமன்றி தென் மாகாணங்களிக் தொழிலாள — ஒடுககப்படும் மக்களை நசுக்கித் தள்ள ஏகாதிபத்திய காலனித்துவ வேலைத்திட்டத்தினை அமுல் செய்கையில்

(௨௦ம் பக்கம் பார்க்க)

# சு. வ. வலய பக்டரியில் தலை சிதறி தொழிலாளி மரணம்

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் பாதணி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கொரியன் சிலோன் பன்னாட்டுக் கம்பனி ஊழியரான பிரேமலால் ஜயக்கொடி (26 வயது) இயந்திரத்தினுள் அகப்பட்டு, தலை சிதறுண்டு ஸ்தலத்திலேயே மரணமானார். இலாபந் கொள்ளையடிப்பில் ஈடுபட்டுவரும் பன்நாட்டுக் கம்பனிகாரர்களின் மிலேச்ச தொழிலாளர் படுகொலை இது.



பி. ஜயக்கெடி

இச்சம்பவம் கடந்த மே 26ம் திகதி இடம் பெற்றுள்ளது. மாலை 2 — 10 மணி 'சிப்டில்' வேலை செய்து வந்த ஜயக்கொடி, இவர் வழமையாகத் தொழிற்பட்டு வந்த இயந்திரத்தில் இருந்து பழுதடைந்து கிடந்த வேறோர் இயந்திரத்துக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்தே இப் ரிதாப சம்பவம் இடம் பெற்றுள்ளது. இந்த இயந்திர மாற்றத்தினை எதிர்த்த ஜயக்கொடி 'விபத்து நடந்தால் என்ன செய்வது?' என்ற கேள்வியையும் அச்சமயத்தில் மேற்பார்வையாளரிடம் எழுப்பியுள்ளார். 'நஷ்டஈடு கொடுப்போம்' எனக் கூறிய மேற்பார்வையாளர், ஜயக்கொடியின் விருப்பத்துக்கு மாறாகப் பலாத்காரமாகவே இந்த இயந்திரதில் வேலை செய்ய நெருக்கப்பட்டதாக கொரியன் — சிலோன் கம்பனித் தொழிலாளர்கள் 'தொழிலாளர் பாதை' யிடம் தெரிவித்தனர்.

பிரேமலால் ஜயக்கொடி வேலை செய்யத் தொடங்கி 20 நிமிடங்களின் பின்னர் (இரவு 7/30) இந்தப் பழுதடைந்த இயந்திரம் திடீரென தன்பாட்டில் இயங்கத் தொடங்கியதை அடுத்து அதன் 5 தொன் எடை கொண்ட அச்சு தலைமேல் விழுந்ததைத் தொடர்ந்து அவர் தலைசிதறி ஸ்தலத்திலேயே மரணமானார். இந்தப் பரிதாபமான சம்பவம் நடைபெற்ற வேளையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லவும் பக்டரி பூமியில் ஒரு வாகனம் தன்னும் இருக்கவில்லை.

தமது சகோதர தொழிலாளிக்கு நேரிட்ட துன்பகரமான நிகழ்வைக் கண்டு குமுறிப்போன தொழிலாளர்களின் கண்களில் மண் வீசும் பொருட்டு ஜயக்கொடியின் மரணச்சடங்கு செலவை ஏற்பதாகவும் 5 இலட்சம் நஷ்டஈடு செலுத்துவதாகவும் வாயளவில் கூறிய கம்பனி நிர்வாகிகள், 3 நாட்கள் விடுமுறையை அறிவித்து, பக்டரிக்குச் 'சீலிட்டு' மூடினர்.

10 மாதக் குழந்தையின் தந்தையான ஜயக்கொடியின் மனைவியும் இங்கு வேலை செய்த ஒரு தொழிலாளியாவார், அவர் கூறியதாவது: ''ஆஸ்பத்திரிக்கு போன பின்னரே அவர் இறந்தது தெரிய வந்தது. நாம் இயந்திரத்தினைப் பார்க்க வேண்டும் எனக் கேட்டோம். 'மரணத்தையிட்டு எமக்கு சந்தேகம் இருப்பதால் பக்டரிக்கு போய் இயந்திரத்தினைப் பார்க்க வேண்டும்' என நானும் பிரேமலாலின் தந்தையும் கூறினோம்.''

இவர்களை கூட்டிச் சென்ற போதும் 'சீல்' வைக்கப்பட்டிருந்த பக்டரி இயந்திரத்தினை காட்ட நிர்வாகிகள் மறுத்தனர். 'இயந்திரத்தினை காட்ட வேண்டும், இல்லையேல் வாகனத்தின் முன்னால் பாய்ந்து நானும் சாவேன்' என அவர் கூறியதன் பின்னரே நிர்வாகிகள் இயந்திரத்தினைக் காட்டியுள்ளனர்.

இந்தக் கட்டுநாயக்க கொரியன் — சிலோன் கம்பனி, கொரியாவில் தலைமைக் காரியாலயத்தைக் கொண்ட பன்னாட்டுக் கம்பனி. இக்கம்பனியில் 500 ஆண் தொழிலாளர்களும் 1300 பெண் தொழிலாளர்களும் தொழில் புரிகின்றார்கள். இந்தக் கம்பனி காட்டுமிராண்டிச் சுரண்டலுக்கு பேர் போனதோடு ஒரு தொழிலாளியின் சம்பளம் ரூபா 2000/- அல்லது அதற்கு சற்று அதிகமானது. வருகைக்காக வழங்கும் ரூபா 45/-ல் ஒரு நாள் வேலைக்குச் செல்லாவிடில் ரூபா 100/- வெட்டப்படுகின்றது. இரண்டு நாள் போகாது விட்டால் முழுக்கொடுப்பனவுமே வெட்டப்படுகின்றது. 5 நிமிடங்கள் தாமதமாக வேலைக்குச் செல்லும் தொழிலாளிக்கு அரை நாள் சம்பளம் வெட்டப்படுவதாக தொழிலாளர்கள் கூறினர், சில தொழிலாளர்கள் காலையில் இருந்து மாலை வரை தொழில் செய்ய நெருக்கப்படுவதாகத் தெரிய வந்தது. தொழிலாளர்களின் கை கால் விறைப்பு, வலிக்கு சடுதியாக லீவில் செல்ல முடியாது. விடுமுறை பெற்றுக் கொள்ள 5 நாட்கள் முன்கூட்டி அறிவிக்க வேண்டும்.

கைதவறி ஏற்படும் தவறுக்கு தொழிலாளர்கள் மேற்பார்வையாளர்களால் துன்புறுத்தப்படுவதாகத் தொழிலாளர்கள் கூறினர். உரிய இலக்கினை எட்டும் வரை வேலையை முடித்து வெளியேற முடியாது. அத்தோடு நிர்வாகிகள் தினசரி 5 நிமிடங்கள் கூடுதலாக வேலை வாங்குவதாகவும் தொழிலாளர்கள் முறைப்பட்டனர். சமீபத்தில் பக்டரிக்கு 7 புதிய இயந்திரங்கள் தருவிக்கப்பட்டுள்ளன ஆனால் தொழிலாளர்கள் பழைய இயந்திரங்களிலேயே தொடர்ந்துப் வேலை செய்ய வேண்டியுள்ளது. அநேகமாக தொழிலாளர்களின் கைவிரல்களில் காயம் ஏற்படுகின்றது. இறந்த பிரேமலாலின் கைவிரல்கள ஒரு மாதத்துக்கு முன்னர் காயப்பட்டது.

## விபத்தாக்கும் முயற்சி

பிரேமலாவின் மரணத்தை 'திடீர் விபத்து' ஆகவும் 'தற்செயலான நிகழ்வு' ஆகவும் காட்டும் முயற்சியில் இந்த பன்னாட்டுக் கம்பனிகாரர்களும் முதலாளித்துவப் பத்திரிகைகளும் ஈடுபட்டுள்ளன. உண்மையில் இது அப்படி அல்ல. கொரியன் — சிலோன் பன்னாட்டுக் கம்பனியும் யூ. என்பி அரசாங்கமும் இந்த மரணத்துக்குப் பொறுப்புச் சொல்லவேண்டும். அத்தோடு இச்சம்பவம் ஒரு தனிப்பட்ட நிகழ்வு அல்ல. நாட்டுக்கு நாடு பாய்ந்து விழுந்து, தொழிலாளர்களின் உயிர்களை ஒரு செம்புச் சலிக்கும் மதிக்காமல் ஊழியத்தை உறிஞ்சிக் குடிக்கும் காட்டுமிராண்டி இயக்கத்தின் விளைவே இது.

ஹொங்கொங்கில் தலைமைக் காரியாலயத்தினைக் கொண்ட காடர் இன்டஸ்ரியல் கம்பனிக்குச் சொந்தமான தாய்லாந்து பக்டரியில் (மே 10) ஏற்பட்ட தீயில் 200க்கும் அதிகமான தொழிலாளர்கள் வெந்து மரணமா

(20ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

# சுலோட்டரின் தாக்குதலுக்கு அனைத்துலகக் குழு ஆட்சேபம்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பிரித்தானியக் கிளையான இன்டர்நஷனல் கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டு அங்கத்தவர்கள் ஏப்ரல் 2ம் திகதி தொழிலாளர் புரட்சிக் கட்சியின் (WRP) அரசியல் செயலாளர் கிளிவ் சுலோட்டரால் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் பொருட்டு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம்

தொழிலாளர் புரட்சிக் கட்சி
மத்திய குழு,
எசன். 1993 மே 19

தோழர்களே,

'இன்டர்நஷனல் வேர்க்கஸ்' ஆசிரியர் கிறிஸ் மார்ஸ்டன் மீது ஆத்திரமூட்டல் தங்கள் அரசியல் செயலாளர் கிளிப் சுலோட்டர் நடாத்திய தாக்குதலுக்கு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு ஆட்சேபம் தெரிவிக்கின்றது. ஏப்ரல் 2ம் திகதி பார்ண்ஸ்லேயில் நடைபெற்ற ஒரு தொழிலாளர் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் இன்டர்நஷனல் வேர்க்கர் விற்பனை செய்து கொண்டிருந்த வேளையில் மார்ஸ்டன் எதுவித எச்சரிக்கையும் இல்லாமல் பின்னால் இருந்து வந்த சுலோட்டரினால் முகத்தில் குத்தப்பட்டார். ஒரு சில நிமிடங்களின் பின்னர் இன்டர்நஷனல் கம்யூனிஸ்ட் கட்சி (ICP) யின் மற்றோர் அங்கத்தவரான றெபேர்ட் ஸ்கெல்டனும் சுலோட்டரினால் உடல் ரீதியில் தாக்கப்பட்டார். இச் சம்பவங்களைப் பற்றிய முழு அளவிலான அறிக்கை இன்டர்நஷனல் கம்யூனிஸ்ட் கட்சியின அரசியல் குழுவின் அறிக்கை—ஏப்ரல் 17ல் வெளியான இன்டர்நஷனல் வேர்க்கரிலும் நா. அ. அ. கு. வின் சகல பகுதிகளின் பத்திரிகைகளிலும் பிரசுரமாகியது.

அரசியல் எதிரிகள் பீதான உடல்ரீதியிலான தாக்குதல் தொழிலாளர் இயக்கத்தின் மிகவும் அடிப்படையான ஜனநாயக கொள்கைகளுக்கு முற்றிலும் முரணானதும் பாரிய ஆபத்துக்களுக்கு வழிதிறக்கின்றதுமாகும் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள், சுலோட்டரை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்துவது தங்களின் பொறுப்பாகும். நீங்கள் அவ்வண்ணம் செய்ய மறுப்பின் நீங்களும் அவரின் ஆத்திரமூட்டும் பழக்கங்களுக்கு முழுப் பொறுப்பு ஏற்கவேண்டியதோடு அதற்குப் பகிரங்கமாகக் காரணம் காட்டவும் செய்யப்படுவீர்கள்.

ஏப்ரல் 2ம் திகதிய சம்பவங்கள், பிரித்தானியப் பகுதி அங்கத்தவர்களுக்கு எதிரான ஒரு தொகை உடல் ரீதியான ஆத்திரமூட்டல்களின் உச்சக் கட்டம் மட்டுமே. மிகவும் பாரதூர்மானது, லீட்ஸ்ரேட்ஸ் கிளப்புக்கு வெளியே ஒரு ICP அங்கத்தவர் கிளிவ் சுலோட்டரால் 1989 ஜூலையில் குத்தப்பட்ட போது இடம்பெற்றது. அதிலும் மற்றைய விடயங்களிலும் தமது நடவடிக்கைகளை சுலோட்டர், மகன் பற்றிக் இ. க. க. யினாலும் நா. அ. அ. கு. வினாலும் தூஷிக்கப்பட்டார் எனக் கூறி நியாயப்படுத்திக் கொண்டார்.

உதைபந்தாட்டப் போட்டிகளுக்கு வெளியே கறுப்பு இன இளைஞர்களைத் தாக்கிய பாசிசக் குண்டர்களுடன் உறவு கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் பற்றிக் சுலோட்டர் கைது செய்யப்பட்டதற்கும் குற்றவாளியாகக் காணப்பட்டதற்கும் இ, க. கட்சியையோ அல்லது நா அ. அ. கு. வையோ குறை சொல்ல முடியாது. உண்மையில் நீங்கள் எல்லோரும் நன்கு அறிந்தது போல் சுலோட்டர் தமது மகனின் சட்டப் பிரச்சினைகளை எம்மைக் கண்டனம் செய்வதற்கான ஒரு குறைகாணும் சாட்டாக்கிக் கொண்டார். இது நீங்கள், அதாவது தொழிலாளர் புரட்சிக் கட்சியின் மத்திய குழு பற்றிக் சுலோட்டரைப் பேணும் முகமாக ஒரு பகிரங்க பிரச்சாரத்தினைத் தொடுக்கவோ அல்லது ஒரு அறிகையை வெளியிடவோ கடமைப்பட்டுள்ளதாக ஒரு போதும் உணராததன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது, அவரின குற்றத்துக்கு அடிப்படையாக இருந்த குற்றச்சாட்டுக்களை உண்மையாகப் பொய்ப்பிப்பதற்கு நீங்கள் ஒரு போதுமே முயன்றதில்லை. பேர்போன பாசிச எதிர்ப்பு சஞ்சிகைகளும் 'சேர்ச் லைட்' 'லீட்ஸ் அதர் லேபர்', 'யோக்ஷயர் போஸ்ட்' போன்ற முதலாளித்துவப் பத்திரிகைகளும் வலதுசாரி வட்டாரங்களில் பற்றிக் சுலோட்டரின் நடவடிக்கைகளை விரிவாக வருணித்த போது தொழிலாளர் புரட்சிக் கட்சி - சுலோட்டர் உட்பட—மௌனம்சாதித்தது. அவரின் விடயத்தை நீங்கள் பகிரங்கமாக எழுப்பிய போதெல்லாம் அது முற்றிலும் இ.க.க.வையும் நா. அ.அ.கு வையும் தாக்குவதற்காகவே விளங்கியது. இ. க. க. வுக்கும் நா, அ. அ. கு. புக்கும் எதிரான சுலோட்டரின் முதலாவது ஆத்திரமூட்டும் கண்டனம்—அதாவது பற்றிக் சுலோட்டர் விடயம் — இந்த விடயத்தைப் பற்றி நாம் ஒரு வார்த்தை தன்னும் எழுதுவதற்கு முன்னரே இடம் பெற்றுள்ளது என்பதை நாம் இங்கு மீண்டும் சுட்டிக் காட்டுவது அவசியமா?

இவை எல்லாம் கிளிவ் சுலோற்றரின் மூர்க்கமான பாய்ச்சல்— சமீபத்தில் இடம் பெற்றது உட்பட—அவரின் மகன் பற்றிக்கின் விடயத்தினால் தூண்டப்பட்டது அல்ல என்பதை எடுத்துக் காட்டுகின்றது. மாறாக அவரின் ஆத்திரமூட்டல்கள் அவரின் கொள்கையற்ற அரசியலில் இருந்து தோன்றும் பிரச்சினைகளுடன் தொடர்புபட்ட குறுங்குழுத் தேவைகளுக்கு உதவும் விதத்தில் காலம் குறிக்கப்பட்டுள்ளது. தமது சொந்த அமைப்பினுள்ளே அங்கத்தவர்களிடையே ஒரு நெருக்கடிக்கு முகம் கொடுத்ததும் அவர் அவசியமான அரசியல் விளக்கத்தினைத் தடை செய்யும் பொருட்டு ஆத்திரமூட்டல்களில் ஈடுபடுவது வழக்கம். 1985–86 நாம் திரும்பத் திரும்ப சுலோட்டரின் வெறுப்பூட்டும் வழிமுறைகளைத் தரிசித்தோம்.

1985 அக்டோபரில் அவர் டோரன்ஸ் றெட்கிறேவ் தலைமையிலான சிறுபான்மையினர் 'கிட்டத்தட்ட பாசிஸ்டுகள்' ஆக இருப்பதாகக் குற்றம் சாட்டினார் சூழ் நிலையை விஷமாக்கித் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் உள்ளேயான நெருக்கடி பற்றி எந்தவிதமான கலந்துரையாடலும் இடம் பெறுவதைத் தடுக்கவே அவ்வாறு செய்தார். சுலோட்டரின் முழு ஒத்துழைப்புடன் அரசியல் குழு. ஜெரிஹீலி அரசியல் அதிகார'த்தினை துஷ்பிரயோகம் செய்தது பற்றிய விசாரனையை மூன்று மாதங்களுக்கு நசுக்கியது. இதன் பின்னரே அது உடனடிப் பிளவுக்கான ஒரு நியாயப் படுத்தலாக சேவை புரிந்தது.

தொழிலாளர் புரட்சிக் கட்சியின சீரழிவுக்குக் காரணமாயுள்ள அரசியல் படிப்பினைகள் பற்றிய- அவரின் சொந்தப் பாத்திரம் உட்பட—ஒரு கலந்துரையாடலில் இருந்து அவர் தலை தப்ப நா. அ, அ. கு. இடமளிக்கப் போவதில்லை என்பதை சுலோட்டர் உணர்ந்ததும் அனைத்துலகக் குழுவுக்கும் அதன் பகுதிகளுக்கும் எதிரான ஆத்திரமூட்டல், சேறடிப்பு பிரச்சாரத்தினை ஆரம்பித்து வைத்தார். 1985 டிசம்பரில் தொழிலாளர் புரட்சிக் கட்சி மத்திய கிழக்கு முதலாளித்துவ ஆட்சியாளர்களுடன் கொண்டிருந்த ஊழல் உறவுகளுடன் சம்பந்தப்பட்ட பத்திரங்களை மீளாய்வு செய்ய இருந்த நா. அ அ. கு. கூட்டத்துக்கு சற்று முன்னதாக சுலோட்டர் கூட்ட நடவடிக்கைகளை சிதறடிக்கும் ஒரு திட்டவட்டமான நடவடிக்கையாக டேவிட் நோர்த்தை குத்த பயமுறுத்தியதன் மூலம் தம்மை ஒரு விசரனாக்கிக் கொண்டார். ஒரு சில கிழமைகளின் பின்னர் அவர் தொ. பு. க. உள்ளேயான ஹைலன்ட் தலைமையிலான நா. அ. அ. கு, சார்பு சிறுபான்மையின் முன்னணி ஆதரவாளர்கள் மீது உடல் ரீதியான தாக்குதலுக்கு அங்கீகாரம் வழங்கினார்.

சுலோட்டரின் ஆத்திரமூட்டல்கள் 1986 பெபரவரி 7ம் திகதிய வேர்க்கஸ் பிரசின் கேவலமான வெளியீட்டில் உச்சக் கட்டத்தை அடைந்தது. திகதி குறிக்கப்பட்ட தொ. பு. க. வின் 8வது காங்கிரசுக்கு 24 மணித்தியாலங்களுக்கு முன்னதாக 'வேர்க்கஸ் பிரஸ்' அனைத்துலகக் குழுவினதும், தொழிலாளர் புரட்சிக் கட்சியின் உள்ளேயான அதன் ஆதரவாளர்களதும் முன்னணிப் பிரதிநிதிகளை வன்மையாகக் கண்டனம் செய்யும் ஒரு முன்பக்க அறிக்கையை பிரசுரித்தது. அடுத்து என்ன நடந்தது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள், ட்ரொட்ஸ்கிச இயக்கத்தில் முன்னொருபோதும் இல்லாத விதத்தில் அன்று அவர்கள் அங்கத்தவர்களாக இருந்த கட்சிக் காங்கிரசில நா. அ. அ. கு. சிறுபான்மைப் பிரதிநிதிகள் கலந்து கொள்வதைத் தடைசெய்ய சுலோட்டர் பொலிசாரை வரவழைத்தார்.



கிளிவ் சுலரோட்டர் மகன் பற்றிக் சுலோட்டருடன்

சுலோட்டருக்கு இந்த ஆத்திரமூட்டல்கள் தேவைப்பட்டன. ஏனெனில் தொழிலாளர் புரட்சிக் கட்சி மீது அவர் கட்டுப்பாட்டினைக் கொண்டிருப்பதற்கான ஒரே வழி அதுவே. 1985–86 குளிர்காலத்தில் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் உள்ளே ஒரு நிஜ கலந்துரையாடலுக்கு இடமளிக்கப் பட்டிருப்பின் சுலோற்றரின் மோசடிப் பரும்பான்மையினர் காங்கிரசில் தூக்கி வீசப்பட்டிருப்பர், எல்லாவற்றிற்கும் மேலாக இவை எதை உள்ளடக்கிக் கொண்டிருந்தன? டேவ் குட் போன்ற ஸ்டாலினிஸ்டுகள், மைக் பண்டா போன்ற ஸ்டாலினிச சார்பு முதலாளித்துவ தேசியவாதிகள், சிறில் சிமித் போன்ற அப்பட்டமான பப்லோவாதிகள், டேவ் புருஷ், சார்லி பிரான்ட், கிறிஸ் பெய்லி, ஜெரி டவுனிங் போன்ற குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளின் நெருக்கமான உறவையே இப்பேர்வழிகள் நா. அ அ கு. வுடனான பிளவில் இருந்து ஒரு சில மாதங்களுள் தொ. பு, க யை விட்டு விலகிச் சென்றவர்களுள் ஒரு சிலரா வர். டேவிட் குட் உண்மையில் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து கொண்டார் (அல்லது 'மீளச் சேர்ந்து கொண்டார்' என்பது பெரிதும் பொருத்தமாக இருக்கும்) மைக் பண்டா தொ பு கவில் இருந்து வெளியேறிய சமயத்தில், இந்த இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் மார்க்சிஸ்ட் ஸ்டாலின் எனப் பிரகடனம் செய்தார்?

பார்ண்ஸ்லீயில் இப் பாய்ச்சலைக் கண்டவர்களுக்கு இது என்னதான் விநோதமாக தோன்றினாலும் இ, க. கவுக்கு எதிரான சுலோட்டரின் புதிய பாய்ச்சல் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் உள்ளும் 'வேர்க்கஸ் இன்டர்நஷனல்' உள்ளேயுமான ஒரு ஆழமான அரசியல் நெருக்கடியுடன் தொடர்புபடுத்தப்பட வேண்டும் என்பதற்கு எமக்கு நிறைய அனுபவம் இருந்தது. ஒரு வகையிலான குறுங்குழு போராட்டம் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் உள்ளே இடம் பெற்று வருகின்றதோடு பார்ண்ஸ்லி சம்பவம் தமது எதிரிகளுடனான கணக்குவழக்கைத் தீர்த்துக் கொள்வதற்கான ஒரு ஆரோக்கியமற்ற சூழ்நிலையை உருவாக்க உதவும் பொருட்டு சுலோட்டரினால் வேண்டுமென்றே அரங்கேற்றப் பட்டதாகும்,

சுலோட்டரின் நடவடிக்கைகளுக்கான காரணங்களை தீர்மானிக்க நீங்கள் நல்ல நிலைமையில் உள்ளீர்கள். ஆனால் அவை என்னவாக இருப்பினும் சுலோட்டரை ஒழுங்குவடுத்தி கட்டுப்பாட்டுக்குள் கொணர்வது உங்கள் பொறுப்பு. உண்மையில் அத்தகைய ஒரு நபரைத் தமது அங்கத்துவத்தில் தொடர்ந்தும் கொண்டிருக்க அனுமதிக்கும் ஒரு அமைப்பு, அத்தகைய ஒருவரைத் தலைவராக கொண்டிருக்கும் அமைப்பு, தன்னை ஆழமான பிற்போக்கு கொள்கைகளுக்குப் பயன் படுத்தப்பட அனுமதிக்கும் அமைப்பாகும்,

தங்களின் பதிலை எதிர் பார்க்கின்றேன்,

தங்கள் தோழமையுள்ள

பீட்டர் சுவார்ட்ஸ்

செயலாளர், நா. அ. அ. கு


வாசியுங்கள்:

யூ. என். பி. தாக்குதலுக்கு எதிரான போராட்ட வேலைத்திட்டம்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக வெளியீடு:
விலை; 7–50


www.padippakam.com
படிப்பகம்

# நவசமசமாஜ கட்சி: ஒரு முதலாளித்துவக் கட்சி

இனவாத யுத்தத்தின் ஒரு ஆயுதமான மாகாண சபைக்குப் போட்டியிடும் நவசமசமாஜக் கட்சி, வாக்குப் பிச்சை கோரி வெளியிட்டு வரும் அறிக்கைகள் மூலம் அது ஓர் முதலாளித்துவக் கட்சி என்ற உண்மை சர்ச்சைக்கு இடம் இன்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

நவசமசமாஜ கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார ஏப்ரல் 18ம் திகதி (ஞாயிறு) 'ஐலன்ட்' பத்திரிகைக்கு வழங்கியுள்ள பேட்டி இதனை நிரூபிக்கின்றது. அவர் கூறியுள்ளது இதுதான்.

1. ''எமது இறுதி அரசியல் இலக்கு சோசலிசத்தை நிர்மாணிப்பது அன்றி, பரந்த ஜனநாயகத்தினை நடைமுறைப்படுத்துவதே''.

சோசலிசத்தினை அடையும் எதிர்பார்ப்புடன் எவரேனும் ஏமாந்து ந.ச.ச.க.யில் சேர்ந்திருப்பின், அந்த நப்பாசையில் இருந்து உடன் தலைதப்ப இந்தக் கூற்றே போதுமானது. 'இறுதி' என்ற வார்த்தையை இடையிடுவில் செருகி. அந்த நப்பாசையை தொடர்ந்தும் இழுத்துப்பறிக்க நாணயக்கார செய்யும் முயற்சி சோடை போன ஒன்றாகும். அன்றன்றாடையப்போராட்டங்களில் சோசலிசத்தினை ஸ்தாபிதம் செய்யும் நோக்கத்தினைக் கைகழுவிவிட்டதன் பின்னர், அதனை நீண்ட காலத்தில் தானும் எட்டுவதைப் பற்றி நினைத்தும் பார்க்க முடியாது.

இதனை இன்னும் நன்கு புரிந்து கொள்ளும் பொருட்டு நாம் நாணயக்காரவின் மற்றுமோர் அறிக்கையை மேற்கோளாக எடுத்துக்காட்டுவது பொருத்தமானது:

2. ''நாம் தனியார் துறைக்கு ஊக்கமளிப்போம். வர்த்தகர்களுக்கு ஊக்கமளித்து, ஏற்றுமதிகளை விஸ்தரிக்கும் பொருட்டு அரசாங்கத்தின் உதவிகளை பெற்றுக் கொடுப்போம்''.

இது முதலாளித்துவ யூஎன்பி — சி.ல.சு.க. வேலைத்திட்டத்தில் இருந்து அணுவளவும் வேறுபட்டதா? இல்லவே இல்லை. அந்த முதலாளித்துவக் கட்சிகளைப் போலவே நாணயக்காரவின் வார்த்தைகளில் ந. ச. ச. க. யும் 'பயன்பாட்டுவாத நடைமுறையை' கடைப்பிடிக்கும் எனக் கூறிக் கொள்ளுகின்றது.

ந.ச.ச.க.யின் படி இனித் தொடர்ந்தும் மார்க்சிச விஞ்ஞான வேலைத்திட்டம் அவசியம் இல்லை. 'இடத்துக்கு ஏற்றமாதிரி ஆணி அறைவதன் மூலம் சகல பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ள முடியும்' என்பதே அவர்கள் நிலைப்பாடு. இது பிரேமதாசவின் வார்த்தைகளில் இருந்து 'கொப்பி' அடித்ததாகும்,

விஷயம் இத்துடன் நின்றுவிடவில்லை பிரேமதாச ஆட்சியில் இருந்து கொண்டு மற்றுமோர் கட்சி தனியார் துறைக்கு உதவி வழங்குவது பற்றிப் பேசும் போது ஒரு நியாயமான கேள்வி தலைநீட்டுவது இயல்பு. பிரேமதாச இன்னமும் நீட்டாத என்ன உதவியை முதலாளித்துவ வர்த்தகர்களுக்கு வழங்க இவர்கள் யோசிக்கிறார்கள்? வெளிநாட்டுச் செலாவணி சலுகையா? வரி விலக்குகளா? தொழிலாளர்களின் உழைப்புச் சக்தியை இறுதி மூச்சுவரை உறிஞ்சி ஏப்பமிடுவதா? நினைத்த விதத்தில் விலைவாசிகளை அதிகரிப்பதா? இவை எல்லாமே ஏற்கனவே முதலாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக ந.ச.ச.க. முதலாளிகளைக் காக்கத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது என்பதை விட வேறு எதுவுமே நாணயக்காரவின் அறிக்கையில் தென்படுவதாய் இல்லை.

இதிலிருந்து இன்னுமோர் விடயம் தலைநீட்டுகின்றது. முதலாளித்துவ வர்த்தகர்களுக்கு இங்ஙனம் எண்ணெய் தடவுவதன் மூலம் நவசமசமாஜக் கட்சி தொழிலாளி—ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகப் பிற்போக்காளர்களைப் பேணிப் பராமரிக்கத் தன்னை அர்ப்பணம் செய்துள்ளது. இங்கு எதிர்ப்புரட்சி சக்திகளின் நிழலாடுகின்றது. இவர்கள் ஜனநாயகத்தினை விஸ்தரிப்பது பற்றிப் பேசுவது இந்தச் சக்திகளுடன் கைகோர்த்துக் கொண்டே. நீண்ட நெடிய எதிர்காலத்தில் அன்றி வேறென்றும் சோசலிசத்துக்கு இடம் வைக்காதிருக்க ந.ச.ச.க. தொழிற்பட்டு வருவதை இது ஊர்ஜிதம் செய்கின்றது.

3. 'ஜனநாயகத்துக்கான தேசிய மூலோபாயத்தின்' அடிப்படையில் நவசமசமாஜ கட்சி தொழிற்பட்டு வருவதாகக் கூறிக்கொள்ளும் வாசுதேவ நாணயக்கார, தேசியம் எனப்படுவதின் பேரால் சகல முதலாளிகளின் எதிரிலும், அவ்வாறே ஏகாதிபத்தியவாதிகளின் எதிரிலும் மண்டியிடுகின்றார், ஏகாதிபத்தியச் சக்திகள், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாகச் சுமத்தும் வேலைத் திட்டங்களை நிராகரிப்பதாக வார்த்தை ஜாலம் அடிக்கும் அதே வாயினால் வீணி வடிய நாணயக்கார கூறும் ந. ச. ச. க. வேலைத்திட்டம் இதுதான்: 'நாம் இந்தத் தொடர்புகளைப் பயன்பாட்டுவாத ரீதியில் மீண்டும் ஆய்வு செய்து, இந்த ஏகாதிபத்திய வல்லரசுகளுடன் உறவுகளை வைத்துக் கொள்வோம். அது எமது மக்களுக்கும் பொருளாதாரத்துக்கும் முழுமனே பயனுள்ள முறையில் இருக்கும்''.

என்னே விக்கிரமாதித்தன்! ஏகாதிபத்தியவாதிகளின் இரத்த வெறிக்கு இணங்கி, அவர்களுக்கு கைநீட்டி, அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து கொள்வதற்கு ந. ச.ச. க,க்கு எவ்வளவு துணிச்சல்? ந.ச.ச.க. யின் துர்அதிர்ஸ்டம்என்ன தெரியுமா? இதன் தலைவர்களைப்



ந.ச.ச.க. செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன இனவாத, பாசிசக் கும்பல்களின் அனுர பண்டாரநாயக்க, திலக் கருணாரத்ன (ஹெலஉருமய) வுடன் கைகோர்த்து செல்லும் காட்சி

போன்ற ஏகாதிபத்தியச் சார்பு கோழைகளின் எதிரில் ஏகாதிபத்தியவாதிகள் தமது வேட்டைப் பற்களை வெளியே நீட்டாமல் உள்ளிழுத்துக் கொண்ட எந்தவொரு சந்தர்ப்பத்தையும் உலக வரலாற்றில் இருந்து எடுத்துக் காட்ட முடியாது இருப்பதே.

## நவசமசமாஜ நப்பாசை

ந. ச. ச. க. தலைவர்கள் பரப்பிவரும் நப்பாசைகளுக்கு முரணான விதத்தில் இன்று உலகில் ஏகாதிபத்திய காலனித்துவத்துக்கான யுத்த தலையீடுகள் இடம்பெற்று வருகின்றன. வங்கிகளும் நிறுவனங்களும் அவ்வாறே ஐக்கிய நாடுகள் சபை போன்ற ஏகாதிபத்திய அமைப்புக்களும் அந்த அழிவுகளை உலகம் பூராவுமுள்ள தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களின் தலையில் கட்டியடிக்கத் துடிக்கின்றன. ஈராக், சோமாலியா, முன்னைய யூகோசலாவியா ஆகியன இதை ருசுப்படுத்தப் போதுமானவை.

இந்த உலக நாசகார வேலைத்திட்டத்தில் இந்திய துணைக் கண்டத்தின் அனைத்து பிற்போக்கு ஆட்சியாளர்களும், ஆளும் கும்பல்களும் ஏகாதிபத்தியவாதிகளுடன் அணிதிரண்டு கொண்டுள்ளனர் நவசமசமாஜ கட்சியின் சார்பில் நாணயக்கார கூறுவதாவது: ''இப் பிராந்தியத்தில் இந்தியா, பாகிஸ்தான், மற்றும் எமது அயல் நாடுகளுடன் முக்கிய வளங்களையும் தொழில் நுட்பத்தினையும் பரிமாறிக் கொள்ள தயார்''.

இந்தியாவின் காங்கிரஸ் அரசாங்கம் ஏகாதிபத்தியவாதிகளின் வழிநடத்தலின் கீழ் இந்தியாவின் இராணுவ வளங்களையும், தொழில் நுட்பத்தையும் ஒரு இலட்சம் படைகளையும் இலங்கையின் வடக்குக்—கிழக்கு மாகாண தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிராக மட்டுமன்றி நாட்டின் முழு மக்களுக்கும் எதிரான இராணுவ ஒடுக்குமுறைக்காக 1987 – 90 காலகட்டத்தில் பயன் படுத்தியதன் விளைவுகள் வரலாற்றில் தெளிவாகப் பொறிக்கப்பட்டுள்ள ஒரு நிலையிலேயே இந்த அறிக்கை 'பரிமாற்றம்' பற்றிப் பேசிக் கொள்கின்றது. பிரேமதாச ஆட்சியின் 'சார்க்' கின் காபன் பிரதியையே நவசமசமாஜ கட்சி இங்கு சமர்ப்பிக்கின்றது.

ந, ச, ச, க. தலைவர் வாசுதேவ நாணயக்கார தாம்புகழ் பெற்ற வாய்வீச்சுக்காரர் மட்டுமன்றி முழுப் பூசனிக்காயை சோற்றில் புதைக்கும் பொய்யன் என்பதையும் காட்டிக் கொண்டுள்ளார். ஞாயிறு 'ஐலன்ட்'பத்திரிகைக்கு அவர் பின்வருமாறு கூறிக்கொண்டுள்ளார்: ''நாம் இந்திய இராணுவத்தின் வருகையால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையும்எதிர்த்தோம். ஆனால் நாம் அன்று முன்னணியில் இருந்து வந்ததால் விருப்பமின்றியே இந்திய—இலங்கை ஒப்பந்தத்தினை அங்கீகரித்தோம்''.

ந. ச. ச. க. எந்தவிதமான பகிரங்க அறிக்கை மூலமாகவேனும் இந்திய—இலங்கை ஒப்பந்தத்தினை எதிர்க்கவில்லை. அவர்கள் கட்டிலின் அடியில் பதுங்கிக் கொண்டேனும் கனவில் அதற்கு எதிராகப் பிசற்றியதாகத் தன்னும் கூற முடியாது. இவை எல்லாவற்றிற்கும் காரணம், அன்று தாம் கூட்டுச் சேர்ந்து கொண்டிருந்த கட்சியின் தவறுதான் என்ற செல்லாக் காசுக் கதையை ஏற்க யாரும் தயாரா? அங்ஙனம் எவரும் அதை அங்கீகரிப்பின் இன்று அவர்கள் ஏகாதிபத்திய வல்லரசுகளுடன் வைத்துக்கொள்ளப் போகும் 'பயன்பாட்டுவாத 'உறவுகளினால் இந்திய—இலங்கை ஒப்பந்தத்தினால் ஏற்பட்டதைவிடப் பயங்கரமான விளைவுகளை தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கு ஏற்படுத்தும்.

4, மக்கள் விடுதலை அமைப்பு என்ற பேரில் இனவாத முதலாளித்துவக் கட்சிகளுடன் ஒரு முன்னணியினை அமைத்துக் கொண்டுள்ள நவசமசமாஜக் கட்சி, ஜேவீபி பாசிஸ்டுகளை தமது பதாகையினால் போர்த்தி, முன்னணிக்குக் கொணாப போவதாகவும் நாணயக்கார குறிப்பிடுகின்றார், மக்கள் விடுதலை அமைப்பில் இருந்து மக்கள் விடுதலை முன்னணி (ஜேவீபி) க்கு!

•ஏப்ரல் 23 'கம்கறு மாவத்த' கட்டுரையில் இருந்து ஆக்கப்பட்டது.

நவசமசமாஜ தலைவர் எது வித அச்சம் பயமுமின்றி கூறுவது என்ன தெரியுமா? 'நாம் ஜேவீபி நோக்கங்களுக்கு எப்போதுமே சார்பாக இருந்து வந்துள்ளோம்'. இந்த ஜேவீபி பாசிச இலக்குகளில் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினரின் இரத்தம் சுவை பார்க்கும் அலுகோசு வெறியும், தொழிலாள வர்க்கத்துக்கும் தொழிலாளர் அமைப்புக்களுக்கும் துப்பாக்கி முனையில் ஆணையிடுவதும் அடங்கியிருந்தது என்பதை அறியாதோர் கிடையாது. ந.ச.ச.க. யின் புதிய திருப்பம், அந்தப் பிற்போக்கு இலக்குகளையும் தோளில் சுமந்து வலம் வருவதாக உள்ளது.

5. கிராமப் புற ஏழைகளிடையே செல்வாக்குப் பெறும் பொருட்டுஜேவீபி அவர்களின் நிலம் கோரிக்கை போன்ற அவசியங்களை சுரண்டிக் கொண்டது. நவசமசமாஜக் கட்சி அத்தகையவையும் கூட இல்லாமலேயே ஜேவீபியின் பிற்போக்கினை வாரி அணைத்துக் கொண்டுள்ளதை வாசுதேவ நாணயக்காரவின் நிலப் பிரச்சினை மீதான தீர்வு காட்டுகின்றது,

''காணி உரிமை பற்றிய தீர்வு என்ன?'' என்ற 'ஐலன்ட' நிருபரின் கேள்விக்கு நாணயக்காரவின் பதில் இது தான: ''நிலத்தை சுவீகரிப்பது இல்லை, நிலம் உரிமை தொடர்ந்தும் தனிப்பட்ட அடிப்படையில் இருந்து வரும்.''

இதன் அர்த்தம் தெளிவானது. ந.ச ச.க.யின்படி நிலமற்ற விவசாயிகளுக்கு காணி கிடைக்காது. காணி உரிமையை இன்றுள்ள முதலாளித்துவ அமைப்புக்கு ஏற்பவே நடாத்திச் செல்ல ந.ச.ச.க, சபதம் பூண்டுள்ளது.

(20ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com

படிப்பகம்

# 'த இன்டர்நஷனல் வேர்க்கஸ் புலட்டீன்' பத்திரிகைக்கு பு. க. க. நல்லாசிகள்

அமெரிக்க ட்ரொட்ஸ்கிசக் கட்சியான வேர்க்கஸ் லீக் கடந்த ஏப்ரல் 5ம் திகதியில் இருந்து அதன் வார இதழான புலட்டீன் பத்திரிகையின் தோற்றம், அமைப்பினை அடியோடு மறுசீரமைப்புச் செய்து, 'த இன்டர்நஷனல் வேர்க்கஸ் புலட்டீன்' என்ற பேரில் ஒரு புதிய பத்திரிகையை வெளியிட்டுள்ளது, எமது அமெரிக்கச் சக சிந்தனையாளர்களின் இந்த வரலாற்று நடவடிக்கைக்கு நல்லாசிகள் கூறி, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் (பு.க.க.) பொதுச் செயலாளர் விஜே டயஸ் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தி இங்கு பிரசுரமாகின்றது.

● ● ●

த இன்டர்நஷனல் வேர்க்கஸ் புலட்டீன் பத்திரிகையை வெளியிடும் இச்சந்தர்ப்பத்தில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேர்க்கஸ் லீக்குக்கு தனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

த இன்டர்நஷனல் வேர்க்கஸ் புலட்டீனின் முன்னோடியான புலட்டீன் பத்திரிகை எப்போதும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பிரமாண்டமான கோட்பாட்டு. அரசியல் மூலமாக விளங்கியது. 1960 பதுகளின் கடைப் பகுதியில் இடம் பெற்ற வேர்க்கஸ் லீக்கின் ஆரம்பம், பு.க.க. ஆரம்பத்தினைப் போலவே பப்லோவாத சந்தர்ப்பவாதத்துக்கும் குட்டி முதலாளித்துவ தீவிரவாதத்துக்கும் எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் வழிநடாத்தப்பட்ட மார்க்சிச இயக்கத்தின் பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத அடிப்படையினைப் பேணிக் காக்கும் ஈவிரக்கமற்ற போராட்டத்தினுள் வேரூன்றியுள்ளது. இப்போாரட்டத்தினுள் புலட்டீன் பத்திரிகை ஆற்றிய முக்கிய பணியினையும் ஆல்போர்த்தின் உதவியுடன் தொழிலாளர் புரட்சிக் கட்சி (WRP) யின் ஓடுகாலிகளான ஹீலி, பண்டா, சுலோட்டர் புலட்டீன் பத்திரிகை இலங்கையைச் சென்றடைவதை நிறுத்தியதன் மூலம் வேர்க்கஸ் லீக்குக்கும் பு.க.க. வுக்கும் இடையே நெருங்கிய அரசியல் உறவினைச் சிதறடிக்கும் நனவான தீர்மானம் எடுத்தனர் என்பதில் இருந்து அளவீடு செய்து கொள்ள முடியும். அது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினை தமது தேசிய சந்தர்ப்பவாத விதிமுறைகளுக்குக் கீழ்ப்படுத்தும் அவர்களின் திட்டத்தின் ஒரு பாகமாக விளங்கியது.

எனினும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பெரும்பான்மையினர் வேர்க்கஸ் லீக்கின் தலைமையின் கீழ் 1980பதுகளின் நடுப்பகுதியில் உலக அரசியல் நிலைமையிலும் வர்க்கப் போராட்டத்திலும் ஏற்பட்டுவந்த பாரிய மாற்றங்களைப் பிரதிபலிக்கும் விதத்திலும் பாட்டாளிவர்க்க அனைத்துலகவாத விதிமுறைகளினுள் இந்த அபிவிருத்திகளை நனவான முறையில் வெளிப்படுத்தியும் 1985 – 86 போராட்டத்தில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அங்கத்தவத்தினுள் சந்தர்ப்பவாதத்தினைத் துடைத்துக் கட்டுவதில் வெற்றிகண்டது. பிளவின் பின்னர் உலக சோசலிச முன்நோக்கின் அடிப்படையில் இப்பிராந்தியத்தினுள் எமது நடவடிக்கைகளுக்கான மார்க்சிசக் கோட்பாட்டு, ஆய்வு ரீதியான வழிகாட்டலை எமக்கு வழங்கியதன் மூலம் புதிய நட்சத்திரமாக புலட்டீன் எம்மை நோக்கி வருகை தருவது மீண்டும் ஆரம்பமாகியது.


THE INTERNATIONAL WORKERS BULLETIN
Clinton's "health care" plan
Boost Profits, Cut Benefits

த இன்டர்நஷனல் வேர்க்கஸ் புலட்டீன பத்திரிகை மேற்சொன்ன முன்நோக்கின் அடிப்படையில் அனைத்துலகத் தொழிலாளி வர்க்கத்தினையும் ஒடுக்கப்படும் மக்களையும் பயிற்றி, அணிதிரட்டி உலக வரலாற்றுப் பணியினை இட்டு நிரப்பச் சபதம் பூண்ட ஒரு தீர்க்கமான முன் நடவடிக்கையாகும். இச்சகாப்தத்தில் தீர்வு காணப்படாது இருந்து வரும் சகல பிரச்சினைகளுக்குமான ஒரே தீர்வு உலக சோசலிசமே. இந்த நானாவிதப் பிரச்சினைகளுக்கும் மத்தியில் ஒரு புறத்தில் உலகப் பொருளாதாரத்திற்கும் பழைய தேசிய அரச அமைப்புக்கும் இடையேயும், மறுபுறத்தில் சமூகமயமான உற்பத்திக்கும் தனிப்பட்ட உரிமைக்கும் இடையேயும் இருந்துவரும் முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பது விளங்குகின்றது. இவை ஏகாதிபத்தியத்தினை உலக யுத்தங்களை நோக்கியும், தொழிலாள வர்க்கத்தினையும் ஒடுக்கப்படும் மக்களையும் உலக சோசலிசப் புரட்சி நோக்கியும் தள்ளும் பழைய சகாப்தத்தின் முரண்பாடுகள்.

இந்நிலைமைகளின் கீழ் தேசியவாத வேலைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட சகல அமைப்புக்களும் அவற்றின் பிற்போக்குத் தன்மையைக் காட்டிக் கொண்டுள்ளன. 'தனிநாட்டில் சோசலிசம்' என்ற தேசியவாதக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டிருந்த ஸ்டாலினிஸ்டுகள் இன்று கொம்பிரதோர் கைக்கூலிகளாக மாறி, இந்த அமைப்புக்களின் நாற்றமெடுப்பினை உக்கிரமான முறையில் வெளிக்காட்டிக் கொண்டுள்ளனர். சீர்திருத்தவாதிகளும் பப்லோவாதிகளும் மற்றும் அதிகாரத்துவங்களும் ஏகாதிபத்திய, முதலாளித்துவ ஆட்சியாளர்களின் அப்பட்டமான தொழிலாளர் லெப்டினன்டுகளாக மாறிய தன் மூலம் தொழிலாளி வர்க்கத் தலைமைகளாகத் தொடர்ந்தும் இருக்க இலாயக்கற்ற தன்மையை வெளிக்காட்டிக் கொண்டுள்ளனர்.

பப்லோவாத ஏர்ணஸ்ட் மண்டேலின் புதிய கைக்கூலிகளான நவசமசமாஜக் கட்சித் தலைவர் சமீபத்தில், முதலாளித்துவ 'த ஐலன்ட்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தமது வேலைத்திட்டத்தினை தெளிவுபடுத்துகையில் சோசலிசத்துக்கான போராட்டத்தினை நிராகரித்துள்ளார். முதலாளித்துவ கைத்தொழில் அதிபர்களுக்கு 'ஊக்குவிப்புக்கள்' வழங்குவதாயும் 'ஏற்றுமதிகளை விஸ்தரிக்க அவர்களுக்கு அரசாங்கத்தின் உதவிகள் கிடைக்குமெனவும்' கூற முன்வந்துள்ளார். இதன் மூலம் ஏகாதிபத்தியச் சார்பு பிரேமதாச ஆட்சியுடன் தமக்கு கருத்து வேறுபாடுகள் கிடையாது என்பதை மட்டுமன்றி இன்று அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வருவதைக் காட்டிலும் உயர்ந்த விதத்தில் முதலாளிகளுக்கு ஊக்குவிப்புக்கள் வழங்கவும் தாம் தயாராகியுள்ளதையும் காட்டியுள்ளனர். 1964ல் சமசமாஜக் கட்சியின் பப்லோவாத காட்டிக்கொடுப்பு தமிழ் தேசியவாதத்தினர் மத்தியில் போன்றே சிங்கள தேசிய இனத்திடையேயும் பல்வேறு குட்டி முதலாளித்துவ இனவாத குழுக்கள் (ஜே,வீ.பி. வடிவில்) தோன்ற இடமளித்தது போலவே இன்று நசசக யின் பணியானது ஏகாதிபத்திய திட்டங்களுக்கு ஆதரவு தரும் பொருட்டு ஜேவீபியின் அழிபாடுகளில் இருந்து பாசிச துணைச் சக்திகளை சிருஷ்டிப்பதாக உள்ளது. இது தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு முற்றிலும் முரணான விதத்தில் சந்தர்ப்பவாதம் எந்தளவுக்கு பிற்போக்கு ஆதாள பாதாளத்தில் சிக்கிப் போயுள்ளது என்பதைக் காட்டுகின்றது.

## மனித இனத்தின் எதிர்காலம்

இந்தக் தரித்திரம் பிடித்த சம்பவங்கள் மனித இனத்தின் எதிர்காலம் அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தினால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதிகளின் கைகளில் தங்கியுள்ளது என்பதை நிரூபிக்கின்றது. எமது உலக மார்க்சிச இயக்கத்தின் முக்கிய வெளியீடாக வேர்க்கஸ் லீக்கின் த இன்டர்நஷனல் வேர்க்கஸ் புலட்டீன தோள் சொடுக்கும் புரட்சிகரப் பொறுப்புக்களை நாம் பெரிதும் வரவேற்கின்றோம். இன்றைய சகாப்தத்தில் அவர்கள் ஆற்றவேண்டிய உலக ரீதியில் முக்கியத்துவம் வாய்த்த புரட்சிகரப் பணியினைப் புரிந்துகொள்ள அவசியமான வழிகாட்டியை வழங்கும் பொறுப்பு த இன்டர்நஷனல் வேர்க்கஸ் புலட்டீன் பத்திரிகையிடம் இருப்பது வர்க்க நனவு கொண்ட அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு பெருமைக்குரியது. இதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். இந்தப் புரட்சிகர முயற்சியில் த இன்டர்நஷனல் வேர்க்கஸ் புலட்டீன் பத்திரிகை வெற்றியீட்ட எமது பூரண ஒத்துழைப்பினை வழங்க நாம் வாக்குறுதியளிக்கின்றோம்.

நல்வாழ்த்துடன்

**விஜே டயஸ்**

பொதுச் செயலாளர்,

பு. க. க.

## வங்க மொழியில் ட்ரொட்ஸ்கிசப் பத்திரிகை

இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் வங்க மொழியில் 'ஷ்ரமிகேர் பாத்' (தொழிலாளர் பாதை) என்ற பத்திரிகையை வெளியிட்டுள்ளனர். தமில் மொழியில் 'தொழிலாளர் பாதை' என்ற மாத இதழை ஏற்கனவே வெளியிட்டு வரும் சோ.தொ.க,தின இந்நடவடிக்கை வங்க மொழி பேசும் தொழிலாளர்கள் மத்தியில் அனைத்துலக சோசலிச வேலைத் திட்டத்தினை முன்னெடுக்கும் இலக்கினில் ஒரு திட்டவட்டமான ஆயுதமாக விளங்கும்.

இந்திய ஸ்டாலினிசக் கம்யூனிசக் கட்சிகளினதும் (CPM CPI) மற்றும் சந்தர்ப்பவாதக் கட்சிகளதும் தேசியவாத நிலைப்பாடுகளை அம்பலப்படுத்தவும், மார்க்சிய சர்வதேச முன்நோக்கில் தொழிலாளர்கள், சோசலிச பாதையை நாடும் மத்திய தரவர்க்கத்தினர் புத்திஜீவிகளை வென்றெடுக்கவும் இப்பத்திரிகை போராடும் எனவும் சோ. தொ. கழகம் குறிப்பிட்டுள்ளது.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக ஸ்டாலினிசத்துக்குப் புரட்சிகர முலாம் பூசிவந்த பப்லோவாதிகளதும் இந்திய முதலாளித்துவத்துக்கு முற்போக்கு முலாம் பூசியதன் மூலம் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் சுயாதீனமான பகுதியை இந்தியாவுள் கட்டியெழுப்புவதற்குத் தடையாக இருந்த பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சிக்கு எதிராக அனைத்துலகக் குழு தொடுத்த பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துக்கான போராட்டத்தினை 'ஷ்ரமிகேர் பாத்' இந்தியாவில் முன்னெடுக்கும் என இந்திய ட்ரொட்ஸ்கிஸ்டுகள் குறிப்பிட்டுள்ளனர்.

'ஷ்ரமிகேர் பாத்' திற்கு தனது புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பெருமகிழ்ச்சி அடைகின்றது.


வாசியுங்கள்!

**சோவியத் யூனியனின் முடிவு**

டேவிட் நோர்த்

விலை 25-00

கிடைக்குமிடம்-
90, 1வது
மாளிகாகந்த ஒழுங்கை
கொழும்பு - 10.

www.padippakam.com



# ஜேர்மன் ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் மே தின கூட்டம்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஜேர்மன் கிளையாள பன்ட் சோசலிஸ்ட் ஆர்பைட்டரினால் (BSA) டுயிச்புவக் நகரில் நடத்தப்பட்ட மே தினக் கூட்டத்தில் சுமார் 25 தொழிலாளர்கள், இளைஞர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர், 103 ஆண்டுகளின் முன்னர் முதற் தடவையாக நடாத்தப்பட்ட மே தினத்தின் ஆரம்பப் பாரம்பரியங்களை நினைவு படுத்தி B. S. A. உறுப்பினர் தோழர். டிட்மார் பேட்ரைட் நிகழ்த்திய உரையுடன் கூட்டம் ஆரம்பமாகியது. அது அனைத்துலக சோசலிச முன்நோக்குடனும் முதலாளித்துவ ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிரான தொழிலாளர்களின் உலகளாவிய போராட்டத்துடனும் பிணைக்கப்பட்டிருந்தது.

இன்று தொழிற்சங்க அதிகாரத்துவங்களால் நடாத்தப்படும் மே தினக் கூட்டங்கள் இதற்கு முற்றிலும் முரணானவை. அவை விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் அரசாங்கத்துக்குத் தமது ஒத்துழைப்பை பிரகடனம் செய்வதாயும், தேசியவாத சுலோகங்களை உச்சரிக்கும் மையமாகவும் விளங்குகின்றன.

## ஆசிய ஒடுக்கப்படுவோரின் நிலைமை

B,S A. யின் இந்த மே தினக் கூட்டத்தில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளிநாட்டுக் கிளையின் அங்கத்தவரான தோழர். பஹீர் முதலாவதாக உரை நிகழ்த்தினார். பஹீர் இலங்கையிலும் சிறப்பாக இந்தியத் துணைக் கண்டத்திலும் ஒடுக்கப்படும் மக்களின் நிலைமையை மிகவும் தெளிவாக விளக்கினார். அவர் கூறியதாவது;

"முதலாளித்துவத்தின் உலகளாவிய நெருக்கடி பின்தங்கிய நாடுகளில் ஆழமான தாக்கங்களை உண்டுபண்ணியுள்ளது. இந்நாடுகள் அவற்றின் பின்தங்கிய பொருளாதாரங்கள் காரணமாக என்றுமே சுயாதீனமான பாத்திரத்தினை வகித்தது கிடையாது இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் இந் நாடுகளின முதலாளித்துவ அரசாங்கங்கள் அமெரிக்காவுக்கும், சோவியத் யூனியனுக்கும் இடையேயான மோதுதலைத் தமது உபாயங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டன. சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பின்னர் இந்த உபாயங்களுக்கு இடமில்லாமல் போனது மட்டுமன்றி இந்தியாவிலும் இலங்கையிலும் மற்றும் நாடுகளிலும் நெருக்கடி உக்கிரம் அடைந்துள்ளது. இந்த அரசாங்கங்கள் இன்று அரசியலைத் தம்மீது பலாத்காரமாகக் கட்டியடிக்கும் ஏகாதிபத்திய உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் முன்னிலையில் வயிறளக்கின்றன.

"இலங்கையினுள் நிலைமை இந்திய நிலைமைக்குச் சமமானது. இலங்கையில் முதலாளித்துவ ஆட்சி கொலைகள் படுகொலைகள் மூலம் முனைனெடுக்கப் படுகின்றது நாட்டின் வடக்கு — கிழக்கு மாகாணங்களில் தமிழ் சிறுபான்மை தேசிய இனத்தினருக்கு எதிராக யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அதே வேளையில் தெற்கிலும் மேற்கிலும் ஒரு இலட்சம் இளைஞர்களும் ஏழை விவசாயிகளும் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்

"மே தின ஊர்வலத்தில் இன்று கொலை செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி பிரேமதாச—இதை இப்போது கேள்விப்பட்டோம் — சமீபத்தில் பின்வருமாறு கூறினார்: "முழு நாட்டையும் ஒரு சுதந்திர வர்த்தக வலயமாக மாற்றுவது எனக்கு அவசியம்". உற்பத்தியில் பூகோளமயமாக்கம், சுயாதீனமான தேசியப் பொருளாதாரத்தினைக் கட்டி எழுப்ப முடியாது என்பதை சுட்டிக் காட்டியுள்ளது. ஆதலால் முதலாளித்துவ அரசாங்கம். ஏகாதிபத்தியவாதிகளின் சுதந்திரச் சுரண்டலுக்கான ஒரு வலயமாக முழு நாட்டையும் மாற்றி வருகின்றது.

"இங்கு என்ன விதமான மிலேச்சச் சுரண்டல் இடம் பெற்று வருகின்றது என்பதை முன்னேறிய நாடுகளின் தொழிலாளர் புரிந்து கொள்ள வேண்டும், ஏனெனில் முன்னேறிய நாடுகளின் முதலாளிகள் அதே சுரண்டல் நிலைமைகளைத் தமது நாடுகளின் உள்ளும் நடைமுறைப் படுத்த முயற்சிக்கின்றார்கள். புதினப் பத்திரிகைகளில் வெளிவரும் பொருளியல் ஆய்வுகளை ஒருவர் வாசிப்பின் இந்நாடுகளின் ஒரு மணித்தியாலச் சம்பளம். சேவை நிலைமைகளை சுதந்திர வர்த்தக வலய நிலைமைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியும்".

சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழிற் சங்கங்கள் இல்லையெனக் குறிப்பிட்ட தோழர், பஹீர் சு. வ. வ. தொழிலாளர்களை அணிதிரட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் போராடி வருவதாகக் குறிப்பிட்டார், குட்டி முதலாளித்துவ தேசியவாத தமிழ் தலைமைகள் தமிழ் மக்களை முட்டுச் சுவரை நோக்கி இட்டுச் சென்றுள்ள ஒரு நிலைமையில் புதிய புரட்சிகர அனைத்துலக அமைப்பை — நான்காம் அகிலத்தை கட்டி எழுப்பும் அவசியம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

B. S. A. யின் மத்திய குழு உறுப்பினரும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பொதுச் செயலாளருமான தோழர். பீட்டர் சுவார்ட்ஸ் பேசுகையில், 1933 மே 1ல் ஜேர்மன் தொழிற் சங்கத் தலைவர்கள் 'சுவாஸ்திகா' பதாகையின் கீழ் ஊர்வலம் நடாத்தி சரியாக 60 ஆண்டுகள் பூர்த்தியகியுள்ளதைச் சுட்டிக் காட்டினார்.




இனவாதத்துக்கும் யுத்தத்துக்கும் எதிரான ஜேர்மன் ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் மகாநாடு டிசம்பர் 1992

"தொழிற் சங்கத் தலைவர்கள் அதிலிருந்து எதையுமே கற்றுக் கொள்ளவில்லை அவர்கள் மீண்டும் அதே பாதையைப் பின்பற்றுவர் என்பதில் சந்தேகம் இல்லை. அதன்படி தொழிற்சங்க மே தின கூட்டங்களில் பங்கு கொள்பவர்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. இங்கு தொழிலாளர் வர்க்கத்தின் பலத்த எதிர்ப்புக்குப் போதுமான காரணங்கள் உண்டு. ஆயிரத்து தொளாயிரத்து முப்பதுகளைக் காட்டிலும் தொழில் இல்லாதவர்களின் எண்ணிக்கை பிரமாண்டமானது. சமூக நலன்புரிச் சேவைகள் மீது தொடுக்கப்பட்டுள்ள தாக்குதல்கள் எல்லை கடந்து சென்றுள்ளது.

"அந்தத் தாக்குதல்களுடன் இணைந்து சென்று இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் முதற் தடவையாக உலகம் பூராவும் ஜேர்மன் படைகள் ஈடுபடுத்தப்படுகின்றன. ஜேர்மன் தொழிலாளர் வர்க்கத்தின் மேல் தாக்குதல்கள் எதுவித விசேட சிறப்பு அம்சமும் இன்றித் தொடுக்கப்பட்ட போதிலும் அனைத்துலகத் தொழிலாளி வர்க்கத்தின் தலைமை பற்றி இன்னும் குறைவாகவே கேட்கிறது."

பழைய சோவியத்யூனியன், கிழக்கு ஐரோப்பிய நிலைமையை தெளிவுபடுத்துகையில் தோழர். சுவார்ட்ஸ்கூறியதாவது: "இந்நாடுகளில் முதலாளித்துவப் புனருத்தாரணம் யுத்தத்தைக் காட்டிலும் மோசமான அழிவுகளை உண்டுபண்ணும். எல்லாவற்றுக்கும் மேலாக மேற்கத்திய நாடுகளின் தலையீட்டிற்கு யெல்ட்சின் நன்றிகூறும் வகையில் ருஷ்ய கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் வெற்றி பெற்றதன் பின்னர், நிதி மூலதனத்தின் அனைத்துலகப் பத்திரிகைகள் யெல்சினிடமிருந்து எதிர்பார்ப்பது என்ன என்பதைத் தினமும் தெளிவுபடுத்தி வருகின்றன. அவர் முதலில் தொழிலாளி வர்க்கத்துக்கு எதிராக இருந்துவரும் சட்டத்தை — அவை அவருடன் மோதிக் கொள்ள வரினும் — பேலும் மேலும் உக்கிரமாக்க வேண்டும். பண வீக்கத்தை நிறுத்துவது முக்கிய பிரச்சினையாக உள்ளது. ஆனால் இதனைக் கிளர்ச்சி ஆபத்தைக் கொணரும் பிரமாண்டமான தொழில் வெட்டு, வேலைத்தள கதவடைப்புக்கள் மூலமே செய்ய முடியும்.

"சீனாவினுள் போன்றே ருஷ்யாவினுள்ளும் வேறோர் அரசாங்கத்தை அமைக்க இடம் கிடைக்கும் என்பதையிட்டு முதலாளிகளுக்கு சிறிய எதிர்பார்ப்பே உள்ளது. வேறு அபிவிருத்திகள் வரவர வளர்ச்சி காணும் எல்லைக்கு வந்துள்ளது. அதாவது, மத்திய அரச அதிகாரம் வீழ்ச்சி கண்டு வருவதோடு சகல பிராந்தியங்களும் சிதறுண்டு போய் வருகின்றன. எஞ்சியிருப்பது பெருமளவு இலாபத்தைக் கொணரும் சில விசேட பொருளாதாரப் பிராந்தியங்களே" என்றார்.

ஸ்டாலினிஸ்டுகளின் நாசகார வேலைத்திட்டத்தினைப் பற்றி மாஸ்கோ சுவடிகள் காப்பகத்தில் கிடைத்துள்ள தகவல்களை ஆதாரம் காட்டிப் பேசுகையில் சுவார்ட்ஸ் கூறியதாவது: 'மாஸ்கோ சுவடிகள் காப்பகத்தில் பணி புரியும் நிபுணர் ஒருவர் சமீபத்தில் தாம் ட்ரொட்ஸ்கியின் இடதுசாரி எதிர்க்கட்சி பற்றி விரிவான ஒரு தொகைத் தகவல்களைத் தேடிப் பெற்றுள்ளதாக குறிப்பிட்டார் அவை விஞ்ஞான கலாச்சார, இலக்கியங்கள் பற்றிய பரந்த செல்வங்களுக்குச் சாட்சி பகர்வதோடு இந்நூற்றாண்டின் முற்பகுதியில் மனித அறிவின் புஸ்பங்கள் இடதுசாரி எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் அல்லது ஆதரவாளர்கள் என்பதை நிரூபிக்கின்றது. இவற்றினை அறிவதன் மூலம் மட்டுமே ஸ்டாலினிசத்தின் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை அளவிடவும், அனைத்து புரட்சியாளர்களதும் மார்க்சிசத்தினால் பலன்பெற்ற புத்திஜீவிகளினதும் தஸ்தாவேசுகள், படைப்புக்களை ஒழித்து மறைப்பதன் மூலமும் அவர்களை உடல்ரீதியில் ஒழித்துக் கட்டுவதன் மூலமும் அனைத்துலகத் தொழிலாளி வர்க்கத்தின் சிந்தனைக்கு எவ்வளவு பேரழிவினை உண்டுபண்ணியுள்ளது என்பதை அளவிடவும் முடியும். கம்யூனிஸ்டுக்களை ஒடுக்குகையில் ஸ்டாலினிஸ்டுகள் பாசிஸ்டுகளைக் காட்டிலும் தீய நோக்கங்களுடன் அதை நடாத்தியுள்ளனர். இதன் மூலம் எமது இயக்கம் ஸ்டாலினிசத்துடன் எதுவிதமான உறவுக்கும் செல்ல முடியாது என்பது தெளிவாகின்றது. ஸ்டாலினிசத்துடனான கொடுக்கல் வாங்கல்களை முடித்து, நான்காம் அகிலத்தைக் கட்டி எழுப்புவதன் மூலமே தொழிலாளி வர்க்கத்துக்கு புனர்வாழ்வளிக்க முடியும்," என தோழர் சுவார்ட்ஸ் குறிப்பிட்டார்.

நான்காம் அகிலத்தின் வேலைத்திட்டத்தினை கலந்துரையாடும் B S,A. மே தின கூட்டங்கள் ஸ்ரட்காட், செம்னிட்ஸ், பேர்ளின் நகரங்களிலும் நடைபெற்றன. தொழிற்சங்க மேதினக் கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும் கலந்து கொண்ட தொழிலாளர், இளைஞர்களிடையே B,S A. முன்நோக்கு பெரும் தாக்கத்தை உண்டுபண்ணியது. அங்கு B S A, பத்திரிகையான 'நோய ஆபைடர் பிரெஸ்' 400 பிரதிகள் விற்பனையாகியதோடு 400 மார்க் பெறுமதியான மார்க்சிச நூல்களும் விற்பனையாகின.


பேர்ளின் உலகத் தொழிலாளர் மாநாட்டு விஞ்ஞாபனம்

**ஏகாதிபத்திய யுத்தத்தையும் காலனித்துவத்தையும் எதிர்!**

(நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் விஞ்ஞாபனம்)

விலை— ரூபா 20


படிப்பகம்

www.padippakam.com



# தாய்லாந்து தொழிற்சாலை தீயில் வெந்து நூற்றுக்கணக்கானோர் பலி

மே 10ல் தாய்லாந்து விளையாட்டுப் பொருள் பக்டரியில் பிடித்த தீ, பன்னாட்டு முதலாளித்துவத்தின் அசுர கோலத்தை காட்டுகின்றதும், தொழிலாளி வர்க்கத்துக்கு எதிரானதுமான ஒரு காட்டுமிராண்டித்தனமான குற்றமாகும். இலாபச் சுரண்டல் அமைப்பினால் 200க்கும் அதிகமான தொழிலாளர்கள் கோரமாகக் கொலையுண்டுள்ளனர். இவர்களுள் பெரும்பான்மையினர் மணித்தியாலத்துக்கு 1டாலருக்கும் பெரிதும் குறைவாக உழைக்கும் இளம் பெண்கள்.

மே 14ம் திகதியளவில் இறந்தோரின் 240 சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. பாலைக் கூட இனம் கண்டறிய முடியாத விதத்தில் நூற்றுக்கும் அதிகமான சடலங்கள் கருகிப் பேய்க் கிடந்தன. 516க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் உயிரைக் காப்பாற்ற மேல்மாடியில் இருந்து குதித்ததில், இடுப்பு முறிந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். இத் தொழிற்சாலை நான்கு மாடிக் கட்டிடமாக இருந்த போதிலும் எந்தவிதமான தீயணைப்பு வசதிகளும் இருக்கவில்லை.

இந்த விபத்து 1911ல் நியூயோர்க் டிராங்கின் சேர்ட்வெயிஸ்ட் பக்டரியில் 145 பேரை —முக்கியமாக பெண் ஆடை தொழிலாளிகளைப் — பலி கொண்டதன் பின் வரலாற்றில் இடம் பெற்ற படுமோசமான தீயாகும். இத்தீ பற்றிக் குறிப்பிட்ட தாய்லாந்து அதிகாரி, இதுகாறும் மேல்மட்டத்தில் நடாத்திய தேடுதலின் விளைவாகவே இந்த 240 சடலங்கள் கிடைத்ததாகவும், புதையுண்டவர்களைத் தேடும் நடவடிக்கை தொடர்வதால் இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயரக் கூடுமென (மே 12ல) அஞ்சுவதாகவும் தெரிவித்தார்,


இந்தப் பன்னாட்டுக் கம்பனிப் பக்டரியில் கடந்த 8 மாதங்களுள் தீ ஆபத்து நான்கு தடவை ஏற்பட்டுள்ளது, எனினும் ஆயிரக்கணக்கான தொழிலாளர் வேலை செய்யும் இப் பக்டரியில் தீயணைப்புக் கருவியோ அல்லது அபாய அறிவிப்பு எச்சரிப்பு சமிக்கைகளோ கிடையாது. தீயணைப்பு வசதிகள் கிடையாத இந்த நான்கு மாடிக் கட்டிடத்தின் நாலாவது தட்டில் யன்னலும் கூடக் கிடையாது என்பதும் குறிப்பிடத் தக்கது.

## விபரம் வழங்க மறுப்பு

தொழிற்சாலை முதலாளிகள் இந்த தொழிற்சாலையில் தொழில் புரியும் 4000 தொழிலாளர்களின் பெயர் விபரங்களை வழங்கவும் மறுத்துள்ளனர் இது தேடுதல் நடவடிக்கைக்குப் பெரும் தடையாக உள்ளது, இங்குள்ள தொழிலாளர் பலர் சட்டவிரோதமாகத் தொழிலுக்கு அமர்த்தப்பட்ட சிறார்கள் என்பதை இது காட்டுகின்றது, தேடுதல் நடவடிக்கைகளின் போது கண்டெடுக்கப்பட்ட சடலங்களில் பல ஒன்றில் இச்சிறார்களுடையதாக இருக்க வேண்டும் அல்லது தொழில் புரியும் தாய்மாருடன் கூடவே வந்த குழந்தைகளாக இருக்க வேண்டும் என அறிக்கைகள் கூறுகின்றன.

தொழிலாளர் வெளியேறும் வாசற் கதவுகளில் ஒன்று பக்டரி பாதுகாப்பு ஊழியர்களால் பூட்டப்பட்டிருந்துள்ளது. தொழிலாளர்கள் பொம்மைகளைத் திருடிச் சென்று விடுவதைத் தடுக்கவே இங்ஙனம் உத்தரவிடப்பட்டிருந்தது என்பதைப் பொலிசார் ஊர்ஜிதம் செய்துள்ளனர், காடர் இன்டஸ்ரியல் என்ற இக்கம்பனி ஸ்ரோங்கன் கம்பனி என்ற பாதுகாப்பு நிறுவனத்தை வெளிப்புறப் பாதுகாவலுக்கு அமர்த்தியிருந்தது. ஆண், பெண் தொழிலாளர்கள் அனைவரும் வேலை முடிந்து வெளியேறு முன்பு உடல் ரீதியில் சோதனையிடப் பட்டனர், தொழிலாளர்கள் இரண்டு கதவினாலும் நுழைய முடியும். ஆனால் ஒவ்வொரு நாளும் இறுதி தொழிலாளி நுழைந்ததும் ஒரு கதவு மூடப்பட்டுவிடும்.

தீ பரவத் தொடங்கியதும் எஞ்சிய ஒரு கதவினால் வெளியேற முற்பட்ட தொழிலாளர்கள் அங்ஙனம் வெளியேறாமல் தடுக்கப்பட்டனர், வேலைத்தளத்தை விட்டு வெளியேறினால் வேலை நீக்கம் செய்யப்படுவர் என பக்டரி முதலாளிகள் பயமுறுத்தியுள்ளனர். தீபரவத் தொடங்கியதும் பூட்டிய கதவினைத் தம்மைத் தாமே காப்பாற்ற தப்பி ஓடியதை பாதுகாப்பு ஊழியர்கள் ஒப்புக் கொண்டனர்.



உயிர்ப் பாதுகாப்புத் தொழிலாளர்கள் பக்டரி இடிபாடுகளுக் கிடையே சடலங்களைத் தேடுகின்றார்கள்,

18 மாதங்களுக்கு முன்னர் தான் அமெரிக்காவின் வட கரோலினா மாநிலத்தில் ஒரு இறைச்சி பக்கட் செய்யும் நிலையத்தில் ஏற்பட்ட தீயில் 25 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். இந்த 'இம்பீரியல் பூட் புரடக்ஸ்' என்ற கம்பனிக் காரர்கள் தொழிலாளர்கள் இறைச்சியை களவாடிச் செல்கின்றார்கள் என்பதற்காகவே பூட்டிய கதவுகளுக்குள் வேலை வாங்குவதாகக் குறிப்பிட்டிருந்தனர். இதே பாணியிலான பதிலையே இந்த பன்னாட்டுக் கம்பனி முதலாளித்துவத்தின் கீழ் எந்தவொரு பண்டமும் —சிறுபிள்ளை விளையாட்டுச் சாமானில் இருந்து உரித்த கோழி வரை — ஒரு தொழிலாளியின் வாழ்க்கையை விட கூடிய பெறுமதி வாய்ந்ததாக உள்ளது.

பாங்கொக்கில் 200 க்கும் மேற்பட்ட தொழிலாளர்களைத் தீயில் கருக்கியமைக்கு பன்னாட்டுக் கம்பனி முதலாளிகள் நேரடிப் பொறுப்பு ஏற்க வேண்டும். பாங்கொக்குக்கு மேற்கே 50 கிலோ மீட்டர் தொலைவில் நாகோன் பாதொமில் உள்ள இந்த பக்டரி, துணியினால் மிருகங்களையும் பொம்மைகளையும் உற்பத்தி செய்து உலகம் பூராவும் ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டுள்ளது.

ஹொங்கொங்கில் தலைமையகத்தினைக் கொண்ட இந்த காடர் ஹோல்டிங்ஸ் என்ற கம்பனி, கடந்த இரண்டு தசாப்தங்களாக தாய்லாந்தில் யப்பான். அமெரிக்கா. தாய்வான் பன்னாட்டுக் கம்பனிகள் நிறுவியுள்ள நூற்றுக்கணக்கான கம்பனிகளில் ஒன்றாகும். முதலாளித்துவப் பத்திரிகைகள் தாய்லாந்தினை பொருளாதார அபிவிருத்திக்கான ஒரு மாதிரியாகக் காட்டி வந்துள்ளன, அத்தோடு தென்கிழக்கு ஆசியாவின் 'ஐந்து புலி'களில் ஒன்றாகவும் வருணிக்கப்பட்டுள்ளது, தாய்லாந்து வர்த்தக முதலீடுகளுக்கு வரையறையற்ற சந்தர்ப்பங்களை வழங்குகின்றது. நீண்டகால இராணுவ ஆட்சியினால் தொழிலாளி வர்க்க சம்பள மட்டம் நசுக்கப்பட்டு, குறைந்த ஊதியத்தில் ஊழியம் சுரண்டப்படுகின்றது.

ஆனால் சமீப காலமாக மூலதன முதலீடுகள் இடம் பெயரத் தொடங்கியுள்ளன. கம்பனிச் சொந்தக்காரர்கள் இந்தோனேசியாவிலும் தென் சீனாவிலும் மலிவான உழைப்பை நாடிச் செல்கின்றனர். தாய்லாந்தில் பக்டரிகளைக் கொண்டுள்ள கம்பனிகள் உற்பத்திச் செலவைக் குறைத்து உற்பத்தித் திறனை கூட்டும்படி நெருக்கப்பட்டுள்ளன, நாகம் பாதொமில் உள்ள பக்டரியிலும் இதுவே இடம் பெறுகின்றது.

உலகளாவிய உற்பத்தியின் அபிவிருத்தியைத் தொடர்ந்து இராட்சத பன்னாட்டுக் கூட்டுத்தாபனங்கள் உலகளாவிய முறையில் உற்பத்தியை ஒன்றிணைக்க முடிந்துள்ளது. அவர்கள் ஒவ்வொரு கண்டத்திலும் பக்டரிகளை அமைக்க முடிந்துள்ளது. குறைந்த உழைப்பினைத் தேடி பக்டரிகளை அமைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

உலகளாவிய உற்பத்தியின் அபிவிருத்தி எனும் போது அது தொழிலாளி வர்க்கம் தனது போராட்டங்களைத் தேசிய எல்லைகளைக் கடந்து ஐக்கியப்படுத்தியாக வேண்டியதன் அவசியத்தைக் குறிக்கின்றது. கிழக்கு ஆசியா பூராவும் ஒரு பிரமாண்ட

(16ம் பக்கம் பார்க்க)

சிலாபம்:

# நகரசபைத் தொழிலாளர்களின் வீடுகள் உடைத்தெறியப்பட்டன

சிலாபம் நகரசபை தொழிலாளர்களின் வீடுகள் நகரசபை அதிகாரிகளால் உடைத்தெறியப்பட்ட சம்பவம் மார்ச் 1ம் திகதி இடம் பெற்றுள்ளது. தொழிலாளர்கள் சேவைக்குச் சென்றிருந்த வேளையில் இடம்பெற்ற இந்த வீடுடைப்புப் பற்றிய தகவல் கிடைத்ததும் தொழிலாளர்கள் வேலையை நிறுத்தி எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்தத் தொழிலாளர்கள் குடும்பங்கள் பல தலைமுறைகளாக—எழுபத்தைந்து ஆண்டுகளாக இங்கு வசித்து வந்துள்ளனர். இத்தொழிலாளர்களை இங்கிருந்து வெளியேற்றும் முயற்சி கடந்த 10 ஆண்களாக இடம்பெற்று வந்தது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் 20 பேர்ச்சஸ் காணி தருவதாகக் கூறி தொழிலாளர்களை தெதுறுஓயா பகுதிக்கு கடத்தும் சதிகளில் நகரசபை நிர்வாகம் ஈடுபட்டு வந்தது. ஆனால் இந்த தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசத்துக்கு குடிபெயர்வதைத் தொழிலாளர்கள் அடியோடு எதிர்த்து வந்தனர். ஒதுக்குப்புறமான இவ்விடத்துக்கு குடியிருக்கச் சென்றால் போக்குவரத்துச் செலவுக்குப் பெருமளவில் பணம் செலவிட நேரிடும் எனவும் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இதொகா தலைவர் எஸ். தொண்டமானைச் சந்திக்கச் சென்ற தொழிலாளர்களுக்கு செயலாளர் எஸ். செல்லச்சாமியையே சந்திக்க முடிந்தது. அவர் மறுநாளே நிலைமைபற்றி ஆராயப் பிரதிநிதியை சிலாபத்துக்கு அனுப்புவதாக வாக்குறுதியளித்தார் வந்த இதொகா பிரதிநிதி செய்தது என்ன? நகரசபை அதிகாரிகளின் திட்டத்தை ஏற்றுக் கொண்டு, தொழிலாளர்களைத் தெதுறுஓயாவுக்கு செல்லும்படி கூறியதுதான்'

படிப்பகம்

www.padippakam.com



# ஹேகப் தொழிற்சங்கத் தலைவருக்கு எதிரான வேட்டையை நிறுத்து!

ஐக்கிய தேயிலை, றப்பர் உள்நாட்டு பொருட் தொழிலாளர் சங்கத்தின் ஹேகப் கிளைத் தலைவர் குவின்டஸ் விமலசேகரவினை அங்கத்துவத்தில் இருந்து விலக்குவதற்குத் தாய்ச் சங்கத்தின் ஸ்டாலினிசத் தலைவர்கள் எடுத்துள்ள பொலிஸ் தீர்மானத்துக்கு எதிராக ஹேகப் கிளை அங்கத்தவர்கள் ஆரம்பித்துள்ள போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு 'தொழிலாளர் பாதை'யும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் சகல வர்க்க நனவுள்ள தொழிலாளர்களையும் வேண்டுகின்றன.

ஹேகப் கிளை அங்கத்தவர்களினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, தாய்ச் சங்கத் தலைமைப் பீடத்துக்கு அனுப்பி வைத்துள்ள பிரேரணை பின்வருமாறு குறிப்பிடுகின்றது: ''தங்களின் 1993/04/21ம் திகதிய கடிதத்தின் மூலம் எமது கிளைச் சங்கத் தலைவர் தோழர் குவின்டஸ் விமலசேகரவின் அங்கத்துவத்தினை தடை செய்வதை நாம் வன்மையாகக் கண்டனம் செய்கின்றோம். மேலும் அக்கடிதத்தின் மூலம் தொடுக்கப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களை நாம் நிராகரிப்பதோடு, அவரின் அங்கத்துவத்தினைத் தடை செய்வதானது அமைப்பு விதிகளுக்கு முரணான ஜனநாயக விரோத நடவடிக்கையாகும் என நாம் கருதுகின்றோம். ஆதலால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை வாபஸ் பெறும்படியும் உடனடியாக அவரின் அங்கத்துவத்தினை ஊர்ஜிதம் செய்யும்படியும் ஹேகப் அங்கத்தவர்களான நாம் வேண்டுகின்றோம்''.

ஹேகப் கிளை அங்கத்தினர்கள் தமது கிளைத் தலைவரை காக்கும் பொருட்டு எடுத்துள்ள இத்தீர்மானத்தினை ஸ்டாலினிஸ்டுகள் குப்பைக் கூடைக்குள் வீசிவிட்டு, தமது பிற்போக்கு முடிபினைத் தொடர்ந்தும் பேணிவருகின்றனர். தாய்ச் சங்கத் தலைமையில் பதுங்கிக் கொண்டுள்ள மாஸ்கோ ஸ்டாலினிச எதிர்ப் புரட்சிப் பாடசாலையில் பயிற்சி பெற்றவரான உபாலி குலரத்ன என்ற பேர்வழி ''ஹேகப் சங்கம் இல்லாமல் போனாலும் குவின்டசுக்கு அங்கத்தும் வழங்கு மாட்டோம். புதிதாக நிறுவப்பட்டுள்ள ஆடைத் தொழிற்சாலையில் ஒரு சங்கத்தை அமைப்போம்'' என்ற பாஷையில் ஊளையிட்டுள்ளான.

ஹேகப் கிளைச் சங்கத் தலைவரையிட்டு தாய்ச் சங்கத் தலைவர்கள் இத்தனை பீதி கொண்டுள்ளதற்குக் காரணம் என்ன? ஹேலீஸ் கம்பனிகளுக்குச் சொந்தமான ரவி புருசு கம்பனியின் தொழிலாளர்கள் தொழில், சம்பளம், சேவை நிலைமைகள் தொடர்பாகத் தொடுத்த போராட்டம் தனிமைப்பட்டு விடாமல் இருக்கும் பொருட்டு ஹேலீஸ் குறூப்பைச் சேர்ந்த ஏனைய தொழிலாளர்களின் ஆதரவினைத் திரட்ட முன்நின்று போராடியதே. ரவி புருசை மூடி, பக்டரி இயந்திரங்களை வேறிடங்களுக்கு மாற்ற கம்பனி நிர்வாகம் தொழிற் சங்க ஸ்டாலினிசத் தலைமையின் உதவியுடன் சதி செய்தது. இந்நிலையில் அவர்களின் போராட்டத்தினைக் குழப்பியடித்து அவர்களை வேலைக்குத் திருப்பி அனுப்பும் ஸ்டாலினிசத் தொழிற சங்கத் தலைவர்களின் முயற்சிக்கு எதிராக அயல்புற தொழிலாளர்களையும் இப்போராட்டத்துக்கு ஆதரவாக அணிதிரட்ட குவின்டஸ் முன்நின்றார். அதற்கான வேலைத்திட்டத்தினை அவர் முன்வைத்தார். எந்தவிதமான உருப்படியான போராட்ட வேலைத்திட்டமும் வழங்காது, தம்மை மூன்று மாத காலமாக அலைய வைத்த ஸ்டாலினிசத் தலைவர்களுக்கு எதிராக ரவி தொழிலாளர்கள் கொதித்து எழுந்தனர். இந்நிலையில் ஹேகப் கிளைச் சங்கத் தலைவர்களின் வழிகாட்டலுக்கு ஹேகப் அங்கத்தவர்களிடம் இருந்து நியாயமான ஆதரவு கிடைத்தது. ஏப்ரல் 20ம் திகதிய கூட்டத்தில் குவின்டஸ் முன்வைத்த வேலைத்திட்டம் தொழிலாளர் ஆதரவைப் பெற்றது.

இதைத் தொடர்ந்தே ஸ்டாலினிஸ்டுகள் குவின்டசின் அங்கத்துவத்தைத் தடை செய்ததோடு மே 12ம் திகதி தொழிலாளர்களைப் பக்டரிக்குள் திருப்பி அனுப்பினர். தமது உரிமைகளுக்காகக் கிளர்ந்து எழும் தொழிலாளர்களுக்கும் அவர்களின் போராட்டத்துக்குத் தலைமை தாங்கும் போராளிகளுக்கும் எதிரான முதலாளித்துவ அரசினதும், முதலாளிகளினதும் பொலிஸ் படையாக ஸ்டாலினிசத் தொழிற்சங்கத் தலைவர்கள் களத்தில் குதித்துள்ளமையை ஹேகப் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

ஹேகப் கிளைத் தலைவரான குவின்டஸ் விமலசேகர புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முன்னணி உறுப்பினர்களில் ஒருவர். நீண்ட காலமாக ஹேகப் கிளைத் தலைவராக செயற்பட்டு வந்த அவர் தொழிலாளர்கள் முகம் கொடுத்த சகல பிரச்சினைகளிலும் முன்னணியில் நின்று போராடியவர், ஹேகப் முதலாளியின் நிபந்தனைகளை தொழிலாளர் மேல் கட்டியடிக்க ஸ்டாலினிசத் தாய்ச்சங்கத் தலைமை முயன்ற சகல தருணங்களிலும் அவற்றுக்கு எதிராக குவின்டஸ் ஈவிரக்கமின்றிப் போராடியவர் குவின்டஸ் வெறும் போராளி அல்ல. அவர் ஹேகப் தொழிலாளர்களின் நிலைமையை அனைத்துலகத் தொழிலாள வர்க்கம் முகம் கொடுக்கும் நிலைமையின் ஒரு பாகமாகக் காட்டவும், தொழிலாளர்களின் உரிமைகளை ஏகாதிபத்தியவாதிகளையும் அவர்களின் கைக்கூலி தேசிய ஆட்சியாளர்களையும் தூக்கிவீசும் சோசலிச வேலைத் திட்டத்தின் இணைந்த பாகமாக காட்டவும் சளைக்காது போராடியவர்.


இலவசக் கல்வியைக் காப்பது எப்படி?

இலவசக் கல்விக்கு குழிபறிக்கும் யூ.என்.பி. திட்டத்துக்கு எதிராக பு.க.க. கூட்டிய மாநாட்டு அரசியல் அறிக்கை

விலை: ரூபா. 7-00



தொழிலாளர் பாதை

சந்தாதாரர் ஆகுங்கள்

அஞ்சல் கட்டணம் உட பட ''தொழிலாளர் பாதை'' சந்தா விபரம்

1 மாதம் — ரூபா 8/- 3 மாதம் — ரூபா 24/-
6 மாதம் — ரூபா 48/- 1 வருடம் — ரூபா 96/-

பெயர்:..........................................

முகவரி:..........................................

சந்தாக் காலம்:......... ரூபா......... சதம்.........

சந்தாப் பணத்திற்காகிய அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி:- ''தொழிலாளர் பாதை''

90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு-10.


# அட்டன் மார்க்கிசப் புத்தகக் கண்காட்சிக்கு பேராதரவு

தொழிலாளர், ஒடுக்கப்படுவோர், இளைஞர்கள் மத்தியில் மார்க்சிச நனவை உண்டுபண்ணும் இலக்கில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினாலும் இளம் சோசலிஸ்டுக்களாலும் நடாத்தப்பட்டு வரும் மார்க்சிசப் புத்தகக் கண்காட்சியின் ஒரு அங்கமாக மே 23—24ம் திகதிகளில் அட்டன் நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சி தோட்டத் தொழிலாளர்கள், இளைஞர்களிடையே பெரும் ஈர்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

கண்காட்சி நடைபெற்ற இரு தினங்களிலும் புத்தகங்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டு அட்டன், ட்க்கோயா, கொட்டகலை, அஸ்கேலியா முதலான இடங்களில் இருந்து தமிழ் பேசும் தொழிலாளர்களும் இளைஞர்களும் வருகை தந்தனர். மார்க்ஸ். ஏங்கெல்ஸ், லெனின் ட்ரொட்ஸ்கியின் ஆக்கங்களும் நான்காம் அகிலத்தினதும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும் வெளியீடுகளும் நூற்றுக் கணக்கில் விற்பனையாகின.

இக்கண்காட்சியில் கலந்து கொண்ட பல்வேறு சமூகத் தட்டினரும் — தோட்டத் தொழிலாளர், இளைஞர்கள், ஆசிரியர்கள், நடைபாதை வியாபாரிகள் போன்றோர் புரட்சிக் கம்யூனிஸ் கழக முன்நோக்கினை பேலும் கலந்துரையாடும் பொருட்டு தமது முகவரிகளை வழங்கியமை ஒரு சிறப்பம்சமாக விளங்கியது.

விற்பனையான நூல்களுள் மார்க்ஸ்-எங்கெல்சின் படைப்புக்களும், நான்காம் அகிலத்தின் ஸ்தாபகப் பத்திரமான முதலாளித்துவத்தின் மரண ஓலமும் நான்காம் அகிலத்தின் பணிகளும் (தமிழ் மொழிபெயர்ப்பு) ஆகியவற்றுக்குப் பெருமளவு கேள்வி இருந்தது சோவியத் யூனியன் எங்கே செல்கிறது?, சோவியத் யூனியனின் முடிவு, இலவசக் கல்வியைக் காப்பது எப்படி? என்பன போன்ற 'தொழிலாளர் பாதை'யின் சமீபகால வெளியீடுகளும் பெருமளவில் விற்பனையாகின.



புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் 25 வது ஆண்டு நிறைவையொட்டி நாடு பூராவும் நடாத்தப்பட்டு வரும் புத்தகக் கண்காட்சிகளில் கலந்து கொள்ளுமாறும் மார்க்சிசத்தினைக் கற்குமாறும் தொழிலாளர் பாதை தொழிலாளர், ஒடுக்கப்படுவோர், இளைஞர்களை வேண்டுகின்றது. முதலாளித்துவத்தின் இன்றைய மிலேச்ச நிலைமைக்கு எதிராக அதற்கு முடிவு கட்டவும், ஸ்டாலினிசம் பொறிந்து போயுள்ள நிலையில் அதன் மிச்சசொச்சங்கள் யூகோசலாவிய, ரஷ்யப் பாணியில் கொம்பிரதோர் கும்பல்களாக மாறி, ஏகாதிபத்திய யுத்தக் கரத்தையில் இழுபடும் நிலையிலும் உலக சோசலிசத்துக்கான ஒரே முன்நோக்கும் வழிகாட்டியும் இன்றைய மார்க்சிசமான ட்ரொட்ஸ்கிசமே.

படிப்பகம்

www.padippakam.com



# புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக 25வது ஆண்டு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பும் போராட்டத்தின் புதிய காலகட்டத்துக்குத் தயாராகின்றது,

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் 1968 ஜூனில் உதயமாகியது. ட்ரொட்ஸ்கிசத்தில் இருந்து ஓட்டமெடுத்த பப்லோவாத ஐக்கிய செயலகத்தின் ஆதரவுடன், அதன் இலங்கைக் கிளையான லங்கா சமசமாஜக் கட்சி 1964ல் சிறிமா பண்டாரநாயக்கவின் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டரசாங்கத்துக்கு சென்றதன் மூலம் இழைத்த மாபெரும் கொலைகாரக் காட்டிக் கொடுப்பின் நான்கு ஆண்டுகளின் பின்னர் பு.க.க. உதயமாகியது.

மாஸ்கோ ஸ்டாலினிச அதிகாரத்துவமும் அதன் அங்கங்களான ஸ்டாலினிசக் கட்சிகளும் இடதுபுறம் தள்ளப்பட்டு, உருக்குலைந்த தொழிலாளர் அரசுகளை ஏற்படுத்தும் எனவும் ஆதலால் சகல ட்ரொட்ஸ்கிஸ்டுகளும் இக்கட்சிகளுள் கரையுண்டு போக வேண்டும் எனவும் கட்டளையிட்ட பப்லோவும் ஏர்ணஸ்ட் மண்டேலும் நான்காம் அகிலத்தை அழித்துவிட முயன்றனர். இந்த சந்தர்ப்பவாதிகள் சமூக ஜனநாயகக் கட்சிகள் அல்லது தேசிய முதலாளித்துவக் கட்சிகள் அல்லது குட்டி முதலாளித்துவ இயக்கங்களுள் நுழைந்து கொள்ளும்படி அல்லது அவற்றுடன் கூட்டுச் சேர்ந்து கொள்ளும்படி ஆலோசனை வழங்கினர். இதன் மூலம் புரட்சித் தலைமை நெருக்கடியை தீர்த்து வைக்கும் நான்காம் அகிலத்தின் பணியைச் சிதறடிக்க முயன்றனர்.

1964ல் லங்கா சமசமாஜக் கட்சி முதலாளிவர்க்கத்துடன் வெளிவெளியாக இணைந்து கொண்ட மாபெரும் காட்டிக்கொடுப்பின் நடுமையமாக இந்த பப்லோவாத அரசியல் விளங்கியது.

இந்தத் துரோகத்துக்கு எதிராக நான்காம் அகிலத்தின் வேலைத்திட்ட அடிப்படையைக் காக்க உலகளாவிய ரீதியில் தொடுத்த போராட்டத்தின் ஒரு அங்கமாகவே இலங்கையில் 1968ல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பிறந்தது, திரிபுவாதிகளில் இருந்து பிளவுபட்டு 1953ல் நிறுவப்பட்ட அனைத்துலகக் குழுவின் ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் போராட்டத்தை பு.க.க. முன்னெடுத்தது. அந்தவிதத்தில் பு.க.க. ஸ்தாபிதம் ஒரு அனைத்துலகவாதப் பண்பினை சூல்கொண்டிருந்தது. ஏகாதிபத்தியத்தினைப் பூலோகத்தில் இருந்து துடைத்துக் கட்டி, உலக சோசலிசத்தை வெற்றிக்கு இட்டுச் செல்லும் மூலோபாயத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் எந்தவொரு நாட்டிலும் தொழிலாளி வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றப் போராட முடியாது என்பதை பு.க.க. உறுதியாக நம்பியது. அத்தோடு சோசலிசப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்லக்கூடிய ஒரேசக்தி தொழிலாளி வர்க்கமே; மார்க்சிசம் வேறு எந்தவொரு சக்தியையும் மாதிரியாகக் கொள்ள முடியாது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு போராடியது.

இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்திடையே ட்ரொட்ஸ்கிச அனைத்துலகவாதப் பாரம்பரியங்கள் நிலைகொண்டிருந்தன. 1940 பதுகளின் ஆரம்பத்தில் லங்கா சமசமாஜக் கட்சி ஸ்டாலினிஸ்டுகளைக் கட்சியில் இருந்து கலைத்ததோடு 1942ல் ட்ரொட்ஸ்சத்தை முழுமனே அங்கீகரித்த ஒரு கட்சியாகவும் பரிணாமம் அடைந்தது சமசமாஜக் கட்சி இந்திய ட்ரொட்ஸ்கிஸ்டுகளுடன் சேர்ந்து 1942ல் நான்காம் அகிலத்தின் கிளையாக இந்திய போல்ஷிவிக்—லெனினிஸ்ட் கட்சியையும் நிறுவியது. இந்த ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் தலைமையிலே1940பதுகளில் இந்தியத் துணைக் கண்டத்திலும் சிறப்பாக இலங்கையிலும் தொழிலாளி வர்க்கத் தலைமையில் காலனித்துவ எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

1947, 48ல் இந்தியாவிலும் இலங்கையிலும் நிறுவப்பட்ட முதலாளித்துவ அரசுகள் ஏகாதிபத்திய அமைப்பின் ஒரு பாகமாகும் எனவும். நிஜ சுதந்திரத்தினை அடையச் சோசலிசப் புரட்சிக்குப் போராட வேண்டும் எனவும் இந்திய போல்ஷிவிக் — லெனினிஸ்ட் கட்சி (BLPI) சரியான விதத்தில் சுட்டிக்காட்டியது. ஏகாதிபத்திய நெருக்குவாரத்தின் எதிரில் அடிபணிந்த பீ.எல்.பீ.ஐ. தலைவர்கள் இந்திய (காங்கிரஸ்) சோசலிஸ்ட் கட்சியின் உள்ளும், இலங்கை முதலாளிகளுடன் கூட்டுக்கு ஆயத்தமாகி வந்த லங்கா சமசமாஜக் கட்சியின் உள்ளும் 1950ல் கரையுண்டு போயினர். 1968ல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஆரம்பம், இந்த ஓடுகாலிகள் கைவிட்ட ட்ரொட்ஸ்கிச சம்பிரதாயங்களையும், மரபுகளையும் முன்னெடுப்பதைக் குறித்தது.

கடந்த 25 ஆண்டுகளாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இலங்கைத் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களுக்கு இலங்கையினுள் தீர்வு உண்டு என்ற படு கேவலமான தேசியவாதத்தினை நிராகரித்ததோடு உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாகத் தனது முன்நோக்கினையும் வேலைத் திட்டத்தினையும் வரைந்து கொண்டது. தொழிலாள வர்க்க அனைத்துலகவாதத்துக்கான போராட்டம் அதன் அடிப்படையாய் விளங்கியது. இப்போராட்டத்தில் பு.க.க, ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டை அடியொற்றியது. மறைந்த பு.க,க. செயலாளர் தோழர். கீர்த்தி பாலசூரிய எழுதிய 'ஜனதா விமுக்தி பெரமுனையில் அரசியலும் வர்க்கத் தன்மையும் என்ற நூல் இப்போராட்டத்தின் ஒரு உச்சக்கட்டமாக விளங்கியது. இந்தியாவில் சோசலிசத் தொழிலாளர் கழகம் நிறுவப்பட்டமை பு.க.க. அரசியல் போராட்டத்தின் ஒரு முக்கிய மைற்கல்லாகும்.

சமசமாஜ — கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் முதலாளித்துவ சி.ல.சு.க, யுடன் அமைத்த கூட்டரசாங்கப் பிடியில் இருந்து தொழிலாளர்களை விடுதலை செய்தல், 1971 ஏப்ரல் கிளர்ச்சி ஒடுக்குமுறை அரசியல் கைதிகள் விடுதலை, தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிரான இனவாத ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்பன 1970பதுகளில் பு.க.க. போராட்டங்களில் சிறப்பம்சமாக விளங்கியது,

1977ல் யூஎன்பி ஆட்சிக்கு வந்ததில் இருந்து தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டும் போராட்டம் உக்கிரம் கண்டதோடு 1987ல் இந்தியப் படைகளை தருவித்து வட—கீழ் மாகாண மக்களை இரத்தக் களரியில் மூழ்கடிப்பதை எதிர்த்த ஒரே கட்சி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே. ஏகாதிபத்திய அங்கீகாரத்துடன் இடம்பெற்ற இந்திய ஆக்கிரமிப்பு விடுதலைப் புலிகள் உட்பட்ட தமிழ் முதலாளித்துவ தலைமைகளின் அரசியல் வங்குரோத்தை காட்டியது இவற்றின் பிற்போக்கு நிலைப்பாடுகளுக்கு எதிராக பு.க.க. தமிழ் ஈழம் — இலங்கை சோசலிச குடியரசு வேலைத்திட்டத்துக்குப் போராடியது. பாசிச ஜேவீபியினதும், யூ.என்.பி. அரசாங்கத்தினதும் பயங்கரவாதத்துக்கு எதிராக 1980பதுகளின் கடைப்பகுதியில் பு.க.க. அனைத்துலகக் குழுவுடன் கூட்டாக முன்னெடுத்த போராட்டம் பல படிப்பினைகளை தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கு வழங்கியது.

அனைத்துலகக் குழுவின் பிரித்தானியக் கிளையாக விளங்கிய தொழிலாளர் புரட்சிக் கட்சியினுள் (WRP) வளர்ச்சி கண்ட பப்லோவாத புற்றுநோய்க்கு எதிராகத் தொடுத்த போராட்டம் ஹீலி—பண்டா— சுலோட்டர் ஓடுகாலிகளுடன் ஏற்பட்ட பிளவும் அனைத்துலகப் போராட்டத்தில் ஒரு திருப்புமுனையாக விளங்கியது. இதில் நா.அ.அ.கு பெரும்பான்மையினர் கண்டவெற்றி உலகத் தொழிலாளி வர்க்கத்துக்கு கிடைத்த வெற்றியாகும்.

1980பதுகளில் உலக தொழில் மட்டத்தில் ஏற்பட்ட பெரும் வளர்ச்சி உலக பொருளாதாரத்தில் பெருப் ஒருங்கிணைப்பை. ஏற்படுத்தியதோடு, நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இல்லாத விதத்தில் ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு இடையேயான மோதுதலை உண்டுபண்ணியது. பெரும் பொருளாதார வீழ்ச்சிக்கு பலியாகியுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம் இராணுவ பலத்தைப் பாவித்து, தாது பிடியை மீண்டும் உறுதி செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதை பனாமா, கிரனடா, ஈராக், சோமாலியா, பொஸ்னியா. கம்போடியா 'மனிதாபிமான உதவி வினியோகத்' தலையீடுகள் காட்டுகின்றன. இந்நெருக்கடியின் மத்தியில் சகல தேசியவாத வேலைத் திட்டங்களும் பொறிந்து வீழ்ந்துள்ளன.

பீ.எல்.ஓ. விடுதலைப் புலிகள், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் போன்ற முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் ஏகாதிபத்தியத் தலையீட்டை வேண்டி நிற்பதோடு ஏகாதிபத்திய ஏஜன்சியாக மாறும் தமது தயார் நிலையையும் காட்டிக் கொண்டுள்ளன. இன, மத அடிப்படையில் இடம்பெறும் இரத்தக் களரி மோதுதல்கள் தேசியவாதத்தின் நாற்றமெடுப்பு பற்றிய நல்ல படிப்பினையைத் தொழிலாளி வர்க்கத்துக்கு வழங்கியுள்ளது.

ட்ரொஸ்கிஸ்ட்டுகளை 1930 பதுகளில்இருந்து படுகொலை செய்துவந்த சோவியத் யூனியன் ஸ்டாலினிஸ்டுகளில் இருந்து தோன்றிய யெல்ட்சின் வகையறா கொம்பிரதோர் கும்பல்கள் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களுக்கு தாக்குதல் தொடுப்பதோடு முதலாளித்துவத்தினை சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் புனருத்தாரணம் செய்யும் வேலையில் இறங்கி உள்ளன. சீனா, வியட்னாம், கியூபா தேசியவாத தலைமைகள் 'சுதந்திர வர்த்தக வலயங்கள்' என்ற பேரில் அடிமை முகாம்களை திறக்க அனுமதி வழங்கியுள்ளனர்.

இந்தியாவை ஏகாதிபத்திய பன்நாட்டுக் கம்பனிகளுக்கு விற்றுக் தள்ளுவதில் நரசிம்மராவ் அரசாங்கத்தை காட்டிலும் தாம் சிறந்தவர்கள் எனக் காட்டும் பாசிச இரத்தக் களரிகளைச் சிருஷ்டிப்பதில் பாரதீய ஜனதா கட்சி ஈடுபட்டுள்ளது. தமிழ் நாடு தொடக்கம் காஷ்மீர் வரை பிரிவினையைத் தூபம் போடுவதில் முதலாளித்துவ பிற்போக்கு கும்பல்கள் குதித்துள்ளன. சீ,பீ ஐ, சீ.பீ எம். தலைவர்கள் இந்த ஏகாதிபத்தியப் பாய்ச்சலுக்கு துணை போவதோடு தமது ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களில் ஏகாதிபத்திய, முதலாளித்துவ அரசியல்வாதிகளாகத் தொழிற்படுகின்றனர்.

இலங்கையில் தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிரான இனவாத யுத்தம், கிராமப்புற படுகொலைகள், தொழிலாளர்கள் மீதான பயங்கர ஒடுக்குமுறைகளை கட்டவிழ்த்துள்ள யூஎன்பி அரசாங்கம் ஒரு புறத்தில் இராணுவ—பொலிஸ் — கொலைகாரக் கும்பல்கள் மீதும் மறுபுறத்தில் சமசமாஜ கம்யூனிச—நவசமசமாஜ — இ.தொ,கா. துரோகிகளின் காட்டிக் கொடுப்பின் மீதும் சாய்ந்துகொண்டுள்ளது. பிரேமதாச அத்துலத்முதலி படுகொலைகள் முதலாளித்துவ நெருக்கடியின் ஆழத்தின் பரிமாணத்தையும், முதலாளித்துவ கும்பல்களுக்கிடையேயான மோதுதல்களையும் காட்டுகின்றது. இந்நிலையில் இலங்கையில் தலைநீட்டியுள்ள பிரச்சாரத்தினை முன்னணி ஏகாதிபத்திய பத்திரிகைகள் ஆரம்பித்துள்ளதோடு. இதற்கு ஒத்தூதும் விதத்தில் விடுதலைப் புலிகள் தலைமை 'தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு' காண ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டை வேண்டி நிற்கின்றது.

இதொகா—சமசமாஜ—கம்யூனிச—நவசமசமாஜ தலைவர்கள் தாம் முதலாளித்துவ அரசியல்வாதிகள் என்பதை அப்பட்டமாகக் கூறிக்கொண்டு, முதலாளித்துவக் கட்சிகளுடன் சேர்ந்துள்ளதோடு சோசலிசத்துக்காக வக்காலத்து வாங்குபவர்களும் அல்லர் என்பதையும் கூறியுள்ளனர்,

இத்துரோகிகளை தொழிலாளர் வர்க்க இயக்கத்தினுள் இருந்து வெளியேற்றுவதோடு ஏகாதிபத்திய யுத்தத்துக்கும், காலனித்துவ வேலைத்திட்டத்துக்கும் எதிராக அனைத்துலகத் தொழிலாளி வர்க்கத்தை உலக சோசலிசம் புரட்சி வேலைத்திட்டத்துக்கு அணிதிரட்ட நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் போராடுகின்றது. 25 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் பு.க.க., அனைத்துலக சோசலிசப் புரட்சியின் பதாகையை இலங்கையினுள்ளும் இந்தியத் துணைக் கண்டத்தினுள்ளும் உயர்த்திப் பிடிக்கின்றது. இந்தக் கால் நூற்றாண்டு காலப் போராட்டம் மார்க்சிசம், லெனினிசம், ட்ரொட்ஸ்கிச அடிப்படைக் கொள்கைகளையும் வேலைத் திட்டத்தையும் வளர்த்தெடுக்க நடாத்திய ஈவிரக்கமற்ற சமரசமற்ற போராட்டத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

★ புரட்சித் தலைமையை கட்டியெழுப்ப வர்க்க நனவு கொண்ட சகல தொழிலாளர், ஒடுக்கப்படுவோர், இளைஞர்களும் ஒன்றிணையுங்கள்!

★ மார்க்சிச கலாச்சாரத்தினை மீண்டும் புத்துயிர் பெறச் செய்ய மார்க்சிச நூல்கள், பிரசுரங்களை வெளியிடும் போராட்டத்துக்குக் கை கொடுங்கள்!

★ 'தொழிலாளர் பாதை' 'கம்கறு மாவத்த' பத்திரிகைகளை கட்டியெழுப்ப உதவி நிதி வழங்குங்கள்! இந்த இலக்கில் பு.க.க. ஆரம்பித்துள்ள 5இலட்சம் உதவி நிதியை வெற்றி கொள்ள உதவுமாறு தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை வேண்டுகின்றோம்.

★ ஜூன் 27ம் திகதி பு.க.க, 25வது ஆண்டுநிறைவுக் கூட்டத்துக்கு வருகை தாருங்கள்!

கொழும்பு – 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90ல் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# பிரேமதாச படுகொலையின் பின்னணியில்

## — புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் குழு அறிக்கை —

மே 1ம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதி பிரேமதாசவின் படுகொலை இலங்கை ஆளும் வர்க்கம் முகம் கொடுத்துள்ள ஆழமான நெருக்கடியின் அப்பட்டமான வெளிப்பாடாகும். இந்த யூஎன்பி. தலைவர் முதலாம் நம்பர் ஏகாதிபத்திய கைக்கூலியாக ஆட்சி நடாத்தி வந்தவர். எனினும் கைக்குள் போட்டுக் கொள்வதன மூலம் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ வர்க்க ஆட்சியைக் காக்கத் தலைமை வழங்கக் கூடிய பேர்வழியாக ஏகாதிபத்தியவாதிகள் பிரேமதாசவை தேர்ந்தெடுத்தது இந்த அரசியல் நிலைமையிலேயே. முன்னணி ஏகாதிபத்திய வங்கியாளர்களின் களிலும் சித்திரவதை முகாம்களிலும் தள்ளப்பட்டனர். சி.ல.சு.க. போன்ற ஏனைய முதலாளித்துவ கும்பல்களும் சமசமாஜ, ஸ்டாலினிச, நவசமசமாஜ தலைவர்களும் இந்தப் பலியெடுப்புகளுக்கு ஆதரவு வழங்கினர். பிரேமதாச அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தை எனப்பட்டது. தோட்டத்துறையை தனியார் மயமாக்குவதற்கு முன்னுரிமை வழங்கிய பிரேமதாச அரசாங்கம் தொழிலாளர் போராட்டம் பரவலாம் என்ற பீதியினால் தொழில், சம்பள வெட்டுக்களை ஒத்திவைக்கும்படி கம்பனிகளுக்கு உத்தரவு பிறப்பிக்க நேரிட்டது. கிராமப் புறங்களில் சூப்புச் சலுகையைத் தமது கும்பல்களின் கைக்குள் கொணர்வதுமே. 'ஜனநாயகம்' பற்றிய மோசடியான கதையளப்புக்கள் எல்லாமே பிரேமதாச அரசாங்கத்தின் பேரில் வளர்ச்சி கண்டுள்ள வெகுஜன வெறுப்பின தலையில் நின்று அரசியல் அதிகாரத்தினை தமது கைக்குள் போட்டுக் கொள்ளும் ஒரு ஏமாற்று வித்தை.

அவரின் கொலையின் பின்னணியில் நாட்டுக்கு நாடு அரசியல் நிலைமையை ஆட்டம் காணச் செய்து தமது ஆளுமைக்குத் தூபம் போடும் ஏகாதிபத்தியச் சக்திகளும் அவர்களின் கைக்கூலியாக ஆட்சியைத் தமது கைக்குள் போட்டுக் கொள்ளும் நாய்ச் சண்டையில் ஈடுபட்டுள்ள முதலாளித்துவக் கும்பல்களும் உள்ளன என்பதில் சந்தேகம் இல்லை.

பிரேமதாச இலங்கையின் மற்றுமோர் முன்னணி முதலாளித்துவப் பிரதிநிதியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத்முதலியின் கொலையின் எட்டு நாட்களின் பின்னர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இலங்கையின் முதலாளி வர்க்கத்தின் உள்ளேயான இந்த ஆதாளபாதாளம், தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக முதலாளிகளை புதிய மட்டத்தில் அணிதிரட்டிக் கொள்ள ஏகாதிபத்தியவாதிகள் கைபோட்டுள்ளதைக் காட்டுகின்றது.

இலங்கையில் ஏகாதிபத்தியக் கைக்கூலியான ஜயவர்த்தன அரசாங்கம் படுமோசமான நெருக்கடிக்குள் தலை மூழ்கிப் போன நிலைமையிலேயே ஜனாதிபதி பிரேமதாச 1988 டிசம்பரில் ஆட்சியில் அமர்த்தப்பட்டார், 1987 இந்திய — இலங்கை உடன்படிக்கை மூலம் தருவிக்கப்பட்ட இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் வடக்கு—கிழக்கில் இரத்தக் களரியைச் சிருஷ்டித்த போதிலும் தமிழ் தேசிய இனத்தினரின் பிரமாண்டமான எதிர்ப்புக்கு முகம் கொடுத்தது. பத்தாண்டு கால ஜயவர்தன அரசாங்கம் தென்மாகாணங்களில் கிராமப் புற இளைஞர்களை முன்னணியில் கொண்ட ஏழைகளின் கொதிப்புக்கு முகம் கொடுத்தது, நகர்ப்புறங்களிலும் தோட்டப்புறங்களிலும் சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளையினால் தொழில், வாழ்க்கைத் தரம், சேவை நிலைமைகள் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் எதிர்ப்புக்கு முகம் கொடுத்தது. இந்நிலைமையில் ஜே.வி.பி. தமிழ் விரோத இனவாதத்தினைத் தூண்டிவிட்டு மக்கள் இயக்கத்தினை நெரிப்பதன் மூலம் ஆட்சியை தம் கைக்குள் போட்டுக் கொள்ள போட்டியிடும் ஒரு பாசிச இயக்கமாக முன்னணிக்கு வந்தது.

ஜே.வீ.பி.யுடன் சமரசம் செய்து கொண்டு அதை தம்



ஆர். பிரேமதாச

சஞ்சிகை இது பற்றி பின்வருமாறு குறிப்பிட்டது:

''ஜே வீ.பி. க்கு ஆதரவளிப்பவர்கள் இடையே ஊடுருவி பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண்பதன் மூலம் பதட்டத்தினைப் போக்கவும் ஆளும் கட்சியின் எதிரிகளுக்கு இருந்து வரும் ஆதரவுக்கு குழிபறிக்கவும் பிரேமதாசவினால் அதிக காரியங்களைச் செய்ய முடியும். அவருக்கு ஜே. வீ. பி. தொடர்பாக நீண்டகால சமரச நிலைப்பாடு இருந்து வந்துள்ளது. பேச்சுவார்த்தை மேசைக்கு வருமளவுக்கு ஜே.வீ பி. சிந்திக்குமளவுக்கு நம்பிக்கை உள்ளது.

''தொழிற் சங்கங்களின் கடும் எதிர்ப்பினால் தனியார் மயமாக்க வேலைத் திட்டம் —சிறப்பாக தொலைத் தொடர்பு சேவையை விற்பனை செய்வது நிறுத்தப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் தனியார் மயமாக்கத்தினை திரும்பவும் ஆரம்பிப்பதற்கு சி.ல.சு.க. அரசாங்கத்தை விட யூஎன்பி அரசாங்கம் பொருத்தமானது''. ('பிஸ்னஸ் இன்டர்நஷனல்' —1988 நவம்பர்)

### பிரேமதாசவின் வேலைத்திட்டம்

பாசிச இயக்கத்தினைத் தமது பிடிக்குள் அணிதிரட்டிக் கொள்வதற்காக அமைச்சர் பதவிகளை ஜே.வீ.பி.க்கு வழங்கவும் பிரேமதாச அரசாங்கம் முயன்றது. அம் முயற்சி சரிவராது போகவே இலங்கை வரலாறு முன்னொருபோதும் கண்டிராத அளவிலான படுகொலை இயக்கத்தினை கிராமப்புறங்களில் தொடுத்தது. ஒரு இலட்சம் இளைஞர்களும் மாணவர்களும் கொல்லப்பட்டு, டயர் நெருப்பில் சுட்டெரிக்கப்பட்டனர்; அல்லது ஆறுகளில் வீசப்பட்டனர். பல்லாயிரக் கணக்கானோர் சிறை

பட்டத்தில் குதித்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர்கள் இக்கொடிய படுகொலை இயக்கத்துக்கு அரச படையணிகளையும் கொலைகாரக் கும்பல்களையும் வடக்கு—கிழக்கு மாகாணங்களில் இருந்து விடுவித்துக் கொடுத்தனர். விடுதலைப் புலிகள் தலைமையுடனான சமரசங்கள் தோர்ந்து கொட்டும் நிலை உருவானதைத் தொடர்ந்து கிராமப்புற படுகொலைகளின் மூலம் தென் மாகாணங்களில் உருவாக்கிய தற்காலிக ஸ்திரப்பாட்டின் அடிப்படையில் பிரேமதாச அரசாங்கம் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான மிலேச்ச இனவாத யுத்தத்தினை மீண்டும் தொடுத்தது.

பிரேமதாச அரசாங்கம் கிராமப்புற படுகொலைகளையும் இனவாத யுத்தத்தினையும் எதற்குப் பயன்படுத்தியது? தொழிலாளி வர்க்கத்தின் மேல் ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து ஏகாதிபத்திய வங்கிகளின் கட்டளையின் கீழ் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை நாசமாக்கிய அதேசமயம் பன்னாட்டு கம்பனிகளின் காலனித்துவச் சுரண்டலுக்கான நிலைமைகளைச் சிருஷ்டித்தது, ஏகாதிபத்திய முதலீட்டாளர்களுக்கு முன்னொரு போதும் இல்லாத சலுகைகளை வழங்கிய பிரேமதாச அரசாங்கம், 1992ல் முழு இலங்கையையும் ஒரு ஏற்றுமதி முதலீட்டுக்கான சுதந்திர வர்த்தக வலயமாகப் பிரகடனம் செய்தது. அரசாங்க நிறுவனங்களை தனியார் மயமாக்கியதன் மூலம் அப்பட்டமான முதலாளித்துவச் சுரண்டலுக்கு களம் அமைத்துக் கொடுத்தது பிரேமதாச அரசாங்கமே.

நாட்டுக்கு நாடு இலாபத்துக்கு உழைப்பையும் வளங்களையும் கொள்ளையடிப்பதில் வெறிபிடித்து அலையும் ஏகாதிபத்தியவாதிகளை ஈர்க்கும் பொருட்டு பிரேமதாச அரசாங்கம் இத்தகைய அளப்பரிய தாக்குதல்களைத் தொடுத்தது. இலவசக் கல்வி, சௌக்கிய சேவைகளை அடியோடு துடைத்துக் கட்டவும் அவற்றை சுரண்டல் இயக்கமாக மாற்றவும் முயன்ற பிரேமதாச அரசாங்கம் பொதுஜன எதிர்ப்பின் மத்தியில் அவற்றை ஒத்திப்போட நேரி

வளர்ச்சி கண்டுவந்த பொது மக்களின் கொதிப்பினைத் தணிக்கும் அவசியம் பிரேமதாச அரசாங்கத்துக்கு உருவானது. இதனால் இலங்கை முதலாளிகளுக்கு கோடிக் கணக்கான கடன்களை வழங்குவதன் மூலம் '200ஆடைத் தொழிற்சாலைகள்' இயக்கத்தினை ஆரம்பித்ததோடு கிராமப்புற மக்களின் கண்களில் மண்வீசும் பொருட்டு 15000 நிகழ்ச்சித் திட்டம் என்ற பம்மாத்திலும் ஈடுபட்டது.

பிரேமதாச அரசாங்கத்தின் இத்திட்டங்களின் நோக்கம் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கு 'நிவாரணம்' வழங்குவது அல்ல. உண்மையில் பதினாறு வருடகால யூஎன்பி ஆட்சியின் கொடிய தாக்குதல்களுக்கு முகம் கொடுத்த மக்களின் கொதிப்பினை தணித்து, அவர்கள் மேல் பாய்ந்து வீழ்வதற்கு வாய்ப்பான முறையில் தமது கையைப் பலப்படுத்துவதே திட்டம்.

பிரேமதாசவின் இந்த 15000 நிகழ்ச்சித் திட்டம் ஏகாதிபத்தியவாதிகளின் கோபத்தினைத் தூண்டியது. 600 கோடி ரூபாய் கடன் வழங்கி 200 ஆடை தொழிற்சாலை அமைக்கும் திட்டத்திற்கு ஏகாதிபத்தியவாதிகள் ஏற்கனவே எதிர்ப்புத் தெரிவித்து இருந்தனர். இதன் மூலம் பணவீக்கத்தினை அதிகரிக்க வழிவகுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மார்ச் கடைப் பகுதியில் இலங்கைக்கு வந்த சர்வதேச நாணயத்தின் தூதுக் குழு இவ்வருடத்துக்கென வாக்குறுதியளித்த கடனின் கடைசிப் பங்கினை வழங்குவதை அங்கீகரிக்காமல் திரும்பிச் சென்றது.

### முதலாளித்துவக் கும்பல்களின் இழுபறி

ஏகாதிபத்தியவாதிகளின் இந்தத் தலையீடு யூஎன்பி, சி.ல சு.க வினுள் அணிதிரண்டுள்ள முதலாளித்துவக் கும்பல்களிடையேயான இழுபறியை உக்கிரம் அடையச் செய்தது, இம்முதலாளிகளே பிரேமதாச அரசாங்கத்துக்கு எதிராக 'ஜனநாயகத்தை' புனரமைப்புச் செய் என்ற சுலோகத்தினை முன்வைத்தனர். இவர்களின் கழிவிரக்கத்துக்கான நிஜ காரணம் என்ன? வெகுஜன இயக்கத்தினை நசுக்கித் தள்ளி ஏகாதிபத்தியவாதிகளின் கட்டளைகளை அமுல் செய்வதுடன் எலும்பு

தமது சார்பில் கொலைகார ஆட்சியை கொண்டு நடாத்திய பிரேமதாசவைத் தள்ளி விடுவது பற்றி ஏகாதிபத்தியவாதிகளும் நாய்ச்சண்டையில் குதித்துள்ள பல்வேறு முதலாளித்துவக் கும்பல்களும் யோசித்து வந்த ஒரு நிலைமையிலேயே பிரேமதாசவின் கொலை இடம் பெற்றது.

பிரேமதாசவின் கொலையின் பின்னர் ஆட்சி தளர்ச்சி கண்டு ஜனநாயக மயமாகும் என்ற நப்பாசையை பொது மக்களிடையே பரப்பும் முயற்சியில் முதலாளித்துவக் கும்பல்களும் அவர்களுடன் அப்பட்டமாகக் கைகோர்த்துக் கொண்டுள்ள சமசமாஜ— கம்யூனிச — நவசமசமாஜ தலைவர்களும் ஈடுபட்டுள்ளனர். தொழிலாள—ஒடுக்கப்படும் மக்கள் இதனை அடியோடு நிராகரிக்க வேண்டும். ஜனாதிபதி பிரேமதாசவும் அவரின் அரசாங்கமும் ஏகாதிபத்தியவாதிகளதும் முதலாளிகளதும் நலன்களின் சிருஷ்டியாகும், பிரேமதாசவின் மிலேச்ச ஆட்சி தனிப்பட்ட நெறிமுறைகளின் வெளிப்பாடல்ல; ஏகாதிபத்திய நலன்களின் வெளிப்பாடாகும். பிரேமதாச கொலையினால் ஏகாதிபத்திய அமைப்பின் அவசியங்கள் கொலையுண்டு போகாது. இந்த முக்கிய காரணத்தினாலேயே தனியாள் பயங்கரவாதம் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கு விடுதலை பெற்றுத்தரும் விதிமுறைஎன்பதை ஏற்றுக்கொள்ள தொழிலாள வர்க்கம் மறுக்கிறது. தனியாள் பயங்கரவாதத்தினை முதலாளிகள் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான ஆத்திரமூட்டல்களுக்குத் தூபம் போடவே பயன்படுத்துகின்றார்கள். ஏகாதிபத்தியவாதிகளின் அபிலாசைகளுடன் இணைந்த முறையில் முதலாளித்துவ அரச தலைவர் ஒருவர் படுகொலை செய்யபப்பட்டார் என்பதன் நிஜ அர்த்தம், பொது ஜனங்களுக்கு எதிரான இரத்தம் தோய்ந்த தாக்குதல்களுக்கு ஏகாதிபத்தியவாதிகள் முதலாளி வர்க்கத்தின் பிற்போக்கு கும்பல்களைக் புதிய மட்டத்தில் ஈடுபடுத்தப் போகின்றார்கள் என்பதே

கடந்த காலப் பகுதியில் ஏகாதிபத்திய அமைப்பு பிணைக்கப்பட்டிருந்த யுத்தத்தின் பின்னைய சமரசங்கள் அனைத்தும் இப்போது சிதறுண்டு போய்விட்டன, இந்நிலையில் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களிடையே உலகச்சந்தைக்கான குத்துவெட்டுக்கள் உக்கிரம் கண்டுள்ளன; தனிச்

(11ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



# பிற்போக்குச் சக்திகள் அணிதிரண்டுள்ளன

சொத்துடைமையும் தேசிய அரச அமைப்பும் உலகப் பொருளாதாரத்தில் அபிவிருத்தியுடன் இடைவிடாமல் மோதிக் கொள்கின்றன. இந்நூற்றாண்டில் இரு தடவைகள் இடம்பெற்றது போல் ஏகாதிபத்திய மோதுதல்கள் மூன்றாம் உலக யுத்தத் திசையில் வேகமாக வளர்ச்சிகண்டு வருகின்றன. ஏகாதிபத்திய நாடுகளில் இராணுவவாதம் யுத்தத்துக்கு நெருக்கமான காலத்தில் போன்று வெளியே தலைநீட்டியுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் இராணுவப் பயச்சல்களில் முன்னணியில் நின்று வருகின்றார்கள்.

1947—48ல் ஏகாதிபத்திய அமைப்பின் ஒரு பாகமாக இந்தியத் துணைக் கண்டத்தினைக் கண்டதுண்டமாக்கி சிருஷ்டித்த அரசுகளின் அரசியல் அதிகாரத்தினை ஏகாதிபத்தியவாதிகள் அவற்றின் முதலாளித்துவக் கும்பல்களிடம் கையளித்தனர். இன்று ஏகாதிபத்தியவாதிகள் அந்த ஆளும் வர்க்கங்களின் சிறந்த எடுபிடிப் பகுதியினரின் தோள் மீதாக தமது கொடிய காலனித்துவச் சுரண்டலை நிலைநாட்ட முயற்சிக்கிறார்கள். இந்த ஏகாதிபத்திய திட்டத்தின் ஒரு பாகமாகவே இந்தியாவில் ஈடாட்டம் கண்ட நரசிம்மராவ் அரசாங்கத்துக்கு எதிராக பாரதீய ஜனதா கட்சியூடாக பாசிசச் சக்திகள் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. நானாவித பிரிவினைவாத தலைவர்கள் களத்தில் தள்ளப்பட்டுள்ளார்கள். இலங்கையில் கட்டவிழ்க்கப்பட்டுள்ளதும் இதே போக்குகளே. இலாபகரமான உழைப்பையும், மூலப் பொருட்களையும் கொள்ளை அடிக்கவும் அவ்வாறே யுத்த முகாம்களாகப் பயன்படுத்தவும் இப்பிராந்தியம் ஏகாதிபத்தியவாதிகளுக்கு அவசியப்படுகின்றது.

ஜனாதிபதி பிரேமதாச கொலையின் பின்னர் ஏகாதிபத்திய நலன்களை இட்டு நிரப்பும் அணிதிரள்வின் ஒரு பாகமாக முதலாளி வர்க்கத்தின் ஒரு பிரிவினர் தேசிய அரசாங்கச் சூத்திரத்தினை முன்வைத்துள்ளனர். இதனை முதலில் அப்பட்டமாக முன்வைத்தவர் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன. ஜனாதிபதி கொலையின் இரத்தம் காய்வதற்கு முன்னரே—மே 2ம் திகதி 'சண்டே டைம்ஸ்' பத்திரிகை இக்கருத்தினை வெளியிட்டது. பிரேமதாசவின் எதிரியாகப் பேர்போன காமினி திசாநாயக்க 'நாட்டின் நலனுக்காக என்றால் எந்தவொரு தருணத்திலும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்த நாம் தயார்' என்றுள்ளார். 'அரசாங்கம் நேசக்கரம் நீட்டும்' என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மே 3ம் திகதி பிரதமர் பதவியில் கண்வைத்துள்ள ரணில் விக்கிரமசிங்க, தேசிய அரசாங்கம் பற்றிய யோசனை இல்லாது போகிலும் 'எதிர்வரும் கிழமைகளில் நாடு பரந்த புரிந்துணர்வுக்கு வரும்' எனத் தாம் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார். பிரேமதாச கொலை பற்றிக் கவலை தெரிவித்த அநுர பண்டாரநாயக்க, 'இன்றைய தருணத்தில் தேசப் பற்றுள்ள சகல பிரஜைகளும் — சிறப்பாக அரசியல் தலைவர்கள் சிறிய தனிப்பட்ட, அரசியல் வேறுபாடுகளை தள்ளிவிட்டு பயங்கரவாதத்தினை தொலைத்துக் கட்டவும் சட்டத்துக்கு மதிப்புக் காட்டும் ஆட்சியை அமைக்கவும் முழு முயற்சி செய்ய வேண்டும்' என்றுள்ளார்.

## தேசிய அரசாங்க திட்டத்தின் அர்த்தம்

நாடு, தேசப்பற்று சார்பில் பேசும் 'இந்த ஏகாதிபத்திய கையாட்கள் அனைவரதும் நோக்கம் கொம்பிரதோர் (தரகு) முதலாளிகள் என்ற முறையில் இலாப மூட்டை பேணுவதே, பயங்கரவாதத்தினை தொலைத்துக் கட்டுவதும் சட்டத்துக்கு மதிப்புக் காட்டும் ஆட்சியை அமைப்பதும் என்பதன் அர்த்தம் எதிர்ப்புரட்சி உள்நாட்டு யுத்தத்தினைத் தொடுப்பதே. தேசிய அரசாங்கத் திட்டத்தின் அர்த்தம் இதுவே. விஜேவர்த்தன குடும்பங்களின் முதலாளித்துவ ஊதுகுழல்கள் இதற்கு ஆதரவாக இராகம் எழுப்பின. பேரளவில் தன்னும் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடாததன் அர்த்தம் இதுவே. சி.ல சு.க. இல்லாமல் யூஎன்பியை எதிர்க்கவே முடியாது என ஓலம் போட்டு வந்த சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ தலைவர்களுக்கு இன்று சி ல சு. க. செய்யக் கூடியது என்ன என்பது புரிந்துள்ளது.

ஆளும் வர்க்கத்தின் நெருக்கடி தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களின் தலையீட்டுக்கு வழியமைத்துக் கொடுக்குமோ என்ற பீதி இலங்கை முதலாளிகளை மட்டுமன்றி ஏகாதிபத்தியவாதிகளையும் பிடித்துக் கொண்டுள்ளது. முதலாளித்துவ ஆளும் கும்பல்கள் சமசமாஜ—கம்யூனிச—நவசமசமாஜ—இதொகா தலைவர்களின் தோள்களில் ஏறி நின்று சட்டத்தையும் ஒழுங்கையும் காக்கும் பேரிலும், பேரழிவில் இருந்து நாட்டைக் காக்கும் பேரிலும் தேசிய அரசாங்கத்தினை அரவணைத்துக் கொண்டு தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகப் பாய்ந்து விழும் ஆபத்து உள்ளதென புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எச்சரிக்கின்றது. என்னதான் சொன்னாலும் கொலையின் பின்னர் இடம்பெற்றுவரும் அணிதிரள்வுகள் பொதுமக்களுக்கு எதிராக புதிய தாக்குதலைத் தொடுப்பதற்கு தயார் செய்வதை இலக்காகக் கொண்டவை.

தொழிலாளி—ஒடுக்கப்படும் மக்களின் தலையீட்டை தவிர்க்கவும் தமது எதிர்ப்புரட்சி தாக்குதலை தயார் செய்யவும் முதலாளி வர்க்கம் தமிழர் விரோத இனவாதத்தினைத் தூண்டிவிடுவதில் ஈடுபட்டுள்ளதென நாம் பொது மக்களை எச்சரிக்கின்றோம். மாகாண சபைத் தேர்தல்களை முதலாளித்துவ கும்பல்கள் இந்தப் புதிய அணிதிரள்வுகளின் கரங்களைப் பலப்படுத்தப் பயன்படுத்திக் கொள்ளும்.

பிரேமதாச படுகொலைக்கு அனுதாபம் தெரிவித்ததன் மூலம் சமசமாஜ—கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஏகாதிபத்தியவாதிகளதும் முதலாளி வர்க்கத்தினதும் அடுத்த நடவடிக்கைக்கு முண்டு கொடுக்க முன்வந்துள்ளனர். நவசமசமாஜ தலைவர்கள் ஈடாட்டம் கண்ட அரசியல் நிலைமையில் தமது சேவையை ஏகாதிபத்தியத்துக்கு வழங்கத் தயார் என முன்கூட்டியே அறிவித்தனர். பிரேமதாச படுகொலைக்கு முன்னர் வெளிவந்த நவசமசமாஜ கட்சியின் 'ஹரய' பத்திரிகை பின்வருமாறு குறிப்பிட்டது: ''...இப்போது தோன்றியுள்ள தொழிலாளர், மாணவர், தோட்டத் தொழிலாளர்களின் சக்தி அதற்காக அணிதிரட்டப்படும் எனவும், ஸ்திரமற்ற நிலைமை வளர்ச்சி காணுமானால் புதிய ஸ்திரப்பாட்டினை கட்டியெழுப்பும் சக்திகள் தயார் செய்யப்படும் எனவும் தோழர். விக்கிரமபாகு மேலும் குறிப்பிட்டார்.''

## விடுதலைப் புலிகளின் ஏகாதிபத்திய சார்பு திருப்பம்

இத்துரோகிகள் அரசியல் ஸ்திரமற்ற நிலைமையில் பொதுமக்களின் சுயாதீனமான தலையீட்டை நசுக்கி, ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ அரசினைக் காப்பது பற்றியே சணக்குப் பார்க்கிறார்கள். ஏகாதிபத்தியவாதிகள் பக்கம் திரும்பியுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதலாளித்துவத் தலைவர்களையிட்டும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மீண்டும் எச்சரிக்கின்றது, இந்தியத் துணைக்கண்டத்தினுள் ஏகாதிபத்தியவாதிகளின் கையாட்களாக இந்த தேசிய முதலாளிகள் அப்பட்டமாக பயன்படுத்தப்படும் ஆபத்து வளர்ச்சிகண்டு வருகின்றது.

பிரேமதாச கொலையுடன் உருவாகியுள்ள ஆளும் வர்க்கத்தின் நெருக்கடிக்கும் ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டின் புதிய ஆபத்துக்களுக்கும் மத்தியில் தொழிலாள வர்க்கத்தினை சுயாதீனமான வேலைத்திட்டத்தின் அடிப்படையில் முதலாளி வர்க்கத்திலிருந்து அரசியல் ரீதியில் சுயாதீனமாக அணிதிரட்டுவதன் பிரமாண்டமான அவசியத்தினை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சுட்டிக்காட்டுகின்றது. ஏகாதிபத்தியவாதிகள் புதிய அமைப்பு என்ற பேரில் தமது காலனித்துவ ஆதிக்கத்தினை நிலைநாட்டவும் யுத்தத்துக்குத் தயார் செய்யவும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தினால் அனைத்துலக ரீதியில் மட்டுமே ஒன்றிணைந்த தொழிலாளி வர்க்கமாகவே போராட முடியும். இந்த மூலோபாயத்தின் அடிப்படையிலேயே ஏகாதிபத்தியத்தினை தூக்கி வீசி உலக சோசலிசப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்ல முடியும்.

இதன் அடிப்படையில் இந்தியத் துணைக்கண்ட சோசலிசப் புரட்சி முன்நோக்குடன் இலங்கையிலும் தமிழ்ஈழம் பிராந்தியங்களிலும் தொழிலாளி வர்க்கம் ஒன்றிணைந்து சகல ஒடுக்கப்பட்ட மக்களையும் தம்மைச்சூழ அணிதிரட்டி முதலாளித்துவ வர்க்க ஆட்சியை தூக்கி வீசி, தமிழ்ஈழம்—இலங்கை சோசலிசக் குடியரசினை கட்டியெழுப்ப அணிதிரள வேண்டும். ஏகாதிபத்தியச் சதியின் பின்னணி இந்த அணிதிரள்வின் பாரிய அவசரத்தினைத் தோற்றுவித்துள்ளது.

தொழிலாளர்கள் தமது வேலைத்தலங்களில் நடவடிக்கைக் கமிட்டிகளை நிறுவுவதும், ஏழை விவசாயிகள் உட்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களை அணிதிரட்டி சோவியத் ஆட்சி அமைப்புக்களை கட்டியெழுப்புவதும் இந்த வேலைத்திட்டத்துக்கான போராட்டத் தயாரிப்புக்கு அவசியம். முதலாளித்துவக் கட்சிகளில் இருந்து சுயாதீனமான விதத்தில் தொழிலாளி வர்க்கம் தமது வர்க்கப் போராட்டத்தினை அபிவிருத்தி செய்ய வேண்டும். தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களின் பிரமாண்டமான சமூக, பொருளாதார பிரச்சினைகளை தமிழ்ஈழம்—இலங்கை சோசலிச குடியரசு ஒன்றியத்தின் உருவில் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தினை நிறுவுவதன் மூலம் அனைத்துலக தொழிலாளி வர்க்கத்துடன் இணைந்து, உலக சோசலிச புரட்சியை நோக்கிச் செல்வதன் மூலமே தீர்க்க முடியும். முதலாளித்துவ கொலைகார ஆளும் கும்பல்கள் ஏகாதிபத்தியவாதிகளிடம் தொழிலாளி—ஒடுக்கப்படும் மக்களைப் பலியிடும் பொருட்டு அரசியல் ரீதியில் கரங்களைப் பலப்படுத்திக் கொள்ள பயன்படுத்தும் மாகாண சபைத் தேர்தலைப் பகிஷ்கரிப்பது இப்புரட்சிகர வேலைத் திட்டத்துக்கான போராட்டத்தின் அத்தியாவசிய நடவடிக்கையாகும்.

அரசியல் நிலைமையில் ஏற்பட்டுவரும் தீவிரமான மாற்றங்களின் எதிரில் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள் முன் நிலையில் தோன்றும் தீர்க்கமான பிரச்சினை: புரட்சிகர தலைமை இல்லாமை பிரச்சினையை தீர்த்து வைப்பதே. அப்பிரச்சினைக்கு தீர்வு தொழிலாளி வர்க்கத்தினை அனைத்துலகவாத மூலோபாயத்தின் அடிப்படையில் சுயாதீனமாக அணிதிரட்டப் போராடும் சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தைக் கட்டியெழுப்புவதே. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தைக் கட்டியெழுப்பும் பணிக்குத் தோள் கொடுக்குமாறு நாம் நனவு படைத்த தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்களை வேண்டுகின்றோம்.

1993/மே/06.


**யூ. என். பி. தாக்குதலுக்கு எதிரான போராட்ட வேலைத்திட்டம்**

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக வெளியீடு:

விலை; 7–50



## தொழிலாளர் பாதை
### சந்தாதாரர் ஆகுங்கள்

அஞ்சல் கட்டணம் உட்பட ''தொழிலாளர் பாதை'' சந்தா விபரம்

1 மாதம் — ரூபா 8/- 3 மாதம் — ரூபா 24/-

6 மாதம் — ரூபா 48/- 1 வருடம் — ரூபா 96/-

பெயர்: ..........................................

முகவரி:..........................................

சந்தாக் காலம்:......... ரூபா......... சதம்.........

சந்தாப் பணத்திற்காகிய அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி:- ''தொழிலாளர் பாதை''

90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு-10.


படிப்பகம்

www.padippakam.com



# எதிர்புரட்சிக்கு உதவ முன் வந்துள்ள பாப்லோவாத திருத்தல்வாதி கொல்பே !

அயோத்தி சம்பவங்களின் பின்னர் சென்னையிலிருந்து வெளியிடப்படும் தினசரியில் (நியூஸ் டுடே) பழைய பாப்லோவாதியான சீத்தாராம் பி. கொல்பேயின் கட்டுரைகள் தோன்றியிருப்பது மறுபடியும் பாப்லோவாதத்தின் பிற்போக்கு பாத்திரத்தை தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது. இது எர்னெஸ்ட் மண்டல் தலைமையிலான திருத்தல்வாத பாப்லோவாத ஐக்கிய செயலாளர் குழுமத்தையும் குற்றம் சாட்டுவதாக உள்ளது.

அவரது பகட்டுகளுக்கு நற்சான்றிதழ் தருவதற்காக கொல்பே தனது முதல் கட்டுரையில் பாசிசம் பற்றி டிராட்ஸ்கியின் எழுத்துக்களிலிருந்து மேற்கோள்களை பயன்படுத்துகிறார் இரண்டாவது கட்டுரையில் பி.ஜே.பி யினால் பிரதிநிதித்துவம் செய்யப்படும். பாசிச சக்திகளை எதிர்த்து போராடும் போர்வையின்கீழ் முன்வைக்கும் வேலைத்திட்டமானது இந்தியாவில் ஏகாதிபத்தியத்தின் உடனடி கருவியாக இருக்கும் போனபாட்டிச ராவ் அரசாங்கத்துக்கு தொழிலாள வர்க்கத்தையும் உழைக்கும் மக்களையும் காட்டிக் கொடுக்கிறது. இவ்வாறு செய்வதன் மூலம் இறுதியில் பாசிச சக்திகளின் வெற்றிக்கு சுலபமாக வழி வடிப்பதில் கொல்பே தீர்க்கமாக பங்களிக்கிறார்.

பி ஜே பி யின் கீழ் அணி திரளும் வலதுசாரி சக்திகளின் உண்மையான இலக்கை மூடி மறைத்து கொல்பே அவரது பிற்போக்கு பணியை தொடங்குகிறார், ஜனவரி 8ல் வெளியான அவரது முதலாவது கட்டுரையில் அவர் கூறியதாவது: ''பி ஜே பி,வி எச்பி கூட்டின் இந்துவாத சித்தாந்தத்திற்கும் 'ஹிட்லரின் தத்துவத்திற்கும்' இடையில் எந்த வேறுபாடும் கிடையாது. இருவருமே ஆரிய இனத்தின் மேன்மையிலும் தூய்மையிலும் நம்பிக்கை கொண்டவர்கள், ஆரிய மயமான ஜெர்மானியர்கள் என்ற பெயரில் ஹிட்லர் யூதர்களை இலக்கு வைத்து அவர்களுக்கு எதிரான இனஒழிப்பு சங்காரங்களை நடத்தினான், அதேபோல் ஒரு தடவை மோகலாய ஆட்சியின்கீழ் இந்துக்களை ஒடுக்கும் ஆட்சியாளர்களாக இருந்தவர்கள் என்று இந்தியாவிலுள்ள முஸ்லிம்களைவிவரித்து அவர்களை பி ஜே பியும் வி எச் பியும் குறி வைத்துள்ளன.''

பாசிசம் சம்பந்தமான கொல்பேயின் வரைவிலக்கணம் தவறாக வழி காட்டுவதாக உள்ளது. அது பாசிசம் சம்பந்தமான டிராட்ஸ்கியின் விபரிப்புடன் எந்த பொதுத்தன்மையும் கொண்டதாக இல்லை. டிராட்ஸ்கி பாசிசத்தை எப்படி வரையறுத்தார் என்பதை பார்ப்போம்: ''பாதி வழியிலான நடவடிக்கைகளை கொண்ட காலம் கடந்து விட்டது. மீளுவதற்கான வழியை காண வேண்டுமாயின் தொழிலாளர் ஸ்தாபனங்களினால் கொண்டு வரப்படும் அழுத்தங்களை முதலாளித்துவம் முழுமையாக ஒழித்து கட்ட வேண்டும். இந்த தேவைகள் அகற்றப்பட வேண்டும். அழிக்கப்பட வேண்டும் முழுமையாக நசுக்கப்பட வேண்டும்.'' மேற்கூறிய கட்டத்தில் தான் பாசிசத்தின் வரலாற்றுப் பங்கு தொடங்குகிறது என்று டிராட்ஸ்கி சுட்டிக் காட்டினார்: ''அது நிதி மூலதனத்தின் செலவிலும், உத்தியோக பூர்வ அரசாங்கத்தின் போர்வையின் கீழும் ஆற்றொணு நிலையிலுள்ள குட்டி முதலாளித்துவத்தை அணி திரட்டுகிறது, இராணுவ மயப்படுத்துகிறது, அது அவர்களை பாட்டாளி வர்க்கத்தின் மிகவும் புரட்சிகரமானதிலிருந்து மிகவும் பழமையான அமைப்புகள்வரையிலும் ஒழிக்கப்பட வேண்டுமென சுட்டிக் காட்டுகிறது (டிராட்ஸ்கியின் எழுத்துக்கள் 1932).

பாசிசம் என்பது தாக்குதல்கள், குரூர சக்தி, போலீஸ் பயங்கரவாதம் இவற்றைக் கொண்ட ஒரு அமைப்பு என்பதல்ல, பாசிசம் என்பது முதலாளித்துவ சமுதாயத்துக்குள் பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தின் அனைத்து அம்சங்களையும் வேரறுப்பதை அடிப்படையாகக் கொண்ட ஒரு குறிப்பிட்ட அரசாங்க அமைப்பாகும். பாசிசத்தின் பணி கம்யூனிச முன்னணிப்படையை ஒழிப்பதில் மட்டுமல்ல முழு வர்க்கத்தையுமே பலாத்காரமாக ஒன்றுபட்டிருக்க விடாது வைத்திருப்பதாகும். இந்த முடிவை பார்க்குமிடத்து தொழிலாளர்களின் மிகவும் புரட்சிகரமான பிரிவை சரீத ரீதியாக ஒழித்துக் கட்டுவது மட்டும் போதுமானதல்ல, அனைத்து சுதந்திரமான, மற்றும் தன்னார்வ அமைப்புகளை தகர்ப்பதும், பாட்டாளி வர்ககத்தின் அனைத்து பாதுகாப்பு கோட்டைகளை உடைப்பதும் சமூக ஜனநாயகத்தினாலும் தொழிற் சங்கங்களினாலும் முக்கால் நூற்றாண்டில் சாதிக்கப் பெற்ற அனைத்தையும் வேரறுப்பதும் கூட அவசியமாகும்.'' (டிராட்ஸ்கியின் எழுத்துக்கள் 1931-32).

பாசிசம், முதலாளித்துவ சர்வாதிகாரத்தின் இதர வடிவங்களிலிருந்து வேறுபட்டிருப்பதை டிராட்ஸ்கி மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்: ''ஒரு அரசு, பாசிஸ்டாக மாற்றமடையும் போது அது அர்த்தப்படுத்துவது அரசாங்கத்தின் வடிவங்களும் முறைகளும் முசோலினி உண்டாக்கிய வடிவமைப்புகளின்படி மாறுகின்றன என்பது மட்டுமல்ல ... அது முதலாவதாகவும் அனைத்துக்கு மேலாகவும் அர்த்தப்படுத்துவதாவது, தொழிலாளர் ஸ்தாபனங்கள் ஒழிக்கப்பட்டிருக்க வேண்டும், பாட்டாளி வர்க்கம் நாதியற்ற நிலைக்கு குறைக்கப்பட்டிருக்க வேண்டும் ஆழமாக மக்களுக்குள் ஊடுருவுகின்ற மற்றும் பாட்டாளி வர்க்கம் சுதந்திரமாக பளிங்குபோலாவதை விரக்தியடையச் செய்கின்ற ஒரு நிர்வாக அமைப்பு தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும். அங்கே தான் திட்டவட்டமாக பாசிசத்தின் சாராம்சம் இருக்கின்றது ''

அனைத்து வடிவிலான முதலாளித்துவ ஆட்சியும் அவை பாராளுமன்ற ஜனநாயகம், இராணுவ அதிகாரத்துவம், போனபாட்டிசம், பாசிசம் இவற்றில் எதுவாக இருந்தாலும் சாராம்சத்தில் பாட்டாளி வர்க்கம் மற்றும் ஒடுக்கப்படும் மக்களின் மேல் முதலாளித்துவத்தின் சர்வாதிகாரமாகும். ஆனால் பாசிசம் மற்றைய இரண்டிலுமிருந்து ஒரு சிறப்பான வழியில் வேறுபடுவதை டிராட்ஸ்கி சுட்டிக் காட்டினார். பாசிசம் ஆழமாக மக்களுக்குள் ஊடுருவுகிறது, தொழிலாள வர்க்கத்தின் அனைத்து ஸ்தாபனங்களையும் ஒழித்துக்கட்டுகிறது, பாட்டாளி வர்க்கத்தை நாதியற்ற நிலைக்கு குறைக்கிறது, பாட்டாளி வர்க்கம் சுதந்திரமாக பளிங்காவதை விரக்தியுறச் செய்கிறது.

இதை புரிந்து கொள்வதற்கு பாசிசத்தை முதலாளித்துவத்தின் மற்றைய மாதிரியிலான வெளிப்படையான சர்வாதிகாரத்துடன் ஒப்பிட்டு பார்ப்பது அவசியமாகும். அதை விபரிப்பதற்கு போனபாட்டிசம் என்ற பதத்தை பயன்படுத்தினார். ''அனைத்து வர்க்கங்களுக்கும் மேலாக இறுதி முடிவின் எஜமானும் கருத்து வேறெதுவுமல்ல, போனபாட்டிசம்தான் இரு முள்ளுக்கரண்டிகளை ஒரு தக்கையில் இணையாக நிறுத்தினால், மிகப் பெரும் ஊசலாட்டங்களின் போதும்கூட அது தனது சமபல நிலையை ஒரு ஊசிமுனையில் பக்கத்துக்கு பக்கம் சாய்ந்து பாதுகாத்துக் கொள்ளும், அது பொறிமுறை மாதிரியிலான போனபாட்டிசமாகும். உயர்ந்த நடுநிலையாளனாகும். அந்த ஆட்சியின் இறுக்கத்தின் அளவை சர்வதேச நிலைமைகளை ஒரு பக்கமாக வைத்துவிட்டு பார்ப்போமாயின் அது அந்த நாட்டினுள்ளே இரண்டு பகைமையுள்ள வர்க்கங்களுக்கு இடையிலான சமபல நிலையின் ஸ்திரத்தில் தான் தங்கியிருக்கிறது.'' (ரஷ்யப் புரட்சியின் வரலாறு பக்கம் 663).

போராட்டத்திலுள்ள வர்க்கங்கள் கூர்மையாக அதில் ஈடுபட்டிருக்கும் பொழுது அதன் முடிவு இன்னும் தீர்மானிக்கப்படாத நிலையில் போனபாட்டிசம் எழுகின்றது எவ்வாறாயினும் ஒவ்வொரு வர்க்க சமுதாயத்திலும் ஒரு வர்க்கமே ஆளும் வர்க்கமாகும், அது சொத்தை உடைமையாக கொண்டுள்ளது, அரசு இயந்திரத்தை கட்டுப்படுத்துகிறது. இவ்வாறாக போனபாட், போரிடும் வர்க்கங்களுக்கு மேலாக இருப்பது போல் தோற்றமளித்தாலும் உண்மையில் அவர் ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதியே ஆவார். ஆனால் அச்சுறுத்துகின்ற பகையாளியை கீழ்ப்படுத்தி வைத்திருப்பதற்காக ஆளும் வர்க்கம் அதன் சுதந்திரத்தில் ஒரு சிறு பகுதியை நடுவரிடம் கையளிக்கிறது. பகையாளி வர்க்கம் தீர்க்கமாக தோற்கடிக்கப்படவில்லை என்று ஆளும் வர்க்கம் எந்தளவுக்கு உணருகின்றதோ, அந்தளவுக்கு நடுவரை சகித்துக் கொள்கிறது. டிராட்ஸ்கி இது பற்றி பின்வருமாறு விளக்கினார்: ''இரண்டு சமூகத் தட்டுக்களின் — உள்ளவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும். சுரண்டுபவர்களுக்கும் சுரண்டப்படுபவர்களுக்கும் இடையிலான போராட்டம் அதன் மிக உயர்ந்த பதட்டத்தை அடையும்போது அதிகாரத்துவம். போலீஸ், இராணுவத்தினரின் ஆதிக்கத்துக்கு நிலைமைகள் தரப்படுகின்றன. அரசாங்கம் சமுதாயத்திலிருந்து சுதந்திரமானதாக மாறுகிறது, இதுவே திட்டவட்டமாக போனபாட்டிசத்தின் திட்டமாகும், நிச்சயமாக கூறினால் அவ்வாறான ஒரு அரசாங்கம் சொத்துடைமையாளர்களின் எழுத்தாளராக இல்லாமல் இருக்கப் போவதில்லை. இருப்பினும் எழுத்தாளர் எஜமானின் முதுகிலிருந்து அவருடைய கழுத்து பட்டையை தேய்த்துக் கொண்டிருப்பார், சமயத்தில் அவருடைய முகத்தில் தனது பூட்சை அழுத்த தயக்கம் காட்ட மாட்டார்'',

இவ்வாறாக ஒரு போனபாட்டிச அரசாங்கத்துக்கும் பாசிச அரசாங்கத்துக்கும் இடையிலுள்ள வேறுபாடு என்னவென்றால், முன்னையது பற்றிய விஷயத்தில் போராடும் வர்க்கங்களுக்கு இடையிலான மோதல் ஒரு உச்சக் கட்டத்தை அடைந்து, அது தீர்க்கப்படாதிருக்கும், பின்னையது பற்றிய விஷயத்தில் பாட்டாளி வர்க்கம், அது முதலாளித்துவ ஆட்சியின் கீழ் சாதித்த வரம்புக்குட்பட்ட உரிமைகளையும், ஸ்தாபனங்களையும்கூட அழித்து, அணுக்கூறான நிலைக்கு நசுக்குவதாகும்.

தொழிலாள வர்க்கத்தை இவ்வாறு அணுக்கூறுகளாக ஆக்குவதை சாதிப்பதற்கு சாதாரண இராணுவ அதிகாரத்துவ சாதனம் போதுமானதல்ல. கூலிக்கு மாரடிக்கும் கோட்பாட்டின் அடிப்படையில் பாட்டாளி வர்க்கத்தின் மூலைமுடுக்குகளை இராணுவம் ஊடுருவிச் சென்று அந்த ஸ்தாபனத்தின் மிச்ச மீதங்களை வேரறுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. வர்க்கப் போராட்டம் கூர்மையடையும் நிலைமையின்கீழ் இராணுவத்தின் கீழ் மட்டத்தினர் பாட்டாளி வர்க்கத்தின் அழுத்தத்தை உணரத் தொடங்குகின்றனர். இங்கே தான் பாசிச கும்பல்கள் வருகின்றனர். டிராட்ஸ்கி இதை விளக்கினார். ''இந்தக் கட்டத்தில் தான் பாசிசத்தின் வரலாற்றுப் பங்கு தொடங்குகிறது, அது பாட்டாளி வர்க்கத்துக்கு உடனடியாக மேலாயுள்ள வர்க்கங்களை விழிப்படையச் செய்கிறது. அவை அதன் அணிகளுக்குள் ஒட்டப்படுகின்ற, அம்சத்தில் இருக்கின்றனர், அது நிதி மூலதனத்தின் செலவில் அவர்களை அணி திரட்டி இராணுவ மயப்படுத்துகிறது,....''

பாசிசத்தின் மையமான பங்கு தொழிலாள வர்க்கத்தின் ஸ்தாபனங்களை நிதி மூலதனத்தின் நலன்களுக்காக அழிப்பதாகும், இதை செய்வதற்காகத்தான் தவறாக வழி நடத்தப்பட்ட குட்டி முதலாளித்துவ கும்பல்களை மிகவும் பிற்போக்கு சித்தாந்த குப்பையின் அடிப்படையில் அணி திரட்டப்படுகிறது. இது பற்றி சீரழிந்த மூன்றும் அகிலத்தின் ஸ்டாலினிசத் தலைவர்களுக்கு எதிராக டிராட்ஸ்கி வலியுறுத்த வேண்டியிருந்தது. அவர்கள் திருப்தி மனப்பான்மையுடன் ''ஹிட்லருக்கு பிறகு நாம் தான்'' என்று கூறிக் கொண்டிருந்தனர்.

ஹிட்லரின் இலக்குயூதர்கள், பிஜேபி இன் இலக்கு முஸ்லிம்கள் என்று வலியுறுத்துவதன் மூலம் கொல்பே, பி.ஜே.பி. முதலியவற்றினால் நடத்தப்படும் பிரச்சாரத்தின் வளம், அதன் புறநிலைநோக்கம் ஆகியவற்றை மூடிமறைக்கின்றார். அவை தொழிலாள வர்க்கத்தின் ஸ்தாபனங்களை அழிப்பதற்காகவே. நாம், டிராட்ஸ்கியுடன்சேர்ந்து மீண்டும் வலியுறுத்துவது பிஜேபி தலைமையிலான இயக்கத்தின் இலக்கு தொழிலாள வர்க்கமே. இந்தப் பிற்போக்காளர்கள் ஏதாவது ஒரு சிறுபான்மையை தேர்ந்தெடுக்கின்றனர் என்பது உண்மைதான். ஹிட்லர் யூதர்களையும், பிஜேபி வகையறாக்கள் முஸ்லிம்களையும், மேற்கத்திய நாடுகளில் இன்றைய பாசிஸ்டுகள் குடிபெயரும் தொழிலாளர்களையும் அவர்களது முதலாவது இலக்காக கொண்டுள்ளனர். இந்த அனைத்து பலவீனமான பிரிவுகளும், வெறி கொண்ட குட்டி முதலாளித்துவ பகுதிகளை தொடக்கத்தில் அணி திரட்டுவதற்கான சுலபமான பலியாட்களாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்; பின்னர் ஒரு சமயத்தில் நிதி மூலதனம் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக இந்த வெறிகொண்ட சக்திகளை கட்டவிழ்த்து விடுவதற்காகத்தான்

## மேற்கு வங்காளம்

### பாலத்தில் நுழைவு வரி வசூலிப்பதை தனியாருக்கு தாரை வார்க்கிறது ஸ்டாலினிச ஜோதிபாசு அரசாங்கம்

ஸ்டாலினிச ஜோதிபாசுவின் சி.பி.ஐ (எம்) கட்சி ஐ எம் எப் கொள்கைகளுக்கு எதிராகப் பேராடுவதாக வாய்ச் சவடால் அடித்துக் கொண்டு. ஐ எம் எப் அடிவருடி காங்கிரஸ் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதும், ஜோதிபாசு லண்டன் சென்று சுவராஜ்பால் போன்ற NRI முதலாளிகளிடம் மடிவிரிப்பதும் தொழிலாள வர்க்கம் அறிந்த ஒன்றாகும். அந்த அடிப்படையில் இன்னொரு எடுத்துக் காட்டாக ஜோதிபாசுவின் அரசாங்கம் மேற்கு வங்காளத்தில் நதி களின்மீது உள்ள பாலங்களில் நுழைவு வரி வசூலிக்கும் பொறுப்பை தனியாரிடம் ஒப்படைக்கிறது,

ஏப்ரல் 1, 1993 முதல் மேற்கு வங்கத்திலுள்ள 19 பாலங்களில் நுழைவு வரி வசூலிப்பது தனியாருக்குத் தாரை வார்க்கப்படவிருக்கிறது, மேற்கு வங்கப் பொதுப் பணித்துறை தகவலின்படி, இத்துறையின் தலைமைப் பொறியாளர் S K தேய் சர்க்கார் ஜனவரி 13 அன்று விடுத்த ஆணையின்படி 19 பாலங்களில் நுழைவுவசூலிப்பு தனியார் ஏஜன்சியிடம் ஒப்படைக்கப்படவிருக்கிறது. 1991ல் மே. வ. அரசாங்கம் நியமித்த மூன்று உறுப்பினர் கொண்ட 'நுழைவு வரிக்குழு' வின் பரிந்துரையின்படி அரசாங்கம் இதனைச் செயல்படுத்துகிறது, இச்குழு விதித்துள்ள நுழைவு வரிக் கட்டணத்தில் மிகக் குறைந்த கட்டணம் தற்போதுள்ள கட்டணத்தை விட இரண்டு மடங்கு அதிகம் அதே வேளை மிக உச்ச படசக் கட்டணம் தற்போது உள்ளதைப் போல் ஏழு மடங்கு அதிகமாகும். இந்தக் கட்டண உயர்வின் மூலம் மக்களைச் சுரண்டி தனியார் கொழுக்க வழி ஏற்படுத்தியிருக்கிறது அரசாங்கம்.

படிப்பகம்

# புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மே தினச் செய்தி:

# தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலகவாத ஐக்கியத்துக்குப் போராடுவோம்!

ஏகாதிபத்தியம் உலக யுத்தத்தையும் காலனித்துவ வேலைத் திட்டத்தினையும் உக்கிரமாக்கியுள்ளது. ஏகாதிபத்திய சக்திகளுக்கு இடையேயான மோதுதல்கள் தீவிரமடைந்துள்ள நிலையில் உலகத்தினை மீண்டும் பங்கீடு செய்வதற்கான யுத்தத் திட்டமும் உள்நாட்டு யுத்தத்திற்கான எதிர்ப்புரட்சி திட்டமும் முன்னேறிய, பின்தங்கிய சகல நாடுகளிலும் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களின் நிகழ்ச்சி நிரலில் முதலிடம் பிடித்துக் கொண்டுள்ளது. இந்நிலையில் உலகத் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் அனைத்துலகவாத புரட்சிகர ஐக்கியத்தினைக் கட்டி எழுப்புவது மிகவும் தீர்க்கமானது என அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இம்மேதினத்தில் பொதுமக்களுக்குக் கூறிவைக்கின்றது.

ஏகாதிபத்தியத்தின் காலனித்துவ வேலைத்திட்டம் ஏற்கனவே நீண்ட தூரம் சென்றுள்ளது,

(1) ஈராக்கினை மூழ்கடிக்கும் பொருட்டு 1991ல் ஆரம்பமான குண்டு வீச்சு யுத்தத்தின் முதலாவது சுற்று இன்னமும் நின்றபாடாய் இல்லை. மீண்டும் மீண்டும் ஆத்திரமூட்டல்கள் இடம் பெறுவதோடு அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியச் சக்திகள் இராணுவ ஆக்கிரமிப்புக்குத் துடிக்கின்றன.

(2) சோமாலியாவில் ஏகாதிபத்தியப் படைகளை இறக்குவது என்பது மத்திய கிழக்கிலும், வட ஆபிரிக்காவிலும் காலனிகளை ஏற்படுத்துவதற்கான மற்றுமோர் நடவடிக்கையாகும். குறுகிய கால நிவாரண நடவடிக்கைகள் வழங்குவதாகக் கூறி அனுப்பி வைக்கப்பட்ட படைகள் இன்று காலவரையறையற்ற விதத்தில் சோமாலியாவில் காலூன்றிக் கொண்டுள்ளன. அந்நாட்டு முதலாளித்துவக் கும்பல்களதும் ஸ்டாலினிச கோஷ்டிகளதும் பக்கபலத்துடன் இடைவிடாது இடம் பெறும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை உணவு விநியோக மோசடிக்கு மேலாகத் தூக்கிப்பிடித்து, இராணுவ ஆக்கிரமிப்புக்கு அத்திவாரம் போட்டு வருகின்றன.

(3) முதலாம் உலக யுத்தத்தில் சிதறுண்டு போன பால்கன் பிராந்தியத்தில் அமெரிக்க, ஜேர்மன், பிரித்தானிய, பிரான்ஸ் இத்தாலிய ஏகாதிபத்தியவாதிகள் ஒவ்வொரு இனவாத கும்பல்களுக்கு பக்கபலமாக நின்று கொண்டு யுத்த ஆதாளபாதாளத்தை தினமும் பெருக்கி வருகின்றன. சேர்பிய, மசிடோனிய, பொஸ்னிய இனவாதிகளையும் முஸ்லீம், கிறிஸ்தவ மதவாதிகளையும் சேர்ந்த கொம்பிரதோர் முதலாளித்துவக் கும்பல்களால் தூண்டிவிடப்பட்டுள்ள கொலைகார மோதுதல்கள் ஏகாதிபத்திய பிற்போக்குத் திட்டங்களுக்கே சேவை செய்கின்றது.

(4) ஸ்டாலினிஸ்டுக்களால் சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதன் பின்னர் ஆர்மேனியா, அஜர்பைஜான் மற்றும் பால்டிக் பிராந்தியத்தில் மட்டுமல்ல ருஷ்யாவிலும் உக்ரேனிலும் கிண்டிவிடப்பட்டுள்ள இன, மத பிளவுகளில் ஏகாதிபத்தியவாதிகள் கண் வைத்துக் கொண்டுள்ளனர். இந்த மக்கள் குழுக்கள் ஒவ்வொன்றையும் தமது காலனித்துவ திட்டத்துக்கு ஆட்படுத்துவதே அவர்களின் திட்டம்.

(5) தேசிய ஜனநாயக பிரச்சினைகள் நீண்ட காலத்துக்கு முன்னரே தீர்க்கப்பட்டு விட்டதாகக் கருதப்பட்ட முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் நாசிச, பாசிச இயக்கங்களுக்கு ஏகாதிபத்தியவாதிகள் மீண்டும் உயிரூட்டியுள்ளனர். இதன் மூலம் தொழிலாள வர்க்கத்தினைப் பிளவுபடுத்தவும் ஒரு பிரிவினரை மறு பிரிவினருக்கு எதிராகத் தூண்டிவிடுவதன் மூலம் இரத்தக்களரிகளைச் சிருஷ்டிக்கவும் இவர்கள் செயற்பட்டு வருகின்றார்கள். சிறப்பாக புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் அகதிகளாக குடிபெயர்ந்தவர்களுக்கும் எதிராக அவர்களின் நிறம், உருவங்களின் அடிப்படையில் வேறுபாடு காட்டப்படுகின்றது. அரசின் ஆதரவுடன் செயற்பட்டு வரும் பாசிச குண்டர்களைப் பாவித்து கொலைகாரத் தாக்குதல் தொடுப்பது இன்று ஆரம்பமாகியுள்ளது

(6) தென்கிழக்கு ஆசியாவில்—கம்போடியாவில் ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானப் படை எனப்படுவதை இறக்குவதன் மூலம் முதலாளித்துவ சிஹனூக்களதும், கேமர் றவுஜ் அமைப்பினதும் ஆத்திரமூட்டல்களைப் பயன்படுத்தி ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கான நிலைமை சிருஷ்டிக்கப்பட்டு வருகின்றது,

(7) இந்நிலையிலேயே இலங்கையிலும், இந்தியத் துணைக்கண்டத்திலும் பாசிச—இராணுவ பயங்கரம் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் உலக ஏகாதிபத்தியத்தின் யுத்த, காலனித்துவ திட்டங்களுடன் நெருக்கமாகப் பின்னிப் பிணைக்கப்பட்ட முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவப் பகுதியினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் எதிர்ப்புரட்சித் திட்டங்களாகும்.

இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ். சிவசேனை, போன்ற பாசிச குண்டர்கள் பாரதீய ஜனதா கட்சியின் தலைமையில் கூடி, முஸ்லீம் மதத்தவருக்கு எதிரான கொலைகார இயக்கத்தினை கட்டவிழ்த்தன. இத்திட்டம் பல்வேறு குழுக்களை ஒன்றுடன் ஒன்று மோதவைப்பதையும் இந்தியாவைத் துண்டு துண்டாக பகிர்ந்து ஏகாதிபத்தியவாதிகளிடம் ஒப்படைப்பதையும் இலக்காகக் கொண்டது. மறுபுறத்தில் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் இப்பிற்போக்கு வேலைத்திட்டத்துக்கு துணை நின்று வருகின்றார்கள். 1947ல் இந்தியாவை துண்டாடியமையையும் அதனுடன் இணைந்த இரத்தக் களரியையும் தாண்டும் விதத்திலான இரத்தக்களரிக்கு இவை தயார் செய்கின்றன. இந்திய காங்கிரஸ் ஆட்சியின் மரண நெருக்கடியின் மத்தியில் கொம்பிரதோர் முதலாளித்துவ பிரிவினரின் மாற்று வேலைத் திட்டம் இந்த இலட்சணத்திலேயே அமைந்துள்ளது.

தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிரான இனவாத யுத்தத்தினை மேலும் மேலும் உக்கிரமாக்கியதன் மூலம் நாட்டின் எந்தவொரு மாகாணத்திலும் சிங்கள—தமிழ் தேசிய இனங்களின் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்கள் ஒன்றாகச் ஜீவிக்க முடியாத நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது. வட-கீழ் மாகாண தமிழ் மக்கள் முப்படைகளால் முற்றுகையிடப்பட்டு பட்டினியின் பலிகடாக்களாக்கப்பட்டுள்ளனர். தமிழ் பயங்கரவாதிகள் தென் மாகாணங்களுக்கு ஊடுருவும் பீதியை இடைவிடாது தூண்டுவதன் மூலம் முழு நாட்டையும் இராணுவ—பாசிச ஆட்சிக்குள்ளாக்கும் வேலையை பிரேமதாச ஆட்சி உக்கிரம் அடையச் செய்துள்ளது,

## ஏகாதிபத்திய அமைப்பின் முரண்பாடுகள்

இச்சகல நாசகார நடவடிக்கைகளதும் பின்னணியாக உலக ஏகாதிபத்திய அமைப்பின் தீர்வுகாண முடியாத முரண்பாடுகள் விளங்குகின்றன. மத்தியமயமாக்கப்பட்ட உலக வர்த்தகச் சந்தையும், உலகளாவிய உற்பத்தி முறையும் தேசிய அரச அமைப்புடன் இடைவிடாமல் மோதிக் கொண்டுள்ளன. இரண்டு உலக யுத்தங்கள் மூலம் உலகத்தினை பங்கிட்டுக் கொள்ளவும், திரும்பவும் பங்கிடவும் ஏகாதிபத்தியச் சக்திகளைத் தள்ளிய இம் முரண்பாடுகள் திரும்பவும் உலக அரசியல் அரங்கினைப் பிடித்துக் கொண்டுள்ளன.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னைய காலத்தில் உலக ஏகாதிபத்திய அமைப்பின் அச்சாணியாக விளங்கிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொருளாதார பலம் வீழ்ச்சி கண்டுள்ளது. இந்நிலையில் அது தனது பிரமாண்டமான இராணுவ பலத்தினைப் பாவித்து ஏனைய ஏகாதிபத்தியவாதிகளைத் தூண்டி தனது உலக ஆளுமையை நிலைநாட்டிக் கொள்ள முயன்று வருகின்றது. வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்களின் பேரில் இராணுவமயமாக்கத்துக்கு தடைவிதிக்கப்பட்டிருந்த ஜேர்மனியும், ஜப்பானும் உலகில் அமெரிக்காவின் பாகத்துக்கு எதிராக தமது வர்த்தகம், சுரண்டல் பாகத்தின் பேரில் போர் தொடுக்கும் பொருட்டு இப்போது இராணுவமயமாக்கத்தில் ஈடுபட்டுள்ளன. இலாபகரமான உழைப்பையும், இயற்கை வளங்களையும் கொள்ளையடிக்கும் பொருட்டு பின்தங்கிய நாடுகளைத் தம் பிடிக்குள் கொணர்வது இவற்றுக்கு அவசியம். உலகத்தை மீண்டும் கூறுபோடும் இந்த யுத்த வேலைத் திட்டத்துக்கு வெளியே நின்று கொண்டிருக்கும் நோக்கம் சீரழிந்துபோன ஏகாதிபத்திய வாதிகளுக்கும் இல்லை.

பிரித்தானியாவும், பிரான்சும் தமது பழைய காலனிகளான இந்தியத் துணைக் கண்டத்தினையும் தென்கிழக்கு ஆசியாவையும் ஆக்கிரமிப்புத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டுள்ளனர். ஜேர்மன் சான்சலர் ஹெல்மட் கோல சமீபத்திய இந்திய விஜயத்தின்போது தமது முக்கிய இலக்கு கிழக்கு ஐரோப்பாவும் பழைய சோவியத் யூனியனின் பிராந்தியமுமே என வெளிப்படையாகக் குறிப்பிட்டார். யப்பான் கிழக்கு சோவியத் உட்பட்ட தூரகிழக்கினை தமது பிடிக்குள் கொணர முயல்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஐரோப்பாவையும் யப்பானையும் காலனியாக்குவது உட்பட—முழு உலகையுமே தமது ஆளுமைக்குள் கொணரும் திட்டத்தினைக் கொண்டுள்ளனர். இது முழு உலகையும் அணுவாயுத யுத்தத்துள் தள்ளுவதை விட வேறென்ன?

மனித இனத்தினையும், பன்னெடுங்காலமாகக் கட்டியெழுப்பப்பட்ட மனித நாகரீகத்தின் முன்னேற்றங்களையும் தேசிய அரசுகளை அடிப்படையாகக் கொண்டு அழிவைச் சிருஷ்டிக்கும் ஏகாதிபத்தியத்தினைத் துடைத்துக் கட்டுவதன் மூலமே பேண முடியும்.

தேசிய அரசுகளை துடைத்துக் கட்டி உலகப் பொருளாதாரத்தினையும் உற்பத்தியினையும் சோசலிசத்தின் அடிப்படையில் மறுசீரமைக்க வேண்டும். உலக ரீதியில் தொழிலாளவர்க்கம்முகம் கொடுத்துள்ள வரலாற்றுப் பணி இதுவே. அனைத்து நாடுகளிலும் தொழிலாளி வர்க்கத்தினை அனைத்துலகவாதப் புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்டுவதன் மூலம் மட்டுமே இதனைச் சாத்தியமாக்க முடியும். இப்பணி சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினையும் அதன் கிளைகளையும் கட்டியெழுப்புவதன்மூலமே நிறைவேற்றப்படும்.

இந்நிலையில் தேசியவாதத்தினை அடிப்படையாகக் கொண்ட சகல வேலைத்திட்டங்களும் அமைப்புக்களும் படு பிற்போக்கானவையாக மாறியுள்ளன. இதன் உச்சக்கட்டமாக 'தனி நாட்டில் சோசலிசம்' வேலைத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட ஸ்டாலினிச ஆட்சி விளங்கியது. இந்த ஸ்டாலினிச அதிகாரத்துவத்தில் இருந்து தோன்றிய கொம்பிரதோர் கும்பல் சோவியத் யூனியனை கலைத்துள்ளது. கிழக்கு ஐரோப்பா, சீனா மற்றும் நாடுகளில் இது கடைப்பிடிக்கும் முதலாளித்துவப் புனருத்தாரண வேலைத்திட்டங்கள் இதனை நன்கு ருசுப்படுத்துகின்றது. பப்லோவாதிகள், தேசியவாத சந்தர்ப்பவாதிகள், தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் பற்றிய சீரழிவுகள் இதற்கு ஒன்றும் குறைந்தவை அல்ல. இவர்களைத் தலைமையில் கொண்ட தொழிற்சங்கங்கள் உள்ளடங்கிய சகல வர்க்க அமைப்புக்களும் இன்று ஏகாதிபத்திய யுத்தத்துடனும் காலனித்துவத்துடனும், இன—மத மோதுதல்களுடனும் பிணைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் சமசமாஜ—கம்யூனிஸ்—நவசமசமாஜ—இ.தொ.கா முதலிய அரசியல் கட்சிகள் மட்டுமன்றி ஏனைய தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் தமிழ் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாகக் கடைப்பிடிக்கும் முதலாளித்துவ இனவாத நிலைப்பாடு இதனை நன்கு துலாம்பரமாக்கியுள்ளது. 1964ம் ஆண்டின் மக்கள் முன்னணி காட்டிக் கொடுப்பின் மூலமும் 1970—77 கூட்டரசாங்கத்தின் மூலமும் இத்தலைவர்கள் இனவாத யுத்தத்தின் எடுபிடிகளாக மாறினர். தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இனவாத யுத்தத்துக்கு மட்டுமன்றி தமிழ் தேசிய இனத்தின் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களிடையே சோசலிசப் புரட்சி பற்றியும், அதன் மூலம் தமது தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாகவும் நிலவிய நம்பிக்கைகளை நாசமாக்கு

(16ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



# உக்ரேனில் ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் வரலாறு, அரசியல் கருத்தரங்கு



கருத்தரங்கில் டேவிட் நோர்த் பேசுகின்றார்.

உக்ரேனியன் நகரமான கியூவில் நான்காம் அகிலத்தின் வரலாறு, முன்நோக்கு பற்றிய ஒரு நான்கு நாள் கருத்தரங்கு அனைத்துலகக் குழுவினால் நடாத்தப்பட்டது' பெப்ரவரி 25 – 28ம் திகதிகளில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் உக்ரேன், முன்னைய சோவியத் யூனியனின் பல்வேறு பாகங்களில் இருந்தும் பேராளர்கள் கலந்துகொண்டதோடு அவர்கள் அனைத்துலகக் குழுவின் செயலாளர் பீட்டர் சுவார்ட்ஸ், வேர்க்கஸ் லீக் தேசியச் செயலாளர் டேவிட் நோர்த்தின் விரிவுரைகளைச் செவிமடுத்தனர்.

இந்தக் கருத்தரங்குக்கான ஒழுங்குகளை அனைத்துலகக் குழுவுடன் அரசியல் ஐக்கியம் கொண்ட கியூவைச் சேர்ந்த 'லெப்ட் பிளாட்வோம்' என்ற ஒரு ட்ரொட்ஸ்கிச குழுவின் அங்கத்தவர்கள் செய்திருந்தனர், கார்கோப், மொஸ்கோ போன்ற நகரங்களில் இருந்தும் உக்ரேனின் அனேக சிறிய நகரங்களில் இருந்தும் பேராளர்கள் வந்திருந்தனர். செரிபின்ஸ்கில் இருந்து இரண்டு நாட்கள் புகையிரதப் பயணம் செய்து இவ்விரிவுரைகளைக் கேட்க பேராளர்கள் வந்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

கருத்தரங்கின் முதல் இரு நாள் விரிவுரைகளும் டேவிட் நோர்த்தினால் நிகழ்த்தப்பட்டன. அவை ருஷ்யப் புரட்சியின் அனைத்துலக அடிப்படை, 1923ல் இடதுசாரி எதிர்க்கட்சி அமைக்கப்பட்டதில் இருந்து 1953ல் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஸ்தாபிதம் வரையிலான ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் வரலாற்று அபிவிருத்தியை உள்ளடக்கி இருந்தன. மூன்றாம் நாள் பீட்டர் சுவார்ட்ஸ், பப்லோ, மண்டேலின் திரிபுவாதக் கோட்பாடுகளுடன் தொடர்புபட்ட நானாவித சந்தர்ப்பவாதப் போக்குகளுக்கு எதிரான அனைத்துலகக் குழுவின் நீண்ட போராட்டத்தின் வரலாற்றினை மீளாய்வு செய்தார். அவர் பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் (WRP) சீரழிவின் அரசியல், கோட்பாட்டு பின்னணிக்கும் 1985 – 86ல் அது அனைத்துலகக் குழுவில் இருந்து கொள்கையற்ற விதத்தில் பிளவுபட்டதற்கும் கணிசமான கவனத்தினைச் செலவிட்டார்.

கருத்தரங்கின் இறுதிநாள் நோர்த் சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டியெழுப்ப அனைத்துலகக் குழு தொடுத்துவரும் போராட்டம் அடிப்படையாகக் கொண்டுள்ள அரசியல் முன்நோக்கினைத் தெளிவுபடுத்தினார். இக்கருத்தரங்குக்கான தயாரிப்புக்கள் 1986ல் நோர்த்தினால் எழுதப்பட்ட ட்ரொட்ஸ்கியின் மரணத்தின் பின்னரான நான்காம் அகிலத்தின் வரலாறான 'த ஹெறிரேஜ் வீ டிபென்ட்' (நாம் பேணும் மரபுரிமைகள்) என்ற நூலை ருஷ்ய மொழியில் மொழிபெயர்ப்பதையும் உள்ளடக்கி இருந்தது.

1982 – 1986க்கும் இடையே தொழிலாளர் புரட்சிக் கட்சி தலைவர்களின் சந்தர்ப்பவாதத்துக்கு எதிராக அனைத்துலகக் குழு நடாத்திய போராட்டத்துடன் தொடர்புடைய முக்கிய பத்திரங்களின் புதிய ருஷ்ய மொழிபெயர்ப்புக்கள் பேராளர்களுக்கு வழங்கப்பட்டன.

# பொஸ்னிய உள்நாட்டு யுத்தத்தில் அமெரிக்க இராணுவத் தலையீடு



குண்டு வீச்சிற்கு பலிகடாக்களாயுள்ள பொஸ்னியன் முஸ்லீம் பெண்

நீண்டுவரும் பொஸ்னிய உள்நாட்டு யுத்தத்தில் அமெரிக்க இராணுவத் தலையீடு பற்றிய விவாதங்கள் அமெரிக்க ஆளும்வர்க்கத்தினிடையே கசப்பான மோதுதல்களை உண்டுபண்ணியுள்ளது. இந்த தலையீடு சம்பந்தமாக என்ன கொள்கையைக் கடைப்பிடிப்பது? இதில் கிளின்டன் நிர்வாகமும் குடியரசு ஜனநாயகக் கட்சித் தலைமைகளும், இராணுவத் தலைமைப் பீடமும், முதலாளித்துவப் பத்திரிகைகளும் ஆழமாகப் பிளவுபட்டுப் போயுள்ளன.

குளிர்யுத்த பொறிமுறைகள் பொறிந்து போனதைத் தொடர்ந்து அமெரிக்க ஏகாதிபத்தியமும் ஐரோப்பாவில் உள்ள அதன் போட்டியாளர்களும் தமது நலன்களைக் காப்பதற்கான புதிய மூலோபாயத்தினை சிருஷ்டிப்பதில் ஈடுபட்டுள்ளனர். சேர்பியர் படைகளை நாசிகளுடன் ஒப்பிட்டும் பொஸ்னிய படுகொலைகளை நிறுத்தும் உடனடி இராணுவ நடவடிக்கையின் அவசியம் பற்றியும் செய்து வரும் பிரச்சாரத்தினால் எவரும் ஏமாந்து போகக் கூடாது. இவையெல்லாம் அமெரிக்க இராணுவத் தலையீட்டுக்குச் சாதகமான ஒரு பொதுஜன அபிப்பிராயத்தினை சிருஷ்டிக்க வேண்டுமென்றே செய்யப்படும் நடவடிக்கைகளின் ஒரு பாகம்.

சேர்பியப் படைகளின் 'இனச் சுத்திகரிப்பு' பிரச்சாரமும் குரோஷிய, முஸ்லீம் அரசாங்கப் படைகளும் பொஷ்னிய உள்நாட்டு யுத்தத்தில் பயங்கரமான அட்டூழியங்களை உண்டுபண்ணியுள்ளன். ஆனால் இவற்றை அறுபது இலட்சம் யூதர்கள் ஒழித்துக் கட்டப்பட்டதுடனும் ஹிட்லரின் மரண முகாம்களுடனும் ஒப்பிடுவது வரலாற்றை அடியோடு பொய்மைப்படுத்துவதாகும். ஏகாதிபத்தியவாதிகளின் தலையீடு பொஸ்னிய மனித துயரங்களுக்கு முடிவு கட்டாது. இன்று இராணுவத்தின் தலையீட்டுக்கு திட்டமிட்டுவரும் ஏகாதிபத்தியச் சக்திகளே முன்னைய யூகோசலாவியாவின் பிளவுக்கும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் இனவாதப் படுகொலைகளுக்கும் பொறுப்பாளிகள். பல்வேறு மாஜி ஸ்டாலினிச ஆட்சியாளர்கள் தேசியவாதக் கூப்பாடுகளில் இறங்குவதை இவர்கள் ஊக்குவித்ததோடு முதலாளித்துவப் புனருத்தாரணத்துக்கான அரசியல் மூடுதிரையையும் வழங்கினர்.

பொஸ்னியாவில் இராணுவத் தலையீட்டுக்கான கோரிக்கைகளின் உக்கிரத்துக்கான காரணங்களை அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் பொருளாதார, மூலோபாய நலன்களில் கண்டுகொள்ளலாம். கிழக்கு ஐரோப்பாவிலும் முன்னாள் சோவியத் யூனியனிலும் ஏகாதிபத்தியக் கொள்கையின் மையமாக பொஸ்னியா மாறியுள்ளது. ஸ்டாலினிசத்தின் வீழ்ச்சி இந்தப் பரந்த பிராந்தியத்தினை முதலாளித்துவப் புனருத்தாரணத்துக்கு திறந்துவிட்டுள்ளது. ஏகாதிபத்திய சக்திகள் பிராந்தியங்களையும் இயற்கை வளங்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் போட்டுக் கொள்ளும் போட்டியில் ஈடுபட்டுள்ளன. ஏகாதிபத்தியச் சக்திகளுக்கிடையேயான இந்த முரண்பட்ட நலன்கள் சேர்பிய படைகளுக்கு எதிரான ஒரு ஏகாதிபத்திய இராணுவத் தாக்குதலை ஒழுங்கு செய்வதற்கு குறுக்கே நின்று கொண்டுள்ளன. இன்றைய கட்டத்தில் இடம்பெறும் பிரமாண்டமான ஏகாதிபத்திய படைகளின் ஆக்கிரமிப்பு அமெரிக்காவின் கையை ஓங்கச் செய்துவிடும் என ஐரோப்பிய ஏகாதிபத்தியச் சக்திகள் அஞ்சுகின்றன. இது பொஸ்னியாவில் மட்டுமன்றி பால்கனிலும் முன்னைய சோவியத் யூனியனிலும் நிலைபெற்றுவிடலாம் என அவை அஞ்சுகின்றன. ஐரோப்பிய ஏகாதிபத்திய வல்லரசுகளிடையேயான போட்டியும் இல்லாமல் இல்லை. ஐரோப்பாக் கண்டத்தில் ஜேர்மனியின் ஆளுமை ஓங்கலாம் என அஞ்சும் பிரித்தானிய ஏகாதிபத்தியப் பேச்சாளர்கள்—முக்கியமாக மாஜி பிரதமர் மார்கிரட் தட்ச்சர்—போன்றவர்கள் அதற்கு சமபலமாக அமெரிக்கா நிற்பதையே விரும்புகின்றனர்.

தொழிலாள வர்க்கத்தின் எந்தவொரு சாராரும் பொஸ்னியாவிலான ஏகாதிபத்தியத்தின் இராணுவ நடவடிக்கையை எதிர்க்க வேண்டும், அது கிளின்டன் நிர்வாகத்தினால் ஒருதலைப்பட்சமாகச் செய்யப்பட்டாலும் சரி அல்லது ஐக்கிய நாடுகள் சபை நேட்டோ, ஐரோப்பிய சமூகத்தினால் கூட்டாக மேற்கொள்ளப்பட்டாலென்ன தொழிலாளி வர்க்கம் அதை எதிர்த்தே தீர வேண்டும். மோதிக்கொள்ளும் இனக் குழுக்களுக்கிடையேயான வெற்றியோ அல்லது தோல்வியோ எதையும் தீர்த்து வைக்கப் போவதில்லை. இன்று முன்னைய யூகோசலாவிய குடியரசின்சகல பிற்போக்குத் தேசியவாத ஆட்சியாளர்களுக்கும் எதிராக சேர்பிய, குரோஷிய, முஸ்லீம் தொழிலாள வர்க்கத்தினை சுயாதீனமாக அணிதிரட்டுவது அவசியமாகியுள்ளது.


வாசியுங்கள்!

**சோவியத் யூனியனின் முடிவு**

டேவிட் நோர்த்

விலை 25–00

கிடைக்குமிடம்-
90, 1வது
மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு - 10.

www.padippakam.com



# இந்தியாவிற்கு எதிரான அமெரிக்காவின் வர்த்தகத் தடை

கே. ரத்நாயக்க

அமெரிக்க ஏகாதிபத்திய கிளின்டன் அரசாங்கமும். பன்னாட்டு கம்பனிகளும் வங்கி நிறுவனங்களும் இந்திய பொருளாதாரத்தை கைப்பற்றும் புதிய மட்டத் தாக்குதலை ஆரம்பித்துள்ளன, இந்தியா, தாய்லாந்து. பிரேசில் என்பன அமெரிக்க புத்திஜீவி சொத்துரிமையை பேணாதிருப்பின், அந்நாடுகளுக்கு எதிராக அமெரிக்க வர்த்தக சட்டத்தின் 301ப் விதிப்பிரகாரம் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப் போவதாக கடந்த ஏப்ரல் 30ம் திகதி கிளின்டன் அரசாங்கம் அறிவித்தது.

கிளின்டன் அரசாங்கத்தின் வர்த்தகப் போரின் புதிய நடவடிக்கையை வெளியிட்ட அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி மைக்கல் கன்டோர், யப்பான், ஐரோப்பிய பொதுச்சந்தை, சீனா என்பவற்றை ''அநீதியான வர்த்தக விதி''யை கையாளும் நாடுகளாக நாமம் சூட்டியுள்ளார். 'அமெரிக்க புத்திஜீவி சொத்துரிமையை'' மனங்கொள்ளாத நாடுகளை எச்சரித்துள்ள அவர் ''தமது பங்களிப்பை செலுத்தத் தவறும் எந்தவொரு நாடும் விரைவில் கொடிய விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்'' என்று கூறியுள்ளார், மேலும் ஒருபடி மேலே சென்றுள்ள அமெரிக்கப் பிரதிநிதி: அந்நாட்டு ''புத்திஜீவி சொத்துரிமை தொடர்பாக'' கிளின்டன் அரசாங்கத்துக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாயும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய கண்டுபிடிப்புக்களின் உரிமை என்ற பெயரில் உற்பத்தி வர்த்தகம் என்பவற்றில் பல பிரிவுகளை பன்னாட்டுக் கம்பனிகளின் ஆதிக்கத்தின் கீழ் நிறுவிக் கொள்ளும் பொருட்டே இந்த புத்திஜீவி சொத்துரிமை பற்றிய சூத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த உரிமையை முன்வைத்தபடி ஆக்கிரமிப்பு ரீதியில் செயற்படும் அமெரிக்க பன்னாட்டுக் கம்பனிகளைப் பேணுவதற்கும் அதற்கேற்ப தயாரிக்கப்பட்ட கட், (G.A.T.T.) வர்த்தக சுங்சப் பொது உடன்படிக்கை) அமைப்பின் முன்னைநாள் தலைவரான ஆதர் டன்கல்லின் வரைவறிக்கையை திணிப்பதற்கும் கிளின்டன் அரசாங்கம் தற்போது முனைந்துள்ளது.

டன்கல் வரைவறிக்கையை நிராகரிக்கும்படி விவசாயிகள் மேற்கொண்டுவரும் பிரச்சாரத்தையிட்டு அமெரிக்க ஏகாதிபத்தியம் பீதியடைந்துள்ளது. விதை உற்பத்தியில் ஈடுபடும் முக்கிய அமெரிக்க பன்னாட்டு கம்பனிகளுள் ஒன்றான காகில்ஸ் நிறுவனம் இந்திய விவசாயிகளின் வெறுப்புக்கு உள்ளாகியுள்ளது. 'கடந்த டிசம்பர் மாதம் டன்கல்லின் வரைவறிக்கைக்கு எதிராகப் பிரச்சாரம் செய்த இந்திய விவசாயிகள் இக்கம்பனியின் இந்தியக் கிளையான 'காகில்ஸ் சீட்ஸ் இந்தியா'வின் பெங்களூர் தலைமைக் காரியாலயத்தை முற்றுகையிட்டனர்.

இந்த பன்னாட்டுக் கம்பனியின் நிறைவேற்று இயக்குனரான ஜோன்ஸ்டுவர் ஹாமில்டன் விவசாயிகளின் இப்பிரச்சாரத்தை புறக்கணித்துவிட்டு பெலாரி நகரில் 12லட்சம் டாலர் செலவில் விதை தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை நிறுவப் போவதாக



நரசிமயராவ்

மே 6ம் திகதி அறிவித்துள்ளார்,

''இந்தியாவின் நிஜ விவசாயிகளை பிரதிநிதித்துவம் செய்யாதவர்கள் என எமக்குப்படும் குழுக்களின் மிரட்டலையிட்டு நாம் பீதியுறத் தேவையில்லை'' என ஹாமில்டன் மிரட்டியுள்ளார்.

காகில்ஸ் சீட்ஸ் கம்பனியின் பங்குகளில் 51% பன்னாட்டுக் கம்பனிகளுக்கும் எஞ்சியவை இந்திய டெட்கோ கம்பனிக்கும் உரியவை இரு வாரங்களுள் மூடப்படா விட்டால் பெலாரி தொழிற்சாலையை விவசாயிகள் தாக்குவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த கம்பனித் தலைவர், தொழிற்சாலைக்கு மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாயும் முதலீடு நிறுத்தப்பட மாட்டாதெனவும் தெரிவித்தார். டன்கல்ஸ் வரைவறிக்கை பன்னாட்டுக் கம்பனியின் பத்திரமாகும் என்ற குற்றச் சாட்டை ஊர்ஜிதப் படுத்தும் வகையில் காகில்ஸ் இயக்குனர் கூறியதாவது:

''டன்கல் சிபார்சுகளின்படி இந்திய விவசாயிகளுக்கு எந்தவொரு மிரட்டலும் கிடையாது. பெரிதுபடுத்திக் காட்டப்படும் மிரட்டல், உண்மை நிலைமையை திரிபுபடுத்துகிறது, பன்னாட்டு கம்பனியை நாட்டிலிருந்தும் விரட்டியடிக்கும் முயற்சி இந்திய விவசாயிகளுக்கு நவீன தொழில் நுட்பத்தை இல்லாமல் செய்யும் முயற்சியாகும்''.

## பன்நாட்டுக் கம்பனிகளின் படையெடுப்பு

பன்னாட்டுக் கம்பனிகள் இந்தியாவிற்கு வருவது தொழில் நுட்ப அறிவை வாரி வழங்கும் கருணையினால் அல்ல, இதை விளங்கிக் கொள்ளாத எந்தவொரு தொழிலாளியோ ஒடுக்கப்பட்ட மக்களோ இல்லை. பன்னாட்டுக் கம்பனிக்காரர் இலாபச் சுரண்டலுக்கும் மூலவள கொள்ளையடிப்புக்குமே பின்தங்கிய நாடுகளுக்கு படையெடுக்கின்றனர். மேற்குறிப்பிட்ட அமெரிக்க பன்னாட்டு கம்பனியென்ற கழுகு இந்தியாவிற்குள் மற்றுமோர் துறையிலும் பாய்ச்சல் நடாத்தியுள்ளது. காகில்ஸ் தென்கிழக்காசிய கம்பனி குஜாராத் பிராந்திய சாட்சய்தா பேட்தீவினை குத்தகைக்கு எடுத்து, சோலார் உப்பளம் ஒன்றை அமைக்கும் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. கன்திலா துறைமுக அதிகார சபையிடம் இருந்து இத்தீவினைகுத்தகைக்கு எடுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்த சிறிய உப்பள உற்பத்தியாளர் வழக்குத் தொடுத்தனர். அச்சமயம் காகில்ஸ் கம்பனி தாம் மத்திய அரசாங்கத்திடமிருந்து இத்திட்டத்துக்கு அங்கீகாரம் பெற்றுள்ளதாக அறிவித்தது. கன்திலா துறைமுகம் வரை இக் கம்பனிக்கு மட்டுமென இறங்கு துறையொன்றும் கட்டியெழுப்பப்பட உள்ளது, இந்தத் தீவினை பன்னாட்டுக் கம்பனிக்கு கையளிப்பதால் சூழலுக்கு மட்டுமல்ல பாதுகாப்புக்கும் பங்கமேற்பட வழியுண்டென்பதை இதற்கெதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள குழுவினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதே சமயம் உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் ராவ் அரசாங்கத்தை கைக்குள் போட்டுக்கொண்டு தொழிலாளர் நாசமாக்கும் வேலைத் திட்டங்களை தயாரித்துள்ளன. உலக வங்கித் தலைவர் லெவ். டி. பிரெஸ்டனும் சர்வதேச நாணய நிதியின் முகாமைத்துவ இயக்குனரும் இந்திய முதலமைச்சர் மன்மோகன் சிங்குடன் இந்த வேலைத்திட்டங்கள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த வேலைத் திட்டங்கள் சமூக பாதுகாப்பு திட்டம் என்ற பெயரால் அமைக்கப்படுகின்றது. இதன் பொருட்டு உலக வங்கி 80 கோடி டாலர் கடன் வழங்கும். அது முக்கியமாக அரசாங்கத்துறை தனியார் மயமாக்கப் படுத்தல். அரசாங்கத் துறைக்கு மூடுவிழா மூலம் வேலையின்மைக்கு உள்ளாகும் தொழிலாளர்கள் கண்களில் மண் தூவும் தற்காலிக கொடுப்பனவுகளுக்கே செலவிடப்பட உள்ளது.

சில வாரங்களுக்கு முன் இது போன்ற வேலைத் திட்டத்தையே ரஷ்யா பினுள்ளும் செயற்படுத்த ஏகாதிபத்திய வாதிகள் தீர்மானித்தனர், தமது கொடிய சுரண்டல் வேலைத் திட்டத்துக்கு எதிராக தொழிலாள—ஒடுக்கப்படும் மக்கள் எழுச்சியுறுவதை இதன் மூலம் தற்காலிகமாகத் தடுக்கலாம் என்ற நப்பாசை பன்னாட்டுக் கம்பனிகளுக்கும் ஏகாதிபத்திய வங்கியாளருக்கும் இருந்து வருகின்றது. ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையில் உலக வர்த்தகச் சந்தையைப் பகிர்ந்து கொள்வதிலுள்ள இழுபறிகளையே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இந்தியாவிற்குள்ளான இந்த ஆக்கிரமிப்புத் தலையீடு காட்டுகின்றது. இரண்டாம் உலகப் போரின் பின் ஐம்பதாண்டுகளான பொருளாதாரப் பின்னடைவில் மூழ்கியுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகின் சகல பாகங்களிலும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ளத் துடிக்கின்றது.

## பாசிச சக்திகள் கட்டியெழுப்பப் படல்

காலனித்துவ சுரண்டலை ஊர்ஜிதம் செய்யும் வேலைத் திட்டங்களுக்கு எதிராக தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் எதிர்ப்பு அபிவிருத்தி கண்டுள்ள நிலையில், பாசிச பிற்போக்கு சக்திகளை கட்டியெழுப்பவும் இந்தியாவைத் துண்டாடவும் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகளின் ஆளும் வர்க்கம் பின்வாங்காது. தள்ளாடும் ராவ் அரசாங்கத்துடன். போட்டியிடும் பி.ஜே.பி. பாசிச சக்திகளை அணிதிரட்டி வருகின்றது, இது ஏகாதிபத்தியத்தின் பக்கம் திரும்பியுள்ள இந்தியாவின் பல்வேறு மாநில முதலாளித்வக் கும்பல்களுடன் கூடி, ஏகாதிபத்திய கம்பனி, வங்கிகளுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தத் துடிக்கின்றது. பல்வேறு ஏகாதிபத்திய முகாம்களுக்குள் நுளைந்து கொள்ளும் முதலாளித்துவக் கும்பல்களின் கணக்கீடுகள் இன்று பிரபல்யம் அடைந்துள்ளது.

1993 மே 3ம் திகதி இந்திய முதலாளி வர்க்க ஊதுகுழலான 'த இந்து' பத்திரிகை நாற்பது ஆண்டு கால இந்திய—யப்பான் தொடர்புகள் என்ற விசேட கட்டுரைத் தொடரை பிரசுரித்தது, இக் கட்டுரை சோவியத் யூனியனுடன் இந்திய ஆளும் வர்க்கம் தொடர்பு கொண்டிருந்த காலத்திலிருந்து யப்பானுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கைக்கும் ஆதரவு வழங்கவில்லை என்பது மட்டுமன்றி அணுவாயுத பலத்தை பாவிப்பது தொடர்பாக இந்தியாவுக்கு பாகுபாடு காட்டும் நடவடிக்கைக்கு யப்பான் சம்மதம் தெரிவிக்கவில்லை என்று குறிப்பிட்டு எழுதியது தற்செயலானதல்ல. யப்பானின் வெளிநாட்டு மூலதனத்துடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் செய்துள்ள மூலதனம் ஒரு சிறு துளியாகும். 1990ல் 5 கோடி ரூபாவாக இருந்த இம் மூலதனம் 1991ல் 50கோடியாகவும் 1992ல் 610 கோடியாயும் அதிகரித்துள்ளது. யப்பான் மூலதனத்தை வரவழைக்க வேண்டின் சுரண்டல் நிபந்தனைகளை ஆழமாக்க வேண்டுமென அந்த கட்டுரை குறிப்பிடுகின்றது. யப்பான் ஏகாதிபத்திய வாதிகள் இந்தியாவில் சுரண்டலில் ஈடுபடுவதென்பது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தனி ஏகபோக உரிமைக்கு இடமளிக்காத ஒன்றாகும்.

இந்தியாவில் ஆகட்டும் எந்தவொரு அரைக் காலனித்துவ நாட்டில் ஆகட்டும், பன்னாட்டு கம்பனிகள் பாய்ச்சல் நடத்துவது நவீன தொழில் நுட்பத்தை வாரி வழங்க அல்ல. அவ்வாறே இந்த ஏகாதிபத்திய சுரண்டலாளர் மூலம் இந்நாடுகளின் பின்தங்கிய நிலைமையை வெற்றி கொள்ளவும் முடியாது. முதலாளித்துவம் உலகரீதியான அமைப்பாக மாற்றமடைந்துள்ள நிலைமையில் பின்தங்கிய நாடுகளினுள் உற்பத்திச் சக்திகளின் நவீனமயம் நுழைந்து கொண்டது. அந்நாடு ஏகாதிபத்தியம் இந்நாடுகளினுள் பின்தங்கிய நிலைமையை கொண்டிருப்பது சுரண்டலுக்கான வாய்ப்பாகவும் கருதியது. நவீன தொழில் நுட்ப அபிவிருத்திக்குள் ஏகாதிபத்தியம் உழைப்பையும் மூலப்பொருட்களையும் சுரண்டித்தின்னும் பாகங்கள் அடிமை முகாம்கள், யுத்த, நிலையங்களாக அரைகாலனித்துவ நாடுகளை மாற்றுவதில் மீண்டும் இறங்கியுள்ளனர். மத, தேசிய வாதங்களை தூண்டிவிட்டு தொழிலாள—ஒடுக்கப்பட்ட மக்களை பிளவுபடுத்தும் நச்சு ஆயுதமாக ஏகாதிபத்தியம் இவற்றைப் பயன்படுத்தி வருகின்றது.

## பிற்போக்கை வெற்றி கொள்வது எப்படி?

ஏகாதிபத்தியத்தை துடைத்து வீசும் உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாகவே இந்நாடுகளில் பிற்போக்கினை வெற்றி கொள்ள முடியும், பன்னாட்டுக் கம்பனிகளின் கொடிய சுரண்டலுக்கான யுத்தத்தையும் காலனித்துவ தயாரிப்பையும் முன்வைத்தபடி ஏகாதிபத்தியம் பாய்ந்து வரும் இவ்வேளையில், இந்திய தொழிலாளர் ஏகாதிபத்திய நாடுகளின் தொழிலாளருடன் ஒரே உலக மூலோபாய திட்டத்தில் இணைந்து போராட வேண்டிய தேவை மிகத் தீர்க்கமாக இன்று ஏற்பட்டுள்ளது, இந்தியாவிலும் ஏனைய சகல அரைக்காலனித்துவ நாடுகளிலும் பிற்போக்கினை வெற்றி கொள்வதும், புதிய நவீன தொழில நுட்ப விஞ்ஞான தேட்டங்களை வெற்றிகரமாக நிலை நாட்டுவதும் உலக ரீதியில் உற்பத்தி அமைப்பு சோசலிச அமைப்பாகி விடுவதால் மட்டுமே சாத்தியமாகும். தொழில் நுட்பத்தினால் ஏற்பட்ட சகல அபிவிருத்திகளும் இதற்கான நிலைமையை சிருஷ்டித்துள்ளது.

(16ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



## யெல்ட்சினின் சர்வாதிகார...

(12 ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் நாட்களிலும் கிழமைகளிலும் இந்த நெருக்கடி என்னதான் திருப்பங்களை எடுத்தபோதிலும் இதன் பொதுத் திசை தெளிவானது: ருஷ்யாவினுள் இருந்து வரும் ஏகாதிபத்தியமும் அதன் ஏஜன்சிகளும் தொழிலாளி வர்க்கத்துடனான ஒரு இரத்தம் தோய்ந்த மோதுதலுக்கான களத்தினைத் தயார் செய்து கொண்டுள்ளன. இப்பணிக்கு யெல்ட்சின் பற்றாக்குறையானவராக நிரூபிக்கப்படும் பட்சத்தில் ஏகாதிபத்தியம் ஒரு பொருத்தமான பதிலீட்டைத் — உப ஜனாதிபதி ருஷ்ட்ஸ்கி வடிவில், ஆயுதப் படைகளின் பேரவாக் கொண்ட ஒரு தளபதி அல்லது கேர்ணல் வடிவில் அல்லது ருஷ்யன் கஸ்புலட்டோவில் தேடிக் கொள்ளும். யெல்ட்சினுடனான அவர்களின் இன்றைய மோதுதல்கள் எவ்வளவுதான் கசப்பானதாக இருந்தபோதிலும் கஸ்புலட்டோவும் அவரின் சக பிரதிநிதிகளும் சகல முக்கிய விவகாரங்களிலும் அதே பிற்போக்கு முதலாளித்துவச் சார்பு மனப்பாங்கினைக் கொண்டுள்ளதோடு மட்டுமன்றி நின்று பிடிக்கக் கூடிய எந்தவிதமான பதிலீடும் இல்லாதுள்ளனர். யெல்ட்சினுக்கு மேலாக அவர்கள் ஆதிக்கத்தினை நிலைநாட்டிக் கொள்ளினும் கூட கஸ்புலட்டோவும் அவரின் காங்கிரஸ் மக்கள் பிரதிநிதிகளும் இன்று தாம் கண்டனம் செய்து கொண்டுள்ள அதே வேலைத்திட்டத்தினையே உடனடியாகவே அமுல் செய்வர். பழைய ஸ்டாலினிச 'கைத்தொழில் கப்டன்களின்' நடிப்புக்களும் ஆர்வங்களும் என்னவாக இருந்த போதிலும் அவர்கள் இறுதி ஆய்வுகளில் உலக ஏகாதிபத்தியத்தின் கொம்பிரதோர் கைக்கூலிகளைவிட வேறு எந்தவொரு பாத்திரத்தினையும் வகிக்க முடியாது.

அது ருஷ்யத் தொழிலாளி வர்க்கத்துடனான மோதுதலுக்கான ஒரு தயாரிப்பு என்பதில் எதுவிதமான சந்தேகமும் கிடையாது. ஆனால் இந்த மோதுதலின் விளைவுகள் பெருமளவில் ஏகாதிபத்தியத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணிகளில் தங்கியுள்ளன. இதில் மிக முக்கியமானது, ருஷ்யாவிலும், முன்னைய சோவியத் யூனியனிலும் தொழிலாள வர்க்கத்தின் அரசியல் நனவின் நிலையான வளர்ச்சியாகும்.

கடந்த எட்டு ஆண்டுகளில் — 1985 மார்ச்சில் கொர்பச்சேவ் ஆட்சிக்கு வந்ததில் இருந்து — முதலாளித்துவப் புனருத்தாரண வேலைத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்ததில் இருந்து சோவியத் தொழிலாளி வர்க்கம் அதிர்ச்சியும் துயரமும் கொண்ட ஒரு தொகை அரசியல் அனுபவங்களைத் தாண்டிச் சென்றுள்ளது. பல தசாப்த கால அரசியல் ஒடுக்குமுறை காரணமாக அது சோவியத் சமுதாயத்தின் நெருக்கடிக்கு தனது சொந்த அரசியல் பிரதிபலிப்பினைக் காட்டிக் கொள்ள முடியாதிருந்தது. ஸ்டாலினிச அதிகாரத்துவம் தொடர்பான அதன் ஆழமானதும் ஆனால் அரசியல் ரீதியில் வெளிப்பாடாகாது போன வெறுப்பும், அவ்வாறே 'சந்தைச் சீர்திருத்தம்' என்ற பேரிலான சர்வரோக நிவாரணி சம்பந்தமாக அவர்களுக்கு இருந்து வந்த அப்பாவித்தனமான நப்பாசைகளும் முதலில் பெரெஸ்ரொய்காவின் சிடுமூஞ்சி அதிகாரத்துவ முதல்வர்களாலும், பின்னர் ஜனநாயக வாய்வீச்சுக்களாலும் சுரண்டிச் சூறையாடப்பட்டது. ஆனால் எட்டு ஆண்டு காலப் பேரழிவுகள் சோவியத் தொழிலாளர்களின் சிந்தனையில் தனது முத்திரையைப் பதித்துச் சென்றுள்ளது. யெல்ட்சினுக்கும் அவரின் எதிரிகளுக்கும் இடையேயான போராட்டம் ஒரு சிறியதும் கையாலாகாத 'அரசியல் கும்பல்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்டது. இதில் எதுவும் மாஸ்கோவின் சுற்றாடலில் தன்னும் பாந்த அளவிலான ஆதரவினைத் திரட்ட முடியாமல் போனமையானது முழு ஆளும் அமைப்பில் இருந்தும் சோவியத் தொழிலாளி வர்க்கம் ஆழமாகப் பிளவுபட்டுக் கொண்டுள்ளமையைக் காட்டுகின்றது.

மேலும் முதலாளித்துவ புனருத்தாரணத்தின் தாக்கம் பற்றிய பரந்தளவிலான அறிகுறிகளுக்கு அருகருகே சோவியத் தொழிலாளர்களின் அதிகரித்த எண்ணிக்கையினரிடையே ஸ்டாலினிசம், முதலாளித்துவம் இரண்டுக்கும் ஒரு புரட்சிகர சோசலிச பதிலீட்டின் சாத்தியம் பற்றிய புதிய அக்கறையின் அறிகுறிகள் தென்படுகின்றன.

இந்த முக்கிய போக்குக்கான ஒரு உதாரணமாக நான்காம் அகிலத்தின் ஆதரவாளர்களால் ருஷ்யாவில் ஒரு பெரும் கைத்தொழில் நிலையத்தில் எழுதப்பட்ட ஒரு பத்திரத்தினை நாம் காட்டுகின்றோம். அது கூறுவதாவது: ''இன்றைய நிலைமையில் முதலாளித்துவப் புனருத்தாரண கொள்கையை முழுமனே நிராகரிப்பதே ஒரு சாதகமான வெளிப்பாடாக இருக்க முடியும். ஆனால் இந்தப் பதிலீடு ஒரேயொரு முன்நோக்குடன் மட்டுமே இறுக்கமாக இணைந்து கொண்டுள்ளது: உலகச் சோசலிசப் புரட்சி முன்நோக்கு இதிலிருந்து ஒரு உலகச் சோசலிச புரட்சி வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு சுயாதீனமான தொழிலாளர் கட்சியைச் சிருஷ்டிக்கும் இன்றைய முக்கிய பணி பெருக்கெடுக்கின்றது, அத்தகைய வேலைத்திட்டத்தினால் வழி நடாத்தப்படும் ஒரு கட்சியினாலேயே ருஷ்யத் தொழிலாளி வர்க்கத்தினை அணிதிரட்டவும் அதற்கு அவசியமான வர்க்க நனவினை ஊட்டவும் தனது சொந்தக் கரங்களுள் ஆட்சியைக் கைப்பற்றவும் முடியும், ருஷ்யாவில் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் எதிர்காலம் உலகின் ஏனைய பாகத்தில் உள்ள பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க நனவு மட்டத்திலும், உலக பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அபிவிருத்தி வேகத்திலும் முழுமையாகத் தங்கியுள்ளது.''

இந்தப் பிரகடனத்தில் வெளிப்பட்டுள்ள உணர்வுகள் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கருத்துக்களுடன் முழுமனே ஒத்துப் போகின்றன.

## தாய்லாந்து...

(7 ம் பக்கத் தொடர்ச்சி)

மான தொழிலாளி வர்க்கத்தின் பெருக்கம் அவுஸ்திரேலியா, அமெரிக்கா, ஐரோப்பா பூராவும் உள்ள தொழிலாளி வர்க்கத்துக்கு ஒரு சக்திவாய்ந்த கூட்டினை உருவாக்கியுள்ளது.

அனைத்துலக தொழிலாளி வர்க்கத்தின் ஒருங்கிணைவானது தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்களை அணிதிரட்டவும் வெற்றிக்கு இட்டுச் செல்லவும் அவசியமான ஒரு உலகக் கட்சியின் அவசியத்தினை வேண்டி நிற்கிறது. அக்கட்சி சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான — அனைத்துலகக் குழுவின் தலைமையிலான — நான்காம் அகிலமே. அதனாலேயே இலாப முறையை ஒழித்து, பொருளாதார வாழ்வினை தொழிலாள வர்க்கத்தின் தேவைகளுக்குச் சேவை புரியும் விதத்தில் ஒரு உலகளாவிய ரீதியில் மறுசீரமைக்க முடியும்.

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மேதினச் செய்..

(13ம் பக்கத் தொடர்ச்சி)

வதில் சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ.தொ.கா. பிற்போக்கு அதிகாரத்துவங்களின் காட்டிக் கொடுப்பு பங்களிப்புச் செய்தது.

இதன் தீர்க்கமான பெறுபேறாக தமிழ் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ குழுக்களின் பிரிவினை, இனவாத ஆளுமைக்கு தமிழ் மக்கள் ஆட்படும் நிலையேற்பட்டது. சிங்கள — தமிழ் தொழிலாளர்களின் அனைத்துலகவாத ஐக்கியத்துக்கும் அதன் தலைமையில் அணிதிரண்டு இரு இனங்களதும் கிராமப்புற ஏழைகளும், இளைஞர்களும் இட்டு நிரப்பக் கூடியதாக விளங்கிய புரட்சிகரப் பணிக்கும் இதன் மூலம் இத்துரோகிகள் குழிபறித்தனர். இதன் பெறுபேறாக தெற்கில் யூஎன்பி ஆட்சியின் இராணுவ பயங்கரநிழல் படரவும் ஜே.வி.பி.யின் பாசிச இயக்கம் பரவவும் பாதை திறந்தனர். இனவாத யுத்தத்தினை உக்கிரமாக்கவும், இராணுவ நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவும் ஏகாதிபத்தியவாதிகளின் ஆலோசனையின் பேரில் 1987ல் இந்திய — இலங்கை உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட யூஎன்பி. விடுதலைப் புலிகளையும் மற்றும் தமிழ் அமைப்புக்களையும் இந்தக் கொலராவுக்கு ஆதரவாக அமர்த்தச் செயற்பட்டது. அவ்வாறே ஜே வீ பி, யின் பாசிச இயக்கத்தினை தமக்கு சாதகமாக அப்பட்டமாகப் பயன்படுத்தியது. ஜே வீ.பி.யின 'முதலில் தாயகம்' என்ற இனவாத சுலோகம் தொழிலாளி வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான கொலைகார பாசிச சுலோகமாக உயர்த்திப் பிடிக்கப்பட்டது. உலக ஏகாதிபத்தியத்தின் மரண ஓலத்துக்கு செவிமடுத்த இந்தச் சகல குட்டி முதலாளித்துவ அமைப்புக்களும் தொழிலாள...... ஒடுக்கப்படும் மக்களின் தேவைகளுக்கு எதிரான ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவத்தின் நாசகரமான அபிலாசைகளைப் பிரதிபலிக்கின்றன.

உலகம் பூராவும் தேசியவாத முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ இயக்கங்களின் தீர்க்கமான தோல்வி இதற்கு நல்ல சான்று, (பாலஸ்தீனத்தில்) பீ எல்.ஓ. (தென் ஆபிரிக்காவில்) ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இவைகானர, (மத்தீன் அமெரிக்காவில்) சன்டினிஸ்டா, (தென் கிழக்கு ஆசியாவில்) கேமர்றவுஜ் இயக்கங்களின் அனுபவங்களை கணக்கில் எடுப்பதன் மூலம் இதனைப் புரிந்து கொள்ள முடியும். ஆரம்பகாலம் தொட்டே இச்சகல இயக்கங்களும் தமது தேசியத்தின் ஜனநாயக அல்லது வாழ்க்கை அவசியங்களின் பேரிலேயே தோன்றி வந்தன. ஆனால் இன்று இவை ஏகாதிபத்தியவாதிகளின் தரகர்களாக நின்று வருகின்றன.

சந்தேகத்துக்கிடமான. பப் ... ஸைஸ்ட் மண்டேலின் கையாட்களான நவசமசமாஜ கட்சியினர் இந்த இயக்கங்களின் சார்பில் சேவை செய்யும் கொந்தராத்தினை ஏற்றுள்ளனர் நாம் எப்போதும் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வீ.பி.) இலக்குகளுக்குச் சார்பாக நின்று வந்துள்ளோம்' என ந ச ச க. தலைவர்கள் கூறிக் கொண்டுள்ளதோடு இச்சகல முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ அமைப்புக்களதும் பிற்போக்கு புள்ளிகளை அணிதிரட்டி, ஏகாதிபத்தியத்துக்கும் முதலாளி வர்க்கத்திற்கும் சேவை செய்யும் பாசிச இயக்கத்தின் உச்சியிலும் நின்று கொண்டுள்ளனர்.

வட — கிழ் மாகாண தமிழ் தேசிய இனத்தினர் இனவாத அரசின் இராணுவ இரும்புச் சப்பாத்தின கீழ நசுங்குண்டு போக மறுத்து வருகின்றனர். கிராமப்புற ஏழைகள் பன்னாட்டுக் கம்பனிகளின் சுரண்டலுக்குப் பலிகடாக்களாகுவதை நிராகரித்துள்ளனர். மத்தியதர வர்க்கத்தினரும், புத்திஜீவிகளும் யூஎன்பி ஆட்சியுடன் மேலும் மேலும் மோதிக் கொண்டுள்ளனர். தனியார்மயமாக்கத்தினை எதிர்த்துத் தோட்டத் தொழிலாளர்கள் திரும்பத் திரும்ப வேலை நிறுத்தப் போராட்டங்களில் குதித்து வருகின்றனர். பன்னாட்டுக் கம்பனிகளின் அடிமை உழைப்புச் சுரண்டலுக்கு எதிராக் சுதந்திர வர்த்தக வலய பெண் தொழிலாளர்கள் சுயமாக அணிதிரண்டு வருகின்றனர். அரசாங்க கூட்டுத்தாபனங்களைத் தனியார் துறையிடம் ஒப்படைப்பதற்கு எதிராக பரந்த எதிர்ப்பு வளர்ச்சி கண்டு வருகின்றது.

சிங்கள — தமிழ் தொழிலாளர்களைப் பிரித்து வைக்கும் இனவாதத்தினை தோளில் சுமந்து கொண்டுள்ள துரோக அதிகாரத்துவங்கள் மட்டுமன்றி விடுதலைப் புலிகள் உட்பட நானாவித தமிழ் குட்டி முதலாளித்துவ குழுக்களும் தொழிற்படுகின்றன. தோட்டத் தொழிலாளர்களை நகர்ப்புறத் தொழிலாளர்களில் இருந்து பிரித்து வைக்கத் தொண்டமான் தலைமை உட்பட அதிகாரத்துவங்களும் மலையக மக்கள் முன்னணி போன்ற இனவாத இயக்கங்களும் செயற்படுகின்றன.

இச்சகல பிரிவினைகளுக்கும் பிளவுகளுக்கும் எதிராக அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தினை ஒன்றிணைப்பதும் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினர், கிராமப்புற ஏழைகள், இளைஞர்கள், இல்லப் பெண்களை தொழிலாள வர்க்கத்தினைச் சூழ புரட்சிகர வேலைத் திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்டுவதும் தீர்க்கமானது. யூஎன்பியை வெளியேற்றி இலங்கை — தமிழ்ஈழம் சோசலிச குடியரசினை கட்டியெழுப்புவதும், இந்திய துணைக் கண்ட சோவியத் சோசலிச குடியரசினை ஸ்தாபிதம் செய்வதும் உலக சோசலிசத்தினை நிர்மாணிக்கும் முன்நோக்கின் அடிப்படையில் இடம்பெற வேண்டும். உலகத் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் இப்போராட்டத்துக்கு தலைமைதாங்க முன்னணியில் நின்று வரும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் சகல வகையறாவைச் சேர்ந்த தேசியவாத சந்தர்ப்பவாதிகளுக்கும் எதிராகப் போர்ப் பிரகடனம் செய்கின்றது.

★ புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்!

★ இந்திய ட்ரொட்ஸ்கிச சோசலிசத் தொழிலாளர் கழகத்துடன் சேர்ந்து இந்தியத் துணைக் கண்ட சோசலிச குடியரசினை நிறுவப் போராடுவோம்.!

★ உலக சோசலிசத்தினை நோக்கி முன்னேறுவோம்!

## இந்தியாவிற்கு...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய ஆளும் வர்க்கம் பன்னாட்டு சுதேசிய கம்பனிகளுடன் இணைந்து தொடுக்கும காலனித்துவ சுரண்டல் உலக சனத்தொகையின் ஆறில் ஒரு பங்கான 90 கோடிக்குச் சமமான மக்களைக் கொண்ட இந்தியாவின் தொழிலாள — ஒடுக்கப்பட்ட பொதுமக்களை கொடிய வறுமையினுள்ளும், மிலேச்சத்தனத்துள்ளும் தள்ளிவிடும், இந்திய சீ பி. ஐ. (எம்) கம்யூனிஸ் கட்சி இரண்டும் இந்த ஏகாதிபத்திய தயாரிப்பின் பங்காளர்களாக செயற்படுகின்றன. இந்திய துணைக் கண்டத்துள் தொழிலாள, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்தை முன்வைப்பது நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இந்தியாவின் சோசலிச தொழிலாளர் கழகமும் மட்டுமே.

கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90ல் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி. 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்